
# தியாகராஜ மான்மியம்
# Thiagaraja Manmiyam



921
தியாக
SL/PR

## சமர்ப்பணம்

எம்மை வளர்த்து ஆளாக்கி தம்முயிர்

போலவே எமக்குதவி எம்மிலும் இனியவராய்

உடனிருந்த எம்குல முதல்வர் நினைவாக

இம்மலர் சமர்ப்பணம்

# தியாகராஜ மான்மியம்

## இதில் அடங்கியன


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | Appreciation | 1 |
| 2. | Tribute | 2 |
| 3. | வாழ்க்கை வரலாறு | 3 |
| 4. | (1) தேவாரங்கள் (சம்பந்தர், அப்பர் சுந்தரர்) | 9 - 10 |
| | (2) திருவாசகம் | 11 |
| | (3) திருவிசைப்பா | 11 |
| | (4) திருப்பல்லாண்டு | 11 |
| | (5) திருப்புராணம் | 12 |
| | (6) திருமந்திரம் | 12 |
| | (7) திருப்புகழ் | 12 |
| 5. | விநாயகர் கவசம் | 13 |
| 6. | திருவெம்பாவை | 14 |
| 7. | திருப்பள்ளியெழுச்சி | 18 |
| 8. | அபிராமி அந்தாதி | 21 |
| 9. | அபிராமி அம்மைப் பதிகம் | 34 |
| 10. | கந்தரனுபூதி | 36 |
| 11. | கந்தர்கலிவெண்பா | 42 |
| 12. | கந்தரலங்காரம் | 49 |
| 13. | திருநள்ளாற்றுப்பதிகம் | 63 |
| 14. | திருநள்ளாற்றுப்பதிகம் | 64 |
| 15. | கந்த ஷஷ்டி கவசம் 1 | 66 |
| 16. | கந்த ஷஷ்டி கவசம் 2 | 68 |
| 17. | கந்த ஷஷ்டி கவசம் 3 | 74 |
| 18. | கந்த ஷஷ்டி கவசம் 4 | 78 |
| 19. | கந்த ஷஷ்டி கவசம் 5 | 80 |
| 20. | கந்த ஷஷ்டி கவசம் 6 | 84 |
| 21. | சண்முக கவசம் | 87 |
| 22. | திருக்கேதீச்சரப்பதிகம் | 91 |
| 23. | திருக்கேணேஸ்வரப்பதிகம் | 92 |
| 24. | திருக்கேதீச்சரப் பதிகம் | 93 |
| 25. | பறாளாய் முருகமூர்த்தி புகழ் | 95 |
| 26. | முத்துவிநாயகர் பஞ்சகம் | 98 |
| 27. | பொன்னம்பலவாணேசர் பஞ்சகம் | 99 |
| 28. | வரதராஜ விநாயகர் பஞ்சகம் | 100 |
| 29. | முத்துமாரி அம்மை பஞ்சகம் | 101 |
| 30. | சிவபுராணம் | 103 |
| 31. | மதுரை மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் | 106 |
| 32. | திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் | 110 |
| 33. | அன்பர் தியாராஜா | 160 |


## திதிவெண்பா

சீரார் கனகசபைச் செம்மல் திருமைந்தன்
பேரார் தியாகரா சப்பெயரோன் - பார்நீத்தே
அந்திவண்ணர் பாதம் அடைந்தான் ஸ்ரீ முகத்துக்
கந்தசட்டி நற்றிதியிற் காண்.

# Late Kanagasabai Thiyagarajah



| Born | Demise |
| --- | --- |
| 3 - 4 - 1930 | 19 - 11 - 1993 |

# APPRECIATION

Mr. Kanagasabai Thiagarajah was born on April 3, 1930, at Pannakam. He received his education at Victoria College, Chulipuram. He thereafter served as a teacher and worked in the Office of the Registrar of Companies in Kandy, Colombo and Jaffna. Having completed his Law studies he was admitted to the Bar and shortly thereafter joined our Firm as a Professional Assisstant. He was admitted as a Partner within one year of his association with the Firm and continued as such right up to the time he died on November 19, 1993.

Whilst at D. N. Thurairajah & Co. he took charge of its Associate Firm Messers. Ceylon Secretarial Services which was later incorporated under the Companies Ordinance and became its Director who was primarily responsible for the execution of all its work. He was also instrumental in incorporating hundreds of companies most of which he subsequently assissted in his capacity as Secretary.

The knowledge he has gained whilst in Government Service stood him in good stead in carrying out the duties of his office.

He supervised a large number of employees to whom he taught the basics of Company Law and Secretarial practice some of whom were later able to venture forth and commence their own private practice in areas in which he had taught them the fundamentals.

Although he was more often than not working under heavy preasure and tension brought about by the urgency of clients wanting to have their work completed, he was successful in keeping a clear head and never lost his patience either with the clients or with his subordinates. His experience and knowledge in the areas of work that he covered was immense and his assisstance was frequently sought by other colleagues who were confident that such advice was not only freely forthcoming but also generously and willingly rendered. He was most unassuming by nature.

Apart from the fact that he was a very kind and generous employer, it was well known that he was a very religious, humans and typical family man, who led an exemplary life of simplicilty and austerity. His needs were few and he often said of himself that because of his frugal requirements he was able to adequately provide for all those he left befind so that they would not be in need. It was also known that having provided for his immediate family he went further and made various arrangements for those in the outer circle of his family.

Although during the latter part of his life, his various illnesses told heavily upon his health, general well being and his ability to cope up with his work, he nevertheless fought with great courage and determination the several burdens heaped upon him and never lost the spirit to live and return to work. Perhaps had this determination not been there he may have taken better care of himself on his return from India after major surgery and lived in comfortable retirement. But also he would not be satisfied living an idle life and he did not take adequate care of himself despite medical advice.

Night throughout the long illnesses his wife and children stood by him and fought with him whilst bestowing on him the love, care and devotion of those who were dear and near to him.

Although he is no more, his services to D. N. Thurairajah & Co. and Ceylon Secretarial Services Limited both of which he loved as much as his own family is not to be forgotten and will always be remembered by all those who were associated with the two institutions so much as that his name will be synonymous with the two institutions for all times.

# TRIBUTE

*It was a great shock to all of us when we heard the sad news that "Thiaga" as he was affectionately called by those who knew him well had passed away in the early hours of 19th November 1993. He had undergone a successful Kidney transplant operation in India, but unfortunately certain complications set in during the latter part of his convalescence in Sri Lanka which led to his untimely demise.*

*Thiaga was a man from the deep North, his father being a farmer. He had his primary education at Victoria College, Chulipuram. He first started life as a teacher and thereafter entered Government Service and served in the Registrar of Companies in Kandy, Jaffna and Colombo where he was abe to master the Company Law and the Laws relating to Patents and Trade Marks.*

*Thiaga was always a persevering man and reached out to achieve his inner most ambition in life to be a Lawyer. He entered Law College and passed out as a Lawyer in 1970. He worked as a Professional Assistant at Julius & Creasy, Attorneys-at-Law and thereafter joined D.N.Thurairajah & Co Attorneys-at-Law and was made a Partner subsequently. He also got through his LLB(Ceylon).*

*Thiaga had a wide knowledge of the Company Law, and the Laws relating to Patents and Trade Marks and Ceylon Secretarial Services Ltd., the subsidiary firm of D.N. Thurairajah & Co. which handled the Company and Secretarial work, was left in charge of his capable hands.*

*Thiaga was devoted to his family. His wife and children will miss him most.. As a friendly and capable colleague who worked with us for a long time he will be difficult to forget or be replaced.*

***A. R. Mathew***
Attorney - at - Law, Justice of Peace
Partner, D. N. Thurairajah & Co
Director, Ceylon Secretarial Services Ltd
64, Keyzer Street,
Colombo-11



# தியாகராஜ மான்மியம்.

குவலய முழுதருள் குஞ்சர வதனனைத்
தவநெறி யாளர் தம்மனத் திருத்திச்
செந்தண்மை பூண்டிடு செந்தமிழ் யாழ்நகர்
அந்தமில் வளம்பெறு அறவழி சிறந்து
அரன்கழல் தொழுது அன்பு மலர்ந்து
வரம்பல வழங்கிடு வண்மை பொலிய
சிவன்பதம் போற்று சிந்தை நிறைவுறப்
பலவினை போக்கிடு பண்பது பேணி
அருமை நெறிதகு ஆகம நெறிசேர்
முருகன் ஆலயம் முறைப்படி அமைத்து
இட்டமாய் வழிபட இன்னருள் பெற்றிடு
செட்டிமார் குலமும் சிறந்திடு வதனால்
பத்திசெய் வார்திகழ் பறாளாய் நகரில்
சித்திகள் யாவும் சீரிதாய் வழங்கும்
முருக மூர்த்தியை முன்னுற வணங்கி
அருமை நலன்களை அன்புடன் பெற்று
மனமது நிறைவுறு மாண்பின் ராகிக்
கனக சபையெனும் கண்ணிய மிக்கோன்
நாகலிங் கமெனும் நற்குணச் செட்டியார்
ஆகம் மகிழ்ந்திடு அருமைச் செல்லம்மா
பண்டைத் தரிப்பெனும் பழம்பதி யதனில்
பண்டை வினையது பயனுறச் சேர்ந்திடக்
கனக சபையும் கடிமணஞ் செய்து
தனது உறவினர் தனிமகிழ் வடையக்
குலமுதல் முருகனைக் கும்பிட் டேத்தி
நலமது பெருகிடு நன்மனை வாழ்வில்
எண்தரு முப்பது ஏப்றில் மூன்றிற்
கண்பெறு பயனெனக் கனிப்புறு மகனாம்
தியாக ராஜென்னும் திகழ்குணக் குன்றை
நியாய துரந்தரர் நீதியும் பேணுவர்
சுற்றம் போற்றிடச் சுகம்பல நாடி
மற்றுவர் மனமும் மகிழ்வுற வாழ்வர்
நங்குலந் தழைத்திட நலமது போற்றுவர்
எங்களுக் கினயவர் எழில்மிகு முகத்தினர்
என்றுபெற் றோர்களும் ஏற்றுளம் மகிழ்ந்தனர்
ஐந்தாம் பராயம் ஆகிய போதினில்
செந்தமிழ் கற்றிடச் சேர்ந்தனர் மாதகல்
பாங்கினில் படித்துப் பக்குவ மாகவே
ஆங்கிலம் கற்றிடும் ஆசையும் பொங்கிட

| | | | |
|---|---|---|---|
| விக்ரோ | றியாவில் | விருப்புடன் | சேர்ந்து |
| அக்கா | லத்தில் | ஆர்வமாய்க் | கற்றனர் |
| சிவந்த | மேனியர் | சிரிக்கும் | முகத்தினர் |
| உவந்திடு | சிறப்புடன் | ஊக்கமும் | உந்திட |
| சீனியர் | வகுப்பிலும் | சீரிய | முறையில் |
| மானிலம் | போற்றுற | மதிப்புடன் | தேறினர் |
| காசினி | உவந்திடு | கடமை | செய்திட |
| ஆசிரி | யரென | அரும்பணி | ஆற்றினர். |
| உத்தியோ | கத்தையும் | உவந்தினி | தேற்றிடு |
| வித்தையில் | மிக்குறு | வித்தக | ரானதால் |
| கம்பனிப் | பதிவகம் | கொழும்பில் | அழைத்திட |
| நம்பியே | வந்ததில் | நயப்புடன் | சேர்ந்தனர் |
| மெய்கண்டான் | அச்சக | முறைமாம | னாராம் |
| தெய்வதம் | பராவியே | திகழ்ரத்ன | சபாபதி |
| தம்மரு | மகனைத் | தம்வீட்டில் | இருந்திட |
| அம்மான் | அழைத்திட | அகமகிழ் | தியாகரும் |
| மாமிம | னோன்மணி | மனது | முவந்திடத் |
| தாமிக | விரும்பித் | தனிமகிழ் | வுற்றனர் |
| இரத்தின | சபாபதி | இயற்றிடு | தவத்தால் |
| தரத்துயர் | மனோன்மணி | தன்மனை | யாளுடன் |
| இல்லற | வாழ்வில் | இனிது | மகிழ்ந்து |
| நல்லற | நெறிகளை | நயப்புடன் | நாடி |
| உறவினர் | போற்றிட | ஊரவர் | மெச்சிட |
| அறநெறி | பேணிடும் | அன்புடை | வாழ்வில் |
| கருத்தினுக் | கினிய | கமலா | தேவி |
| மெருகுறு | மகனாம் | மெய்கண்ட | நாதன் |
| இன்புறு | மகளாம் | இராஜேஸ் | வரியும் |
| நன்மக | ளெனவே | ஞானாம் | பிகையும் |
| குணக்குன் | றனைய | குமரகுரு | நாதனும் |
| இணக்கமாய்ப் | பழகும் | இயல்புகள் | பொருந்திய |
| அருணகிரி | நாதனும் | அருட்சோதி | நாதனும் |
| விருப்புடை | மகளென | விஜய | லக்ஷ்மியும் |
| பிள்ளைகள் | பிறந்திடப் | பெரிதுவந் | தேற்று |
| உள்ளுறு | முவகையில் | உயர்வுற | வளர்த்தனர் |
| கன்னிகைப் | பருவக் | கமலா | தேவியின் |
| நன்மண | வினைதன | நயந்து | மருமகன் |
| சோதரி | மைந்தன் | சோர்விலாத் | தியாகர் |
| ஆதரித் | தேற்றிட | அகத்தினில் | தேர்ந்தனர் |
| ஆண்டறு | பத்திரண் | டடுத்துறு | சனவரி |
| நீண்டபத் | தொன்பது | நிகழ்ந்திடு | தேதியில் |
| மங்கல | வதுவை | மறைமுறை | நிகழ்த்தி |
| இங்கித | மாமனார் | இரத்தின | சபாபதி |



| | | | |
|---|---|---|---|
| சுற்றம் | போற்றச் | சுகம்பல | நாடி |
| மற்றுற | முறைமைகள் | மலர்வுறச் | செய்தனர் |
| எழுபத் | தோராம் | எழிலாண் | டதனில் |
| பழுதிலாச் | சட்டமும் | பண்புறப் | படித்துச் |
| சட்டத் | தரணியாயச் | சட்டக் | கல்லூரியில் |
| திட்டமாய்த் | தேர்ந்து | திறமையும் | பெற்றனர் |
| அரசாங்க | சேவையில் | ஆறுதல் | பெற்று |
| விரகராய்க் | சட்ட | விளக்கம் | நிறைந்திட |
| சட்ட டி | நிறுவனம் | ஜூலியஸன் | கிரேசி |
| இட்டமாய் | ஏற்றிட | இறும்பூ | தெய்தினர் |
| தியாக | ராஜரைச் | சிறுவய | துமுதல் |
| நியாய | துரந்தரர் | நியமமாய் | ஆகென |
| அன்புடைப் | பெற்றோர் | ஆசிகள் | பெற்றதால் |
| தென்புடன் | தியாகரும் | தேர்ந்தனர் | நீதி |
| ஆலய | தரிசனம் | ஆண்டவன் | பக்தி |
| சாலவும் | நிறைந்த | சமய | வாழ்வினில் |
| பாரத | நாட்டினைப் | பலமுறை | நாடி |
| ஊரதில் | உற்றிடு | உயர்பல | தலங்கள் |
| பன்முறை | சென்று | பரிவுடன் | வணங்கி |
| நன்மன | துடனே | நன்மனை | யாளுமாய்ச் |
| சாற்றிடு | சமயச் | சடங்குகள் | யாவும் |
| ஏற்றிடு | விதிமுறை | இயற்றிய | சிறந்தவர் |
| கடமை | போற்றுவர் | கண்ணியம் | மிக்கவர் |
| திடமிகு | சிந்தையர் | தித்திக்கப் | பேசுவர் |
| தங்கை | மகேஸ்வரி | தெய்வதவ | பாலனை |
| தங்குல | முறைப்படி | தம்பதி | யாக்கினர் |
| திலீபன் | தெய்வசக்தி | சுதர்சனா | யாதவன் |
| விலைமதிப் | புறுநெறி | விளங்கிடு | யமுனா |
| மருமக்க | ளாகிட | மனமிக | மகிழ்ந்தனர் |
| சுப்பிர | மணியம் | சுகவாழ்வு | பெறவே |
| தப்பிலா | அபயாம் | பிகையம்மா | தனையே |
| தம்பியின் | மனைவியாய்த் | தகைமையே | டேற்று |
| அம்புவி | போற்றும் | அருமைச் | சுகந்தி |
| ஜெயகோபி | யுடனே | ஜெயகுமா | ராகியோர் |
| ஜெயந்தரு | பெறாமக்கள் | செகத்தினில் | தோற்றினர் |
| ஜெகதீஸ் | வரியும் | சிற்சபே | சன்தனை |
| அகமிக | மகிழ்ந்திட | அடைந்தனள் | நன்றே |
| திருவளர் | தியாகுவும் | திருந்திழை | கமலாவும் |
| அருத்தியோ | டிணைந்த | அன்புறு | வாழ்வில் |
| சிவசங்கர் | தோன்றிடச் | சிந்தை | மகிழ்ந்து |
| தவமுறை | யுதித்த | தலைமகன் | தன்னைச் |
| சிந்தை | நிறைந்த | சிறப்புகள் | சேர்த்து |

அந்தமி லழகி அருநிவா சினியுடன்
பூமகள் போலப் பொலிவுறச் செய்து
சேமமாய் வாழ்கெனச் சேமனிக் கனுப்பினர்
உருவினில் அழகிய உரோஹினி தன்னைத்
திருவினில் உயர்ந்த ஜெனார்த்தனன் ஏற்றிட
இருவரும் மகிழ்ந்து இலண்டன் ஏகினர்
இராம்சுந்தர் பெற்றோர் அருகினில் உற்றனர்.
கௌசல் யாவினைக் கருத்துடன் வளர்த்துப்
பௌவிய மாகவே பகீரதன் மணந்து
கன்னி யவளைக் கனடா வருகென
நன்மன துடனே நயந்து அனுப்பினர்
யாவரும் போற்றும் யசோதா தன்னைப்
பாவலர் ஒத்துறு பண்புகள் பொலிய
அருமை தெரிய ஆர்வம் பெருகப்
பெருமை பிறங்கப் பேணி வளர்த்தனர்
துரைராஜ் இணைவகத் துணைவ ராகியே
கரையிலாச் சட்டக் கவின்பெறு நிறுவனம்
பொற்புடன் போற்றிப் பொன்பொருள் சேர
அற்புத மாகவே அரும்பணி யாற்றினர்
வரத ராஜ விநாயக ரடியிணை
விரதம் ஏற்று விருப்புடன் போற்றுவர்
சிவனார் ஆலயம் சிந்தையி லிருந்ததித்
தவநெறி பேணித் தருமம் செய்பவர்
முத்து மாரியை முறைவலம் வந்து
நித்தம் வணங்கி நிம்மதி பெறுபவர்
முத்து விநாயகர் முந்துறு பணிகள்
சித்தம் மகிழ்வுறத் திருத்தமாய்ச் செய்பவர்
ஆறுபடை வீடுடை அறுமுகன் பணிந்து
மாறுபடு சூரனுரம் மாற்றுதிறன் துதிப்பர்
இலங்கைச் செயலகம் இலங்கு சேவையில்
நலங்கினர் பணிப்பாளர் நற்பணி ஏற்றனர்.
அறுபத்து மூன்று ஆண்டது வாக
உறுவினைப் பயனது உறுத்திய போது
இதம்பெற நினைந்து இந்தியா சென்று
பதம்பேறு வைத்தியம் பரிவுடன் செய்து
உடலது தேறி உவப்புடன் மீண்டு
திடமதாய் உள்ளம் திருப்தியும் அடைந்து
உற்றார் போற்ற ஊரவர் மெச்ச
மற்றுள சுற்றம் மனமது மகிழ
இறைபதி அனைத்தும் இன்புடன் சென்று
நறைமலர் கொண்டு நலம்பெறத் துதித்து
வீட்டுக்கு வந்து விருப்புடன் னணைந்து



காட்டிடு மன்பைக் கனிவுடன் ஏற்று
மனைவியும் மக்களும் மனதிற் களிப்புற
அனைவரும் இதயத்து ஆறுதல் பெற்றிடத்
திருவருள் நெறியில் தியாகரும் இனிது
அருமை மனைவி அரும்பெறல் மக்கள்
மனதினிற் சிறந்த மகிழ்ச்சி மலர்ந்திட
அனவர தமுமனத் தன்பு சொரிந்தனர்
தான தருமம் தவம்பல செய்தனர்
போன திசையெலாம் புண்ணியம் சேர்த்தனர்
ஆலயம் தொழுதனர் அறநெறி போற்றினர்
சாலவும் கருணையைச் சார்ந்தவர்க் கீந்தனர்
பார்வையில் இனியவர் பண்புடன் பழகுவர்
சீர்திகழ் ஸ்ரீமுகம் சேர்கந்த சஷ்டியில்
முருகன் கழலிணை முந்துற வணங்கி
இருநில வாழ்வை இயல்புடன் நீத்து
பக்தி செய்திடு பறாளை முருகனை
இக்கணம் சேருவேன் இன்பம் பெறவெனப்
புண்ணியப் பலனும் பூரணப் பொலிவுறக்
கண்ணிய மனைவி கமலா தேவியும்
கணவன் அருகில் கடமைகள் செய்திட
குணமது நிறைந்து குலவிடு பிள்ளைகள்
அன்புடை மாமி அருமை மனோன்மணி
தன்புடை சூழும் தன்மைத் துனர்கள்
நவலோ கத்தை நாடிச் சூழ்தரச்
சிவலோக வாழ்வு சிறந்ததென் றெண்ணித்
தியாக ராஜச் செம்மல் மனதில்
தியாகேசர் பாதம் திருந்துற நினைந்து
மனைவி கமலா மனமது சோர்ந்திட
தனையன் ராம்சுந்தர் தன்னினை விழந்திட
மகள் யசோதாவும் மயங்கி மறுகிட
தகவுடை மைத்துனர் தாங்கா தலறிட
மதிப்புறு மாமியும் மனதில் துயருற
விதிப்பயன் இதுவென விளக்கியே தியாகரும்
உய்யும் வகையை உலகம் அறியத்
தெய்வீக வாழ்வைத் தேடியே சென்றனர்
உற்றார் கேட்டு உணர்வு மயங்கினர்
மற்றோர் அறிந்து மனமது துடித்தனர்
மருமக்கள் துயரால் மறுகி அழுதனர்
உருகிநின் றூரவர் உளத்தில் ஏங்கினர்
நன்றே இறைபதம் நயந்தே தியாகரும்
சென்றே நலமாய்ச் சேர்ந்தன ராதலின்
என்றும் இறைபதம் ஏற்றிடு தியாகர்

நன்றே சிவன்கழல் நாளும் இருக்கெனத்
துதிப்ப துடனே துயரது மறந்து
விதிமுறை தியாகரும் வினையது முற்றிட
தங்கட னனைத்தும் தகுதியால் முடித்து
எங்களைப் பிரிந்து இறைபதம் அடைந்து
கந்தன் பறாளைக் கலியுக வரதன்
சிந்தையில் நித்தம் சிறந்திட நினைந்து
கந்த சஷ்டியில் காக்கும் விரதம்
இந்த உலகிற்கு ஏற்புடைத் தென்று
எல்லோர் மனதிலும் இருத்திடு கென்று
சொல்லால் உணர்த்திச் சோர்வது நீக்கி
நல்லித யத்துடன் நமைப்பிரிந் திட்டார்
நல்லவர் பலர்புகழ் நன்மைகள் செய்தார்
இன்னும் பலநாண் எம்முடன் இருக்க
நன்மனம் எமக்கு நமன்பிரித் திட்டான்
என்செய்வ தென்று ஏங்கிடும் எமக்குத்
தன்நினை வதனைத் தான்விதைத் திட்டார்
என்றும் மறவோம் எங்குல முதல்வரை
நன்றே இறைபதம் நாளும் இருந்திட
எப்பொழு தும்யாம் ஏத்துதும் இறைகழல்
முப்பொழு தும்யாம் முருகரை வழுத்துதும்
பற்றொடு வணங்கிடு பறாளை முருகன்
உற்றிடு துயரத்தை உடன்மாற் றிடுகென
எம்பிரான் அருளே எமக்குரித் தாகென
நம்பியே நாளும் நாமும் தொழுது
எங்குல முதல்வர் எமக்கென்றும் இனியர்
இங்கினி அவர்தாம் ஏற்றிடு கடமைகள்
எஞ்சலி லாதுயாம் ஏமுற நாடி
அஞ்சலி செய்து அன்பு செலுத்தி
அருமைத் தியாகர் ஆற்றிய சேவைகள்
பெருமை பெறவே பேணி வளர்த்து
எம்மனம் நிறைவுற ஏற்புறு பணிகள்
செம்மையிற் செய்து சிவன்கழல் தொழுது
என்றும் தியாகர் இறைபதத் திருந்து
நன்றெ வாழ்கென நாமும் துதிப்போம்
சென்றுதெய் வபதம் சேர்ந்து சுகித்து
மன்றுள் ஆடியின் மலர்ப்பதம் சார்ந்து
ஊழ்வினைப் பயனது உயர்பதம் தருகென
வாழ்நாள் முழுதும் வாழ்த்துதும் யாமே.

– சுபம் –



உ

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரங்கள்

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காயுடையசுடலைப்பொடிப்பூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனநாள்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

அங்கமும்வேதமுமோதுநாவரந்தணர்நாளுமடிபரவ
மங்குல்மதிதவழ்மாடவீதிமருகல்நிலாவியமைந்தசொல்லாய்
செங்கயலார்புனற்செல்வமல்குசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கங்குல்விளங்கெரியேந்தியாடுங்கணபதீச்சரங்காமுறவே.

உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரு
மண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே.

நன்றுடையானைத்தீயதிலானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமையொருபாகமுடையானைச்
சென்றடையாததிருவுடையானைச்சிராப்பள்ளிக்
குன்றுடையானைக்கூறவென்னுள்ளங்குளிரும்மே.

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரங்கள்

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவெனப்பொழுதுந்
தோற்றதென்வயிற்றினகம்படியேகுடரோடுதொடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைதிருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன்

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டாம்
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல்காண்பானடியனேன்வந்தவாறே

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்
## தேவாரங்கள்

பித்தாபிறைசூடிபெருமானேயருளாளா
வெத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுந்தவவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றனாருயிரதனைவவ்வினாய்க்குன்றன்வன்மைகண்டடியேன்
எந்தைநீயெனைநமன்றமர்நலியிலிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

வாழ்வதுமாயம்மிதுமண்ணாவதுதிண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பசிநோய்செய்தபறிதான்
றாழதறஞ்செய்ம்மின்றடங்கண்ணான்மலரோனுங்
கீழ்மேலுறநின்றான்றிருக்கேதாரமெனீரே.

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிகவாடி
யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே.



## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அவன் மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்துதோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போ யகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம் விளங்க
அன்னநடை மடவாளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப் பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையிற் தனிப்பெரும் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருமந்திரம்

மண்ணகத் தான்ஒக்கும் வானகத் தான்ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான் ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே.

## திருப்புகழ்

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினை யிலாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.



## விநாயக கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநாயகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள் பாலசந்திரனார் காக்க. (1)

கவின்வளரு மதரங்கச முகர்காக்க தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா சியைச்சிந்தி தார்த்தர் காக்க. (2)

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கநாதர் காக்கஅகட் டினைத்துலங்கே ரம்பர் காக்க. (3)

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க பிருட்டத்தைப் பாவநீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம் வியாளபூடணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருவைமங் களமூர்த்தி யுவந்து காக்க. (4)

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க விரு பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கப் பிரப்பரசா தனர்காக்க முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க விரல்பதும வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர் காக்க கிழக்கினிற்புத் தீசர் காக்க. (5)

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா புத்திரர் தென்னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணேசுரர் காக்க விக்கினவர்த் தனர்மேற் கென்னும்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன் னன்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி லீசநந் தனரே காக்க. (6)

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக் கதர்பூத முறவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்திறத்தால் வருந்துயரு முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா சாங்குசர்தாம் விரைந்து காக்க. (7)

மதிஞானந் தவந்தான மானமொளி புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க. (8)

வென்றிசீ விதங்கபிலர் காக்கரி யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவர்கா ளறிமின்கள் யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச் சிரதேக மாகி மன்னும். (9)

*விநாயகர் கவசம் முற்றிற்று.*

## திருவெம்பாவை

### திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த் தொலிபோய்
வீதிவாயக் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்

பாசம்பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்



மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கேபாங்காவோம்

அன்னவரே எங்கணவ ராவர் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்

பாதாளம் ஏழினுங் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையெலோ ரெம்பாவாய்

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்



காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
**கண்ணா** ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

**உங்**கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
**எங்கள்** பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
**எங்கை** உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
**இங்**கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்

**போற்**றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
**போற்**றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
**போற்**றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
**போற்**றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

## திருப்பள்ளியெழுச்சி

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்குழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே



அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லே பள்ளி எழுந்தருளாயே

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிபபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்து துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா

செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறாது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

புவனியிற் போய்ப்பிற வாமையினால் னால்நாம்
போக்குகின் றோம்அவ மே இந்தப்பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

திருச்சிற்றம்பலம்



தேவி வழிபாடு
அபிராமிப்பட்டர்

# அபிராமி அந்தாதி

## காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே. 1

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே. 2

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாத கருமநெஞ்சான்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே. 3

மனிதருந் தேவரு மயாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி பாதமென் சென்னியதே. 5

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமன் றன்பர மாகம பத்ததியே. 6

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. 7

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாண்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாளமலர்த் தாளென் கருத்தனவே. 8

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமுஞ் செங்கைச் சிலையு மம்பும்
முத்தன மூரலும் நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே.

நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ஒன்று மரும்பொருளே யருளே யுமையே யிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே. 10

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாண் மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தந் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணிய துன்புகழ் கற்றதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான் முன்செய்த
புண்ணியம் மேதன்னம் மேபுவி யேழையும் பூத்தவளே. 12

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்றும் மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே. 13

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே. 14



தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்தார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே யொளிரு மொளிக்கிடமேயெண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்களாகி விரிந்தவம்மே
அளியே னறிவள விற்கள வான ததிசயமே. 16

அதிசய மான வடிவுடை யாளர வித்தமெல்லாம்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான பதசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன்றோவாம பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத் திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியு முங்கள் திருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல் வரும் போது வெளிநிற்கவே. 18

வெளிநின்ற நின்றிரு மேனியைப் பார்த்தென் விழியு நெஞ்சும்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே. 19

உறைகின்ற நின்றிருக் கோயில்நின் கேள்வ ரொருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுதம்
நிறைகின்ற வெண்டிங்களோகஞ் சமோவென்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே. 20

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாளவருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. 21

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
அடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே. 22

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளேய னைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே அளியவென் கண்மணியே. 23

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே. 24

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கும்
அன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
என்னே யினியுன்னை யான்மறவா மல்நின் றேத்துவனே. 25

ஏத்து மடியவ ரீரேழு உலகினை யும்படைத்தும்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே. 26

உடைத்தனை வஞ்சப் பிறவையை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
அடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே. 27

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசும்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே. 28

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண் டாய் கொண்ட தல்ல–
நன்றே யுனக்கினி நானென் செயினும் நடுக்கடலுட் (–வென்கை
சென்றே விழினுங் கரையேற் றுகைநின் திருவுளமே
யொன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே. 30



உமையு முமையொரு பாகரு மேகவுருவில் வந்திங்(கு)
எமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
அமையு மமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. 31

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற்ப டவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்த மெல்லாங்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப னோடிவந்தே 33

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகந்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே. 34

திங்கட் பகவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே. 35

பொருளே பொருமுடிக் கும்போக மேயரும்போகஞ் செய்யு
மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்து வஞ்சத்(து)
இருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்கு முன்றன்
அருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே 36

கைக்கே யணிவது கன்னலும்பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே. 37

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே. 38

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கள்
மாறுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே 39

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சிற்
காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெணமன் றோமுன்செய் புண்ணியமே. 40

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தால்
நண்ணியிங் கேவந்து தம்மடி யார்க டுவிருக்கப்
பண்ணிநஞ் செந்நியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே. 42

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொல்
திரபுர சுந்தரி சிந்துர மேனிய ளைநெஞ்சிற்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
யெரிபுரை மேனி யறைவர்செம் பாகத் திருந்தவளே. 43

தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந்
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கை நன்றே பின்வெறுக்கையன்றே 45

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்த பொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே. 46



வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டுமெட் டாம லிரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ
குடரும் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே. 48

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே. 49

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரண மரணமக்கே. 50

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கண்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே 51

வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிரலை யாரம் பிறைமுடித்த
வையன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்கேளே. 52

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யப்பட்டும்
பென்னம் பெரிய முலையுமுத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில் வைத்துச்
தன்னந் தனியிருப்பார்க்கிது போலுந் தவமில்லையே. 53

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லைமை நெஞ்சி நினைகுவி ரேனித்த நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
சொல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங் குகின்ற
தன்னா ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல் விதன்னை
யுன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றிலையே. 55

ஒன்றாயரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்று நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவா
ரன்றா லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே. 56

ஐய னளந்தபடியிரு நாழிகொண் டண்டமெல்லா
முய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமா லையுங்கொண்டு சென்றுபொய்யு
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே. 57

அருணாம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்குந்
தருணாம் புயமுலைத் தையனல் லாடகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமுங் கராம்புயமுஞ்
சரணாம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேனொற்றை நீள்சிலையு
மஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே. 59

பாலினுஞ் சொல்லினி யாப்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வர்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே. 60

நாயே னையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய்நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
றாயே மலைமகளே செங்கண் மாறிருத் தங்கைச்சியே. 61

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகநதச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே. 62



தேறும் படிசில வேதுவங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றிற் கொட்டுந் தறிகுறிக்குச் சமய
மாறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழஞ்சியன்றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்பர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கந்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. 65

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே. 66

தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் றோற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில்லை யாதவர் வண்மைகுலங்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 67

பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பு
மூரு முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே. 68

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. 69

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியிற்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமு
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருவடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
விழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக் கென்குறையே. 71

என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யாள்பிறக்கி
னின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே. 72

தாமங் கடம்பு படைபஞ்ச பாணந் தனுக்கரும்பி
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமந் திருவடி செங்கை நான்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே. 73

நயனங்கண் மூன்றுடை நாதனும் வேதமு நாரணனு
மயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொற்
சயனம் பொருந்து தமனியக் காவினிற் றங்குவரே. 74

தங்குவர் கற்பகத் தாருவி னீழலிற் றாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்தி னின் கோல் மெல்லாநின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றைமெய்யிற்
பறித்தே குடிபுகு தும் பஞ்ச பாண பயிரவியே. 76

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்ச
ருயிரவி யுண்ணு முயர்சண்டி காளி யொளிருங்கலா
வயரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமே
லப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையுந்
துப்பு நிலவு மெழுதிவைத் தேனென் றுணைவிழிக்கே. 78



விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று வெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 79

கூட்டிய வாவென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
யோட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணங்
காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா
வாட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே. 80

அணங்கே யணங்குக ளின்பரி வாரங்க ளாகையினால்
வணங்கே னொருவரை வாழ்த்துகிலே னெஞ்சில் வஞ்சகரோ
டிணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்தை பேரளியே. 81

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுநின்
னொளியாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுதொறுங்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் வடினெங்க னேமறப் பேனின் விரகினையே. 82

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமல
மிரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியு
முரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே. 83

உடையாளை யொல்கு செம்பட் டுடையாளை யொளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் செஞ்சடை யாளைத் தயங்கு நுண்ணூ
லிடையாளை யெங்கள் பெம்மா னிடையாளை யிங்கென்னையினிப்
படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 84

பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாந்
தீர்க்குந் திரிபுரை யாடிரு மேனியுஞ் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை மேன்முத்து மாலையுமே. 85

மாலயன் றேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும் போது வெளி நில்கண்டாய்
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்றிரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
யழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே. 87

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பக்தருக்குட்
டரமன் றிவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே. 88

சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
வுறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென் முன்னேவரல் வேண்டும் வருந்தியுமே. 89

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே. 90

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணந் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே. 91

பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்ற
னிதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யானொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே. 92

நகையே யிஃதிந்த ஞாலமெல லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுநா
மிகையே யிவடன் றகைமையை நாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளக
மரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாந்
தரும்பித்த ராவரென் றாலபி ராமி சமயநன்றே. 94

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லா
மன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே. 95

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயி றன்னைத்தம்மா
லாமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே. 96

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதற்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே. 98

குயிலா யிருக்குங் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாங்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையு
முழையைப் பொருகண்ணு நெஞ்சிலெப்போது முதிக்கின்றவே. 100

## நூற்பயன்

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

*திருச்சிற்றம்பலம்*

## அபிராமி அம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
க்ன்றாத வளமையுங் குன்றா இளமையும்
கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமுமன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
தய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி ! அபிராமியே !

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரிய புருவச் சிலைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண் டலம்நுதற்
கத்தூரி யிட்டப் பொட்டும்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழியுஞ் சிறிய
கொவ்வையின் கனிய தரமும்
குமிழனைய நாசியும் குந்தநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்
வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே;
ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின் வாழ்வே !
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி ! அபிராமியே !

மகரவார் குழல்மேல் அடர்ந்துகுமிழ் மீதினில்
மறைந்து வாளைத் துறந்து
மைக்கயலை வேண்டிநின் செங்கமல விழியருள்



வரம்பெற்ற பேர்க என்றோ
செகமுழுதும் ஒற்றைத் தனிக்குடை கவித்துமேற்
சிங்கா தனத்தி லுற்றுச்
செங்கோலும் மநுநீதி முறைமையும் பெற்றுமிகு
திகரியுல காண்டு பின்பு
புகர்முகத்(து) ஐராவதப் பாக ராகிநிறை
புத்தேளிர் வந்து போற்றிப்
போகதே வேந்திரன் எனப்புகழ விண்ணில்
புலோமிசை யொடுஞ்சு கிப்பர்;
அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகட வூரின் வாழ்வே !
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி !
அருள்வாமி ! அபிராமியே !

மறிகடல்கள் ஏழையுந் திகரியிரு நான்கையும்
மாதிரக் கரியெட் டையும்
மாநாகம் ஆனதையும் மாமேலு என்பதையும்
மாகூர்மம் ஆனதையு மோர்
பொறியரவு தாங்கிவரு புவனமீ ரேழையும்
புத்தேளிர் கூட்டத் தையும்
பூமகளை யுந்திகிரி மாயவனை யும் அரையிற்
புலியாடை உயையா னையும்
முறைமுறைக ளாயீன்ற முதியவர்களாயப் பழைமை
முறைகள் தெரியாத நின்னை
மூவுலகி லுள்ளவர்கள் வாலையென்(று) அறியாமல்
மொழிகின்ற தேது சொல்வாய் !
அறிவுநிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே !
ஆதிகட வூரின் வாழ்வே !
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி !
அருள்வாமி ! அபிராமியே !

திருச்சிற்றம்பலம்

# கந்தரனுபூதி

## காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

## நூல்

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியாயரு ள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோதரனே. 1

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனு நீ யலையோ
எல்லாமற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூபதியே 2

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே. 3

வளைபட்டகைம் மாதொடு மக்க ளெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ரரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே. 4

மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகமாறு மொழிந்து மொழிந் திலனே
அகமாடை மடந்தைய ரென் றயருஞ்
சகமாயையுள் நின்று தயங் குவதே. 5

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந்த மரும்பு மதோ
பணியா வென வள்ளி பதம் பணியுந்
தணியா வதிமோக தயா பரனே. 6

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்



சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. 7

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே. 8

மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டு டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப் பயனே. 9

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. 10

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகாசல வேலவ நாலு கவித்
தியாகா சுரலோக சிகா மணியே. 11

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொரு ளொன்று மறிந்திலனே. 12

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே. 13

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழி செல்லு மவாவினையே. 14

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்

பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங்கவ எண்குண பஞ் சரனே. 15

பேராசை யெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோக துரந் தரனே. 16

யாமோதிய கல்வியு மெம் மறிவுந்
தாமே பெற வேலவர் தந்ததனாற்
பூமேல் மயல்போய றமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீ ரினியே. 17

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூர பயங் கரனே. 18

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென்றொரு பாவி வெளிப் படினே. 19

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த் தியவா
விரிதாரண விக்ரம வேளி மையோர்
புரிதா ரக நாக புரந்தரனே. 20

கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா கரசூர விபாட ணனே. 21

காளைக் குமரேச னெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச் சுரபூபதி மேரு வையே. 22

அடியைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ



வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. 23

சூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வே னருள் சேரவு மெண்ணுமதோ
சூர்வே ரொடு குன்று தொளைத்தநெடும்
போர்வேல புரந்தர பூபதியே. 24

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றிய சேவகனே. 25

ஆதார மிலே னருளைப் பெறவே
நீதா னொரு சற்று நினைந்திலையோ
வேதாகம ஞான விநோ தமனோ
தீதா சுரலோக சிகா மணியே. 26

மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயி லேறிய வானவனே. 27

ஆனா அமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய வென்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே. 28

இல்லே யெனுமா யையி லிட்டனைநீ
பொல்லே னறியாமை பொறுத் திலையே
மல்லே புரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே. 29

செல்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. 30

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே

தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. 31

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரி வேடர்குலப் பிடிதோய்
மலையே மலை கூறிடு வாகையனே. 32

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென்று விடப் பெறுவேன்
மந்தா கினிதந்த வரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே. 33

சிங்கார மடத்தையர் தீநெறி போய்
மங்காம லெனக்கு வரந் தருவாய்
சங்க்ராம சிகா வலசண் முகனே
கங்கா நதி பால க்ருபாகரனே. 34

விதிகாணு முடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழ லென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே. 35

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. 36

கிரிவாய் விடுவிக் ரம 'வேலிறையோன்'
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோடு மகந் தையையே. 37

ஆதாளியை யொன்ற றியே னையறத்
தீதாளியை யாண் டதுசெப் புமதோ
கூதாள கிராத குலிக் கிறைவா
வேதாள கணம் புகழ்வே லவனே. 38

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவேடணை யென்று முடிந் திடுமோ



கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவ சங்கர தேசிகனே. 39

வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதணோடு திரிந் தவனே. 40

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே. 41

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற்ற றியா மையு மற்றதுவே. 42

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந் ததுவே. 43

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே. 44

கரவா கியகல்வி யுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோக தயா பரனே. 45

எந்தாயுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே. 46

ஆறா றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ

சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே. 47

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென்றவ ரோடுறும் வேலவனே. 48

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையும் க்ருபைசூழ் சுடரே. 49

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திர ஞான சுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே. 50

வருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. 51

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
திருச்செந்தூர்

## கந்தர் கலிவெண்பா

1. பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும் - தேமேவு
2. நாதமும் நாதாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமும் காணாத போதமாய் - ஆதிநடு
3. அந்தம் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தம் தணந்த பரஞ்சுடராய் - வந்த
4. குறியும் குணமுமொரு கோலமுமற்று எங்கும்
செறியும் பரம சிவமாய் - அறிவுக்கு
5. அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்கு எட்டா வடிவாய்த் - தனாதருளின்
6. பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய் - எஞ்சாத



7. பூரணமாய் நித்தமாய்ப் போக்குவரவும் புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித் - தாரணியில்
8. இந்திரசாலம் புரிவோன் யாரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராது சார்வதுபோல - முந்தும்
9. கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த் - திரிகரணம்
10. ஆகவரும் இச்சை அறிவு இயற்ற லால்இலய
போகஅதி காரப் பொருளாகி - ஏகத்து
11. உருவும் அருவும் உருஅருவும் ஆகிப்
பருவ வடிவம் பலவாய் - இருள்மலத்துள்
12. மோகமுறும் பல்லுயிர்க்கு முத்திஅளித் தற்குமல
பாகமுறவே கடைக்கண் பாலித்துத் - தேகமுறத்
13. தந்த அருவுருவம் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து - மந்த்ரமுதல்
14. ஆறத்து வாவும் அண்டத்து ஆர்ந்தஅத்து வாக்களும்முற்
கூறத் தகும் சிமிழ்ப்பில் கூட்டுவித்து - மாறிவரும்
15. ஈரிரண்டு தோற்றத்து எழுபிறப்புள் யோனிஎன்பான்
ஆரவந்த நான்குநூ றாயிரத்துள் - தீர்வரிய
16. கன்மத்துக்கு ஈடாய்க் கறங்கும் சகடமும்போற்
சென்மித்து உழலத் திரோதித்து - வெந்நிரய
17. சொர்க்காதி போகமெலாம் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்காரணம் சிறிது நண்ணுதலும் - தர்க்கமிடும்
18. தொன்னூல் பரசமயம் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து முன்னூல்
19. விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகம் சார்வித்து - அருள்பெருகு
20. சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து
ஆலோகம் தன்அகற்றுவித்து - நால்வகையாம்
21. சத்திநி பாதம் தருதற்கு இருவினையும்
ஒத்துவரும் காலம் உளவாகிப் - பெத்த
22. மலபரி பாகம் வருமளவில் பன்னாள்
அலமருதல் கண்ணுற்று அருளி - உலவாது
23. அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா
நெறியில் செறிந்தநிலை நீங்கிப் - பிறியாக்
24. கருணை திருஉருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென்று ஓர்திருப்பேர் கொண்டு - திருநோக்கால்
25. ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழும் அத்துவாக்கள் இருமூன்றும் - பாழாக
26. ஆணவமான படலம் கிழித்து அறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப் - பூணும்

27. அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவும் காட்டிக்
கடியார் புவனமுற்றும் காட்டி - முடியாது
28. தேக்குபர மானந்தத் தெள்ளமுதம் ஆகிஎங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப் - போக்கும்
29. வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவும் கடந்துஉலவா இன்பம் - மருவுவித்துக்
30. கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும்
வன்மழுவும் மானுமுடன் மால்விடைமேல் - மின்னிடந்துப்
31. பூத்த பவளப் பொருப்புஒன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி - மூத்த
32. கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்து உள்நின்று
ஒருமலத்தார்க்கு இன்பம் உதவிப் - பெருகியெழு
33. மூன்றவத்தை யும்கழற்றி முத்தருட னேஇருத்தி
ஈன்றபர முத்தி அடைவித்துத் - தோன்றவரும்
34. யானெனதென்று அற்ற இடமே திருவடியா
மோனபரா னந்தம் முடியாக - ஞானம்
35. திருஉருவா இச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை அலரா - இருநிலமே
36. சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே, எவ்வுயுர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே - மின்னுருவம்
37. தோய்ந்த நவரத்நச் சுடர்மணியால் செய்த பைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும் - தேய்ந்தபிறைத்
38. துண்டம்இரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதல் பொட்டழகும் - விண்ட
39. பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள்பொழியும் கண்மலர் ஈராறும் - பருதி
40. பலவும் எழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும் - நிலவுமிழும்
41. புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும் - வின்மலிதோள்
42. செவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூர னைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்தும் திருமுகமும் - எவ்வுயிர்க்கும்
43. ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும் - சூழ்வோர்
44. வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும் - விடுத்தகலாப்
45. பாச இருள்துரந்து பல்கதிரில் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும் - நேசமுடன்
46. போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும் - தாகமுடன்



47. வந்தடியில் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும் - கொந்தவிழ்ந்த
48. வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும் - ஆரமுதம்
49. தேவர்க்கு உதவும் திருக்கரமும் சூர்மகளிர்
வேமக் குழைந்தணைந்த மென்கரமும் - ஓவாது
50. மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும் - மார்பகத்தில்
51. வைத்த காதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும் - மொய்த்த
52. சிறுதொடிசேர் கையும்மணி சேர்ந்ததடங் கையும்
கறுவுசமர் அங்குசம்சேர் கையும் - தெறுபோர்
53. அதிர்கே டகம்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும் - முதிராத
54. கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும் - பைம்பொன்
55. புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும் - திருவரையும்
56. நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத்து அணிந்த பரிபுரமும் - சோதி
57. இளம்பருதி நூறா யிரங்கோடி போல
வளந்தரு தெய்வீக வடிவும் - உளந்தனில்கண்டு
58. ஆதரிப்போர்க்கு ஆருயிராய் அன்பரகத் தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே - ஓதியஐந்து
59. ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே - தாங்கரிய
60. மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப் - பந்தனையால்
61. ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா - வைத்த
62. கலையே அவயவமாக் காட்டும்அத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய் - பலகோடி
63. அண்டம் உருவாகி அங்கம் சராசரமாய்க
கண்டசக்தி மூன்றுட் கரணமாய்த் - தொண்டுபடும்
64. ஆவிப் புலனுக்கு அறிவு அளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே - மேவ
65. வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானம்
தரும்அட்ட யோகத் தவமே - பருவத்து
66. அகலாத பேரன்பு அடைந்தோர் அகத்துள்
புகலாகும் இன்பப் பொருப்பும் - சுகலளிதப்

67. பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானம்
தேரின்ப நல்கும் திருநாடும் - பாரின்பம்
68. எல்லாம் கடந்த இருநிலத்துள் போக்குவரவு
அல்லாது உயர்ந்த அணிநகரும் - தொல்லுலகில்
69. ஈறும் முதலுமகன்று எங்குநிறைந்த ஐந்தெழுத்தைக்
கூறி நடாத்தும் குரகதமும் - ஏறுமதம்
70. தோய்ந்து களித்தோர் துதிக்கையினால் பஞ்சமலம்
காய்ந்த சிவஞானக் கடாக்களிறும் - வாய்ந்தசிவ
71. பூரணத்துள் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துள் கட்டு நறுந்தொடையும் - காரணத்துள்
72. ஐந்தொழிலும் ஓவாது அளித்துயர்த்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும் - சந்ததமும்
73. பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கண் பரஞ்சோதி - ஆங்கொருநாள்
74. வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசும் தசாங்கமெனப் பெற்றோனே - தேசுதிகழ்
75. பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கண் பரஞ்சோதி - ஆங்கொருநாள்
76. வெந்தகுவர்க்கு ஆற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோடு அதோமுகமும் - தந்து
77. திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியாறு உய்ப்ப - விரிபுவனம்
78. எங்கும் பரக்க இமையோர் கண்டு அஞ்சுதலும்
பொங்கும் தழல்பிழம்பைப் பொற்கரத்தால் - அங்கண்
79. எடுத்தமைத்து வாயுவைக்கொண்டு ஏகுதியென்று எம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய் - அடுத்ததொரு
80. பூதத் தலைவகொடு போதிஎனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப் - போதொருசற்று
81. அன்னவளும் கொண்டமைதற்கு ஆற்றாள் சரவணத்தில்
சென்னியில் கொண்டு உய்ப்பத் திரஉருவாய் - முன்னர்
82. அறுமீன் முலையுண்டு அழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன் - குறுமுறுவல்
83. கன்னியொடும் சென்று அவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்டு அவ்வுருவம் ஆறினையும் - தன்னிரண்டு
84. கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச் - செய்ய
85. முகத்தில் அணைத்துஉச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத்து அளித்துச் - சகத்தளந்த
86. வெள்ளை விடைமேல் விமலன் கரத்தில் அளித்த
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே - கிள்ளைமொழி



87. மங்கை சிலம்பின் மணிஒன்ப தில்தோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து - தங்கள்
88. விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயும் தார்வீர வாகு - நெருப்பிலுதித்து
89. அங்கண் புவனம் அனைத்தம் அழித்துலவும்
செங்கண் கிடாஅதனைச் சென்றுகொணர்ந்து - எங்கோன்
90. விடுக்குதி என்று உய்ப்பஅதன் மீதிவர்ந்து எண்திக்கும்
நடத்தி விளையாடும் நாதா - படைப்போன்
91. அகந்தை உரைப்பமறை ஆதி எழுத்தென்று
உகந்த பிரணவத்தின் உண்மை - புகன்றிலையால்
92. சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறையிருத்தும் கோமானே - மட்டவிழும்
93. பொன்னம் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே - கொன்னெடுவேல்
94. தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக
வீரவடி வேல் விடுததோனே - சீரலைவாய்த்
95. தெள்ளு திரை கொழிக்கும் செந்தூரில் போய்க்கருணை
வெள்ளம் எனத்தவிசின் வீற்றிருந்து - வெள்ளைக்
96. கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்தில் புக்கு இமையோர் வாரச் - சயேந்திரனாம்
97. சூரனைச் சோதித்துவரு கென்றுதடம் தோள்விசய
வீரனைத் தூதாக விடுத்தோனே - காரவுணன்
98. வானவரை விட்டு வணங்காமை யால்கொடிய
தானவர்கள் நாற்படையும் சங்கரித்துப் - பானு
99. பகைவன் முதலாய பாவருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய் - சகமுடுத்த
100. வாரிதனில் புதிய மாவாய்க் கிடந்தநெடும்
சூருடலம் கீண்ட சுடர் வேலோய் - போரவுணன்
101. அங்கம்இரு கூறாய் அடன்மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும் - அங்கவற்றுள்
102. சீறும்அர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே - மாறிவரு
103. சேவல் பகையைத் திறல்சேர் பதாகைஎன
மேவத் தனித்துயர்த்த மேலோனே - மூவர்
104. குறைமுடித்து விண்ணம் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்து ஆட்கொண்ட தேவே - மறைமுடிவாம்
105. சைவக்கொழுந்தே தவக்கடலே வானுதவும்
தெய்வக் களிற்றை மணம்செய்தோனே - பொய்விரவு
106. காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப் - பூமருவு

107. கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்து இனிதிருந்து - மேன்மைபெறத்
108. தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே - உள்ளம்உவந்து
109. ஆறுதிருப் பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறும் அவர் சிந்தைகுடி கொண்டோனே - நாறுமலர்க்
110. கந்திப் பொதும்பர்எழு காரலைக்கும் சீரலைவாயச்
செந்திப் பதிபுரக்கும் செவ்வேளே - சந்ததமும்
111. பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும் - பல்கோடி
112. பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசும்அடல்
பூதமும்தீ நீரும் பொருபடையும் - தீது அகலா
113. வெவ்விடமும் துட்ட மிருகமுதலாம் எவையும்
எவ்விடம்வந்து எம்மை எதிர்ந்தாலும் - அவ்விடத்தில்
114. பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும் - கச்சைத்
115. திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் - விரிகிரணம்
116. சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற - வந்திடுக்கண்
117. எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்து
உல்லாசமாக உளத்திருந்து - பல்விதமாம்
118. ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசும் இயல் பல்காப் பியத் தொகையும் - ஓசை
119. எழுத்துமுத லாம்ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து - ஒழுக்கமுடன்
120. இம்மைப் பிறப்பில் இருவா தனைஅகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் - தம்மைவிடுத்து
121. ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச் - சேய
122. கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று அருள்.

*திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா முற்றிற்று.*



## கந்தரலங்காரம்

### காப்பு

அடலரு ணைத்திருக் கோபுரத் தேய்ந்த வாயிலுக்கு
வட வருகிற் சென்று கண்டுகொண் டேன்வரு வார் தலையில்
தடப டெனப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைச்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

### நூல்

பேற்றைத் தவஞ் சற்றுமில்லாத வென்னைப்ர பஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட வா! செஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே. 1

அழித்துப் பிறக்கவொட் டாவயில் வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே. 2

தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்ததுசூர்ப்
பேரணி கெட்டது தேவேந்தர லோகம் பிழைத்ததுவே. 3

ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார்மல ரிட்டுனதாள்
சேரவொட் டாரைவர் செய்வதென்யான் சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே. 4

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே. 5

பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி னான்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மாநந்தந் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச்செந் தேனும் புளித்தறக் கைத்ததுவே. 6

சளத்திற் பிணிபட் டசட்டு க்ரியைக்குட் டவிக்கு மென்றன்
உளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுண ருரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே. 7

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ராநந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வா! முக மாறுடைத் தேசிகனே. 8

தேனென்று பாகென்றுவமிக் கொணாமொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே. 9

சொல்லுகைக் கில்லையென் றெல்லா மிழந்துசும் மாவிருக்கு
மெல்லையுட் செல்ல எனைவிட்ட வாஇகல் வேலனல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரைக் கொவ்வைச் செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தேளண்ணல் வல்லபமே. 10

குசைநெகி ழாவெற்றி வேலோ னவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிடவெண்
டிசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே. 11

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகழிந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடலம்
இடைப்பட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே. 12

ஒருவரைப் பங்கி லுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே. 13

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்று வாயிரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே. 14



தாவடி யோட்டு மயிலிலுந் தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே. 15

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழ பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்கவை வேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே. 16.

வேதா கமசித்ர வேலா யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்த மரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே. 17

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே. 18

சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் தொளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம் பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே. 19

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்க ளத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே. 20

மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே. 21

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே. 22

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே. 23

கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச் சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே. 24

தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாய டாவந்த காவந்து பார்சற்றென் கைக் கெட்டவே. 25

நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்; மரிப் பார்வெறுங்களே. 26

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மலையு முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்தசெச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே. 27

வேலே விளங்குகை யான்செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான் மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறு புகல்வதுவே. 28

கடத்திற் குறத்தி பிரானரு ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்திற் கழுத்திற் பழுத்தசெவ் வாயிற் பணையிலுந்தித்
தடத்திற் றனத்திற் கிடக்கும்வெங் காம சமுத்திரமே. 29

பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென்ப தாகத் திரிகின்ற நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற்ற மயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே. 30



பொக்கக் குடிலிற் புகுதா வகைபுண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக்
க்கக் கிரியுரு வக்கதிர் வேல்தொட்ட காவலனே. 31

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னேதுறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங் கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற என்னை யெந்நாள்வந் திரட்சிப்பையே. 32

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே. 33

பொட்டாக வெற்பைப் பொருதகந்தா தப்பிப் போதொன்றற்
கெட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாயப்
பட்டா ருயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்வழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே. 34

பத்தித் துறையிழிந் தாநந்த வாரி படிவதினால்
புத்தித் தரங்கந் தெளிவதென் றோபொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே. 35

சுழித்தோடு மாற்றிற் பெருக்கானது செல்வந் துன்பமின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே. 36

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேன்மற வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடு டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ் சூர்க்கொன்ற ராவுத்தனே. 37

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே. 38

உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந் தீர்த்தெனை யுன்னி லொன்றா
விதித்தாண் டருள்தருங் காலமுண் டோவெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமரு காமயி லேறிய மாணிக்கமே. 39

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே. 40

பாலே யனைய மொழியார்த மின்பத்தைப் பற்றியென்றும்
மாலே கொண்டுய்யும் வகையறி யேன்மலர்த் தாள்தருவாய்
காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில் கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே. 41

நிணங்காட்டுங் கொட்டிலை விட்டொரு வீடெய்தி நிற்கநிற்குங்
குணங்காட்டி யாண்ட குருதே சிகனங் குறச்சிறுமான்
பணங்காட்டு மல்குற் குருகுங் குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே யெனக்கிங்ஙன் வாய்த்ததுவே. 42

கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலரக்கர்
புவியார்ப் பெழத்தொட்ட போர்வேன் முருகனைப் போற்றி யன்பாற்
குவியாக் கரங்கள்வந் தெங்கே யெனக்கிங்ஙன் கூடியவே. 43

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கைந் நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே. 44

ஒருபூ தருமறி யாத்தனி வீட்டி லுரையுணர்வற்
றிருபூத வீட்டி லிராமலென் றானிரு கோட்டொருகைப்
பொருபூ தரமுரித் தேகாச மிட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவ னிட்டூர சூர குலாந்தகனே. 45

நீயான ஞான விநோதந் தனையென்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய்சித்ர மாதரல்குற்
றோயா வுருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாயா விநோத மநோதுக்க மானது மாய்வதற்கே. 46



பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மாநந்த சாகரத்தே. 47

பத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்திரை வாங்க அறிகின்றி லேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திர காங்கேய னேவினை யேற்கொன் குறித்தனையே. 48

சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண்தண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே. 49

படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே. 50

மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே. 51

சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்வமீ; பணி பாசசங் க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்க ந்ருபகுமரா
குமராட் சசபட்ச விட்சோப தீர குணதுங்கனே. 52

வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்
றேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாப்பவரே. 53

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித தளர்ந்தவர்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை யேயிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே. 54

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய்யா ரென்செய் வார்யம தூதருக்கே 55

கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாப்படக் கூற்றுவனூர்க் குச்செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகீர் மறந்தவர்க்கே. 56

பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண்டிருவினை யோமிறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாய வுடம்பிதுவே. 57

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய பிரானிக்கு முல்லையுடன்
பற்றாக்கை யும்வெந்து சங்க்ராம வேளும் படவிழியாற்
செற்றார்க் கினியவன் தேவேந்த்ர லோக சிகாமணியே. 58

பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரு மேற்பவர்க் கிட்ட திடாமல்வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மொகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே. 59

சிந்திக் கிலேனின்று சேவிக்கி லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக் கிலேனொன்றும் வாழ்த்துகி லேன்மயில் வாகனனைச்
சந்திக் கிலேன்பொய்யை நிந்திக் கிலேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்குதற்கே. 60

வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித் தவா! பஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே. 61

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனு மேருவுமே. 62

பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர் வேலனைச் சென்று போற்றியுய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ அழுது தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே. 63

பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவிடேன் செய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ்வேற்பெரு மாள்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே. 64

வெட்டுங் கடாமிசைத் தோன்றும் வெங்கூற்றன் விடுங் கயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டும் சராசரங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட் டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே. 65

நீர்க் குமிழிக்கு நிகரென்பர் யாக்கை நில்லா லாதுசெல்வம்
பார்க்கு மித்தந்த மின்போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற்குமரற் கன்பிலாதவர் ஞான மிகவுநன்றே. 66

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறிகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரவசல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே. 67

சாடுஞ் சமரத் தனிவேல் முருகன் சரணத்திலே
ஓடுங் கருத்தை யிருத்தவல் லார்க்குகம் போய்ச்சகம்போய்ப்
பாடுங் கவுரி பவுரியொண் டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா யிருக்கு மதீதத்திலே. 68

தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி யெனைத்தேற் றியபின்னர்க் காலன்வெம்பி
வந்திப் பொழுதென்னை யென்செய்ய லாஞ்சத்தி வாளொன்றினாற்
சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத்ரி சூலத்தையே. 69

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே. 70

துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென் னாஞ்சிவ யோகமென்னுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே. 71

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே. 72

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மநோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த ஆனந்தமே. 73

அராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்த அன்பாற்
குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டுங் கொடிய ஐவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டுமென்றால்
இராப்பக லற்ற இடத்தே யிருக்கை யெளிதல்லவே. 74

படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மாநந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே. 75

கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே. 76

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரஞ் சேரஎண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்குங் களிற்றான் கிழத்தி கழுத்திற்கட்டு
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி பூங்கழல் நோக்கு நெஞ்சே. 77

கூர்கொண்ட வேலனைப் போற்றாம லேற்றங்கொண் டாடுவிர்காள்
போர்கொண்ட கால னுமைக்கொண்டு போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரு மாளிகை யும்பணச் சாளிகையும்
ஆர்கொண் போவரையோ கெடுவீர்நும் மறிவின்மையே. 78



பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்குமரா அம ராவதி காவலனே. 79

மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன்வந்தா லென்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந் தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே. 80

தாரா கணமெனுந் தாய்மார் அறுவர் தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப் பாலுண்ட பால னரையிற்கட்டுஞ்
சீராவுங் கையிற் சிறுவாளும் வேலுமென் சிந்தையவே
வாரா தகலந்த காவந்த போதுயிர் வாங்குவனே. 81

தகட்டிற் சிவந்த கடம்பையு நெஞ்சையுந் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு ளாய்புண்ட ரீகனண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர லோகத்தை முட்டவெட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர சூர பயங்கரனே. 82

தேங்கிய அண்டத் திமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளந்தனிவேல்
வாங்கி யனுப்பிடக் குன்றங்க ளெட்டும் வழிவிட்டவே. 83

மைவருங் கண்டத்தர் மைந்தகந்தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறியேன் கற்ற கல்வியும்போய்
பைவரும் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே. 84

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே. 85

வேலா யுதன்சங்கு சக்ராயு தன்விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன் தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு ளாய கசவமுண்டென்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே. 86

குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே. 87

வணங்கித் துதிக்க அறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்றுவாய் கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகை கொண்டாடப் பிசிதர்தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலா யுதந்தொட்ட நிர்மலனே. 88

பங்கே ருகனெனைப் பட்டோ லையிலிடப் பண்டுதை ா
தங்காலி லிட்ட தறிந்தில னோதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே 89

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே. 90

கருமான் மருகனைச் சம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேல னைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே. 91

தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக் குஞ்சுத்த ஞானமெனுந்
தண்டயம் புண்டரி கந்தருவாய் சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலங் கொண்டுபண் டண்டரண் டங்கொண்டு மண்டிமிண்டக்
கணடுருண் டண்டர்விண் டோடாமல் வேல்தொட்ட காவலனே. 92

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசையந்த
விண்கமழ் சேலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி யோசை பதினா முங் கேட்டதுவே. 93

தெள்ளிய ஏனவிற் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் தாள்வேட் டிலைசிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத் தோதகச் சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்டநெஞ்சே. 94



யான்றானெ னுஞ்சொல் லிரண்டுங் கெட்டாலன்றி யாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே. 95

தடக்கொற்ற வேள்மயி லேயிடர் தீரத் தனிவிடில்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே. 96

சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தநந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே. 97

கதிதனை யொன்றையுங் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய்நரம்பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே. 98

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே. 99

இடுதலைச் சற்றுங் கருதேனைப் போதமி லேனையன்பாற்
கெடுதலி லாத்தொண் டரிற்கூட் டியவா! கிரெளஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி யறவிச் சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே. 100

சலங்காணும் வேந்தர்தமக்கு மஞ்சார் யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்று ளொருகவி தான்கற் றறிந்தவரே. 101

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தென் னள்ளங் குளிரக் குதிகொண்டவே. 102

இராப்பக லற்ற இடங்காட்டி யானிருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாளரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற நின்ற கடவுள்மெச்சும்
பராக்ரம வேல நிருதசங் கார பயங்கரனே. 103

செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ் செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந் தெதிர்நிற்பனே. 104

ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி லேன் வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே. 105

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே. 106

சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் தனக்கொரு காலுமஞ் சேன்படல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே. 107



## திருநள்ளாற்றுப்பதிகம்

பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற் றண்ணல்பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயதுநள்ளாறே.

தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர் விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோ டேழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயதுநள்ளாறே.

ஆன்முறையா லாற்றவெண்ணீ றாடியணி யிழையோர்
பான்முறையால் வைத்த பாதம் பத்தர் பணிந்தேத்த
மான் மறியும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றிய கை
நான் மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே.

புல்கவல்ல வர்சடைமேற் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோடுடன் சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம் பொற்பாத நிழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயதுநள் ளாறே.

ஏறுதாங்கி யூர்தி பேணி யேர்கொளிள மதியம்
ஆறு தாங்குஞ் சென்னிமேலோ ராடவஞ் சூடி
நீறு தாங்கி நூல் கிடந்த மார்பினிரை கொன்றை
நாறு தாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே.

திங்களுச்சி மேல் விளங்குந் தேவனிமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவ னென்றடியே யிறைஞ்சத்
தங்களுச்சியால் வணங்குந் தன்னடியார்கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே.

வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி வண்கொண்முழ வதிர
அஞ்சிடத்தோ ராடல்பாடல் பேணுவதன்றி யும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடித் திகழ்தருகண் டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயநள் ளாறே.

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத்தீ யம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீறாடுவதன் றியும்போய்ப்
பட்டமார்ந்த சென்னி மேலோர் பால்மதியஞ் சூடி
நட்டமாடு நம்பெருமான் மேயது நள்ளாறே.

உண்ணலாகா நஞ்சுகண்டத் துண்டுடனே யொடுக்கி
அண்ணலாகா வண்ணனீழ லாரழல் போலுருவம்
எண்ணலாகா வுள்வினையென் றெள்கவலித் திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயதுநள்ளாறே.

மாசுமெய்யர் மண்டைத்தேரர்குண்டர் குணமிலிகள்
பேசும் பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றை சூடிமும்மதிளும் முடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயதுநள் ளாறே.

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ் சடையன்
நண்புநல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன் நல்ல
பண்பு நள்ளா றேத்துபாடல் பத்துமிவை வல்லார்
உண்பு நீங்கி வானவரோ டுலகிலுறை வாரே.

திருச்சிற்றம்பலம்

## திருநள்ளாற்றுபதிகம்

பண் : சாதாரி

திருச்சிற்றம்பலம்

தளிரிள வளரொளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தந் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

போதமர் தருபுரி குழலெழின் மலைமகள் பூணணி
சீதம தணிதரு முகிழிள வனமுலை செறிதலின்
நாதம தெழிலுருவனைய நள்ளாறர்தந்நாமமே
மீதமதெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

இட்டுறுமணியணி யிணர்புணர் வளரொளி யெழில்வடம்
கட்டுறு கதிரிள வனமுலையிணையொடு கலவலின்
நட்டுறு செறிவயல் மருவுநள் ளாறர்தந்நாமமே
இட்டுறு மெரியினிலிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.



மைச்சணி வரியரி நயனிதொன் மலைமகள் பயனுறு
கச்சணி கதிரிள வனமுலையவையொடு கலவலின்
நச்சணிமிடறுடை யடிகள் நள் ளாறர்தந் நாமமே
மெச்சணி யெரியினிலிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

பண்ணியல் மலைமகள் கதிர்விடு பருமணியணி நிறக்
கண்ணியல் கலசம தனமுலை யிணையொடு கலவலின்
நண்ணியகுளிர்புனல் புகுதுநள் ளாறர்தந் நாமமே
விண்ணியலெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

போதுறுபுரிகுழல் மலைமக ளிளவளர் பொன்னணி
சூதுறு தளிர்நிற வனமுலை யவையொடு துதைதலின்
தாதுறுநிறமுடை யடிகள் நள்ளாறர்தந் தம்நாமமே
மீதுறு மெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

கார்மலி நெறிபுரி சுரிகுழல் மலைமகள் கவினுறு
சீர்மலி தருமணி யணிமுலை திகழ்வொடு செறிதலின்
தார்மலி நகுதலை யுடையநள்ளாறர்தந்நாமமே
ஏர்மலி யெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

மன்னியவளரொளி மலைமகள் தளிர்நிற மதமிகு
பொன்னியல் மணியணி கலசம தனமுலை புணர்தலின்
தன்னியல் தசமுகன் நெரியநள் ளாறர் தந் நாமமே
மின்னியலெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

கான்முக மயிலியல் மலைமகள் கதிர்விடு கனமிகு
பான்முக மியல்பணை யிணைமுலை துணையொடு பயிறலின்
நான்முகனரியறி வரியநள் ளாறர்தம் நாமமே
மேன்முக எரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

அத்திர நயனிதொன் மலைமகள் பயனுறு மதிசயச்
சித்திரமணியணி திகழ்முலையிணையொடு செறிதலின்
புத்தரொடமணர் பொய் பெயருநள்ளாறர் தந்நாமமே
மெய்த்திரளெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

சிற்றிடை யரிவைதன் வனமுலையிணையொடு செறிதரும்
நற்றிறமுறுகழு மலநகர் ஞானசம்பந்தன்
கொற்றவனெதிரிடை யெரியினி லிடஇவை கூறிய
சொற்றெரி யொருபது மறிபவர் துயரிலர் தூயரே.

*திருச்சிற்றம்பலம்*

உ
குகமயம்

# கந்த ஷஷ்டி கவசம் (1)
## திருப்பரங்குன்றுறை தீரன்

காப்பு

*அமரரிடர் தீர வமரம் புரிந்த*
*குமரனடி நெஞ்சே குறி*

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கை கூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

திருப்பரங்குன்றுறை தீரனே! குகனே!
மருப்பிலாப் பொருளே! வள்ளி மனோகரா!
குறுக்குத் துறையுறை குமரனே! அரனே
இருக்குள் குருபரா! ஏரகப் பொருளே!
வையா புரியில் மகிழ்ந்துவாழ் பவனே!
ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோ நமோ.
ஐயா! குமாரா! அருளே நமோ நமோ,
மெய்யாய் விளங்கும் வேலா! நமோ நமோ,
பழனியங் கிரிவாழ் பகவா! நமோ நமோ,
மழுவுடை முதல்வன் மதலாய்! நமோ நமோ,
விராலி மலையுறை விமலா நமோ நமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோநமோ
சூரசம் காரா துரையே நமோநமோ
வீரவே லேந்தும் வேளே நமோநமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோநமோ
கண்களீ ராறுடைக் கந்தா நமோநமோ
கோழிக் கொடியுடைக் கோவே நமோநமோ
ஆழிசூர் செந்தில் அமர்ந்தாய் நமோநமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம்
வவவ வவவ ஆம் ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ கௌம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக



தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருகநிஷ் களங்கனே வருக
தாயென நின்னிரு தாள் பணிந்தேன் எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினம் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வராமல் தடுத்து
நல்ல மனத்துடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்துநீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா
நந்தன் மருகா நாரணி சேயே
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமி நாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்
தவக்கதிர் காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு
சன்னிதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக்(கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆடும் சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொரு ளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரியயன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரையுமாக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத்துள்ள புண்ணிய தீர்த் தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிட்டைகள் பலபல வெல்லாம்

கள்வம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணேய்போல் எழிலுடைஉன்னை
அல்லும் பகலும் ஆசா ரத்துடன்
சல்லாப மாய் உன்னைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள் வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
அரன் மகிழ் புதல்வா அறுமுகாசரணம்
சரணம் சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சரவணம் பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

## கந்தர் சட்டி கவசம் (2)

ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய
திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்)

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய னடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வேலாலெனைக் காக்கவென்றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக



அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனி யொழியொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடிவை உறுதியென் றெண்ணும்

என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டுங் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்ரவேல் காக்க
அரையிரு டன்னில் அணையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க



தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபடப்
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள்தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி

தணலெரி தணலெரி தணலது வாக
விடு, விடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தும்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரதி
பக்கப் பிளவை படர்தொடை வாளை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றெனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகளொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி



உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கலென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் றேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயந் தங்கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
விழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந் தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக

சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழத்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேவா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சிப் புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைகோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

## கந்தர் சட்டி கவசம் (3)

ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய
திருவாவினன் குடி (பழநி)

திருவா வினன் குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணை சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பரமேசு வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக்(கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டா யிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்(கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா



திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணு யிரம்சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவர்
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உறுபொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம் சொல்லிய(து) ஒரு முகம்
அருள்பெறு மயில் மீ(து) அமர்ந்த(து) ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய(து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த(து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோநம
பொருட்செந்தில் அம்பதி புரப்பாய் நமோநம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோநம
கூரகம் ஆவினன் குடியாய் நமோநம
சர்வசங் கரிக்குத் தனயா நமோநம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோநம
எல்லாக் கிரிக்கும் இறைவா நமோநம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூலவட்டத்தில் முளைத்தெழும் சோதியை
சால முக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலாயுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற் கோணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேஸ்வரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்

ஆசை வட்டத்(து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசத்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் கட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்காய்ச் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து சிவனுடன் ஐயஞ்சு கல்பம்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்(டு) அறிந்தே யிடமாய்க்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறு முகமாய் அகத்துளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளையாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரை திரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கண மாக
நினைந்த படிஎன் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க்(கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்(து) ஆறு முகமும்
மாறா திருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்
வாழ்த்தும்என் நாவில் வந்தினி திருந்தே



அமுத வாக்குடன் அடியாக்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிர சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்(கு) உதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்லஉன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கயபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏற்றிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அனேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பெயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துர்க்கை பிடாரி நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங்(கு) உருட்டி நொருக்கிச்
சூலத்தாற் குத்தித் தூளுதூ ளுருவி
வேலா யுதத்தால் வீசிப் பருகி
மழுவிட் டேவி வடாவாக் கினிபோல்
தழுவிஅக் கினியாய்த் தான எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டாயுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சங்கரமும்
ஏக ரூபமாய் என்முனே நின்று
வாகனத் துடன்என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடனம்
வம்பதாம் பேதனம் வளிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயர்வித் தேடணம்
தந்திரம் மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி யுடனே சபித்து
கந்தநின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்

தந்துரட்சித்தருள் தயாபரா சரணம்
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்காரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

## கந்தர் சட்டி கவசம் (4)

ஆறுபடை வீடுகளில் ஒன்ருகிய
திருவேரகம் (சுவாமி மலை)

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆண்மை நண்ணிடா(து) என்னைக்
காணநீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
ஏகாட் சரமாய் எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
துதியட் சரத்தால் தொல்லுல(கு) எல்லாம்
அதிசய மாக அமைத்தவா போற்றி
திரியாட் சரத்தால் சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மை யுற்றவனே
சதுரட் சரத்தால் சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
பஞ்சாட் சரத்தால் பரமன் உருவதாய்த்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்



நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அமர்ந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும் ஆயுதத்தால்
தரங்குலைத்(து) ஓடத் தாரகா சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவசே னாதிப
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகளருள் ஈசன் புதல்வா
துட்டசம் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொள்ளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக
தைவமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றீ
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்கரம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணைஅருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிபே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியொடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
முல ரோகங்கள் முடக்குள் வலிப்பு

திட்டு முறைகள் தெய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடை நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## கந்தர் சட்டி கவசம் (5)

ஆறுபடை வீடுகளில் ஒன்ருகிய
திருத்தணி (குன்றுதோறாடல்)

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணபதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
துள்ளி மயிலேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா
திருவா வீனன்குடி சிறக்கும் முருகா
அரள்சேர் சிவகிரி ஆறு முகவா
சண்முக நலியும் சராபன்றி மலையும்
பண்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா
ஆராறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் ணீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணுன்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்



வெண்ணிலாப் பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநா யகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கம் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈஸ்வரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈஸ்வரன் வடிவை மிகக்கண்ட டனுதினம்
கையால் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்தி கேயாஎனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா? வருகவேன்(று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறு சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள் சிவபாலனே வருக
அன்பர்க் கருள்புரி அறுமுகா வருக
பொன்போற் சரவணைப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரபுரி பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலக்கிய பாதமும்
அரும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி

பொங்குமாந்தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபை போல்
கணையால்அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்
வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலம் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருதிய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கந் தூரியும்
வலம்புரிச் சங்கொளி மணியணி மிடறும்
நலஞ்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவை டூரியம் ஆணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்சாட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறை சங்கு ஒருவகை சக்ராயும்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம்அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளு
முருக்கம் சிறக்கும்முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாடத்
அஷ்ட பயிரவர் ஆனந்தமாடத்



துஷ்ட மிகுஞ்சூளிகள் சூழ்திசை காக்கச்
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லச்சுமி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் செயசெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் படிக் கவரிகள் வீசிச்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அனேக
பூதம் அணிபணிந் தேத்த வேதாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியர் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்கக்
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடைவிடாமல் உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திக்கே சுவரன்மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐயங்கரன் முன்வர அறுமா முகவன்
வீர மயிலேறு வெற்றிவேல் எடுக்கச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருள
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற குழந்தை அறுத்துச் சயித்து

விடவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும் சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை
கண்ணிய மாவூற்றுக் கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிரிவேங் கடமும்
பதினா லுலகத்திலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந் (து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக்(கு) அருள்சண் முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

## கந்தர் சட்டி கவசம் (6)

ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய
பழமுதிர் சோலை

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேச சேனாதிபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்



தகமொழி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமுவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் ணவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென் றுன்னைத் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங் (கு)
அஞ்சலி செய்தவள் அமுதம் உண்டு
காத்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீர வாகுவோ(டு) ஒன்பான்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா சண்முகா வேலா
நவ்வீரர் தம்முடன் நலகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ்வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மை நீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதையாய் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து பரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண்டி தனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமக ளுடனே
அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல
ஆறுமுகத்துடன் அவதரித்தோனே
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்த வமர்கள் தமக்குச்

சேனாதிபதி யாய் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்
சிறப்புற பழனி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)
இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்குக் குருதே சிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமாரா
கண்பார்த்(து) ஏனையாள் காத்தியே யாஎன்
கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட்சுமிவாழ் அருளெனக்(கு) உதவி
இஷ்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருணை கிரிதனக்(கு) அருளிய தமிழ் போல்
கருணையால் எனக்குக் கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்ட கவசம் தான்செபிப் போரைச்
சிட்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சங்கத் தமிழ்த்திறம் தந்தருள்ளோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ்த்தரும் அரசே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்

திருச்சிற்றம்பலம்

கந்தர் சட்டி கவசம் முற்றிற்று



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்
அருளிச் செய்த

## சண்முக கவசம்.

அண்டமா யவனி யாகி யறி யொணுப் பொருள தாகிப்
தொண்டர்கள் குருவு மாகித் துகளரு தெய்வமாகி
எண்டிசை போற்ற நின்ற வென்னரு ளீச ஞன
திண்டிறற் சரவ ணத்தான் தினமுமென் சிரசைக் காக்க 1

ஆதியாங் கயிலைச் செல்வ னணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாந் தணிகை யீசன் துரிசிலா விழியைக் காக்க
நாதனாங் கார்த்தி கேய னாசியை நயந்து காக்க 2

இருசெவி களையுஞ் செவ்வே ளியல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பன் முழுதுநற் குமரன் காக்க
துரிசறு சுதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க 3

ஈசனாம் வாகு லேய னெனதுகத் தரத்தைக் காக்க
தேசுறு தோள் விலாவுந் திருமகள் மருகன் காக்க
ஆசிலா மார்பை வீரா ருயுதன் காக்க வென்றன்
ஏசிலா முழங்கை தன்னை யெழற்குறிஞ் சிக்கோன் காக்க 4

உறுதியாய் முன்கை தன்னை யுமையிள மதலை காக்க
தறுகணே றிடவே யென்கைத் தலத்தைமா முருகன் காக்க
புறங்கையை அயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்குமான் மருகன் காக்க பின்முது கைச்சேய் காக்க 5

ஊணிறை வயிற்றை மஞ்ஞை யூர்தியோன் காக்க வம்புத்
தோணிமிர் சுரேச னுந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை யங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக் காக்க 6

எஞ்சிடா திடுப்பை வேலுக் கிறைவனார் காக்க காக்க
அஞ்சக னமொரி ரண்டு மரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருட்காங் கேயன் விரளடித் தொடையைக் காக்க
செஞ்சர ணேச வாசான் றிமிருமுன் றொடையைக் காக்க 7

ஏரகத் தேவ னென்றா ளிருமுழங் காலுங் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய் தே காக்க
நேருடைப் பாடி ரண்டு நிகழ்பரங் கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க, 8

ஐயுறு மலையன் பாதத் தமர்பத்து விரலுங் காக்க
பையுறு பழநி நாதன் பரனகங் காலைக் காக்க
மெய்யுடன் முழுது மாதி விமலசண் முகவன் காக்க
தெய்வநா யகவி சாகன் றினமுமென் னெஞ்சைக் காக்க, 9

ஒலியெழ வரத்த சத்தத் தொடுவரு பூதப் ரேதம்
பலிகொளி ராக்க தப்பேய் பலகணத் தெவையா னாலுங்
கிலிகொளா வெனைவேல் காக்க கெடுபரர் செய்யுஞ் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடா தயில்வேல் காக்க 10

ஓங்கிய சீற்ற மேகொண் டுவணியில் வேல்சூ லங்கள்
தாங்கிய தண்ட மெஃகத் தடிபர சீட்டி யாதி
பாங்குடை யாயு தங்கள் பகைவரென் மேலே யோச்சின்
தீங்குசெய் யாம லென்னைத் திருக்கைவேல் காக்க காக்க 11

ஔவிய முளரூ னுண்போ ரசடர்பே யரக்கர் புல்லர்
தெவ்வர்க ளெவரா னாலுந் திடமுட னெனைமற் கட்டத்
தவ்வியே வருவா ராயிற் சராசர மெலாம்பு ரக்குங்
கவ்வுடைச் சூர சண்டன் கைஅயில் காக்க காக்க 12

கடுவிடப் பாந்தன் சிங்கங் கரடிநாய் புலிமா யானை
கொடிய கோனாய் குரங்கு கோலமார்ச் சாலஞ் சம்பு
நடையுடை யெதனா லேனு நானிடர்ப் பட்டி டாமற்
சடிதியில் வடிவேல் காக்க சானவி முளைவேல் காக்க 13

ஙகரமே போற்ற ழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதேள் நண்டுக் காலி செய்யனே றாலப் பல்லி
நகமுடை யோந்தி பூரா னளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை யிவையா லெற்கோ ரூறிலா தைவேல் காக்க 14

சலத்திலுய் வன்மீ னேறு தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலுஞ் சலத்தி லுந்தா னெடுதுயர் தரற்கே யுள்ள
குலத்தினா னான்வ ருத்தங் கொண்டிடா தவ்வவ் வேளை
பலத்துட னிருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க 15



ஞமலியம் பரியன் கைவே னவக்கிர கக்கோள் காக்க
சுமவிழி நோய்க டந்த சூலையார்க் கிராண ரோகம்
திமிர்கழல் வாதஞ் சோகை சிரமிடி கர்ண ரோகம்
எமையணு காம லேபன் னிருபுயன் சயவேல் காக்க 16

டமருகத் தடிபோ னைக்குந் தலையிடி கண்ட மாலை
குமுறுவிப் புருதி குன்மங் குடல்வலி யீழை காசம்
நிமிரொணு திருத்தும் வெட்டை நீர்ப்பிர மேக மெல்லாம்
எமையடை யாம லேகுன் றெறிந்தவன் கைவேல் காக்க 17

இணக்கமில் லாத பித்தவெரிவுமா சுரங்கள் கைகால்
முக்கணவே குறைக்குங் குஷ்ட மூலவெண் முளைதீ மந்தஞ்
சணத்திலே கொல்லுஞ் சன்னி சாலமென் றறையு மிந்தப்
பிணிக்குல மெனையா ளாமற் பெருஞ்சத்தி வடிவேல் காக்க. 18

தவனமோ ரோக வாதஞ் சயித்திய மரோச கம்மெய்
சுவறவே செய்யு மூலச் சூடுளைப் புடற்று வித்தல்
அவதிசெய் பேதி சீழ்நோ யண்டவா தங்கள் சூலை
எவையுமென் னிடத்தெய் தாம லெம்பிரான் றிணிவேல் காக்க 19

நமைப்புறு கிரந்தி வீக்க நணுகிடு பாண்டு சோபம்
அமர்ந்திடு கருமை வெண்மை யாகுபஃ றொழுநோய் கக்கல்
இமைக்குமுன் னுறுவ லிப்போ டெழுபுடைப் பகந்த ராதி
இமைப்பொழு தேனு மென்னை யெய்தாம லருள்வேல் காக்க 20

பல்லது கடித்து மீசை படபடென் றேது டிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சங் காட்டியே யுருட்டி நோக்கி
எல்லினுங் கரிய மேனி யெமபடர் வரினு மென்னை
ஒல்லையிற் றார காரி ஓம்ஐம் ஹ்ரீம்வேல் காக்க 21

மண்ணிலு மரத்தின் மீது மலையிலு நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதுஞ் சாரிசெய் யூர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தி னுள்ளும் வேறெந்த விடத்து மென்னை
நண்ணிவந் தருளார் சஷ்டி நாதன்வேல் காக்க காக்க. 22

யகரமே போற்சூ லேந்து நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலா மீரா றம்பகன் வேல்பின் காக்க
சகரமோ டாறு மானோன் தன்கைவே னடுவிற் காக்க
சிகரமின் றேவே மோலி திகழைவேல் கீழ்மேல் காக்க 23

ரஞ்சித மொழிதே வானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல்கி ழக்கிற் றிடமுடன் காக்க வங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன்வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோ னிகலுடைக் கரவேல் காக்க 24

லகரமே போற்கா ளிங்க னல்லுட னெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் கைவெல்
நிகழெனை நிருதி திக்கி னிலைபெறக் காக்க மேற்கில்
இகலயில் காக்க வாயு வினிற்குகன் கதிர்வேல் காக்க 25

வடதிசை தன்னி லீசன் மகனருட் டிருவேல் காக்க
விடையுடை யீசன் திக்கில் பேதபோ தகன்வேல் காக்க
நடக்கையி லிருக்கு ஞான நவில்கையி னிமிர்கை யிற்கீழ்க்
கிடக்கையிற் றூங்கு ஞான்று கிரிதுளைத் துளவேல் காக்க 26

இழந்துபோ காத வாழ்வை யீயுமுத் தையனார் கைவேல்
வழங்குதல் லூணுண் போது மால்விளை யாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்துநெஞ் சடக்கும் போதும்
செழுங்குணத் தோடே காக்க திடமுடன் மயிலுங் காக்க 27

இளமையில் வாலி பத்தி லேறிடு வயோதி கத்தில்
வளரறு முகச்சி வன்றாள் வந்தெனைக் காக்க காக்க
ஒலியெழு காலை முன்னே ஓம்சிவ சாமி காக்க
தெளிநடு பிற்ப கற்கால் சிவகுரு நாதன் காக்க 28

இறகுடைக் கோழித் தோகைக் கிறைமுனி ராவிற் காக்க
திறலுடைச் சூர்ப்ப கைத்தே திகழ்பினி ராவிற் காக்க
நறவுசேர் தாட்சி லம்ப னடுநிசி தன்னிற் காக்க
மறைதெழு குழக னெங்கோன் மாறாது காக்க காக்க 29

இனமெனத் தொண்ட ரோடு மிணக்கிடுஞ் செட்டி காக்க
தனிமையிற் கூட்டந் தன்னிற சரவண பவனார் காக்க
நனியனு பூதி சொன்ன நாதர்கோன் காக்க வித்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுடான காக்க வந்தே 30

சண்முக கவசம் முற்றிற்று



# திருக்கேதீச்சரப்பதிகம்

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளியது.

விருதுகுன்றமாமேருவினாணரவாவனலெரியம்பாற்
பொருதழுவெயில்செற்றவன் பற்றிநின் றுறைபதியெந்நாளுங்
கருதுகின்றவூர்கனை கடற்கடிகமழ் பொழிலணிமா தோட்டங்
கருதிநின்றகேதீச்சரங்கைதொழக்கடு வினையடையாவே. 1

பாடல்வீணையர் பலபலசரிதையரெரு துகைத்தருநட்ட
மாடல்பேணுவரமரர்கள் வேண்டநஞ்சுண்டிருள் கண்டத்த
ரீடமாவதுவிருங்கடற் கரையினிலெழிறிகழ்மாதோட்டங்
கேடிலாதகேதீச்சரந் தொழுதெழக்கெடுமிடர்வினை தானே 2

பெண்ணொர்பாகத்தர் பிறைதவழ்சடையினரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித்தாடுவர் பாடுவரகந்தொறுமிடுபிச்சைக்
குண்ணலாவதோரிச்சையிலுழல்பவருயர் தருமாதோட்டத்
தண்ணனண் ணுகேதிச்சரமடைபவர்க்கருவினையடையாவே. 3

பொடிகொண்மேனியர்புலியதளரையினர் விரிதருகரத்தேந்தும்
வடிகொண்மூவிலைவேலினர் நூலினர்மறிகடன் மாதோட்டத்
தடிகளாதரித்திருந்த கேதீச்சரம்பரிந் தசிந்தையராகி
முடிகள் சாய்த்தடிபேணவல்லார் தம்மேன்மொய்த்தெழும்வினைபோமே. 4

நல்லராற்றவுஞானநன்குடையர் தம்மடைந்தவர்க்கருளீய
வல்லர் பார்மிசைவான்பிறப்பிறப்பிலர்மலிகடன்மாதோட்டத்
தெல்லையில்புகழெந்தை கேதீச்சரமிராப்பகனினைந்தேத்தி
யல்லலாசறுத்தரனடியிணை தொழுமன் பராமடியாரே. 5

பேழைவார்சடைப் பெருந்திருமகடனைப்பொருந்தவைத்தொருபாக
மாழையங்கயற்கண்ணிபாலருளியபொருளினர் குடிவாழ்க்கை
வாழையம்பொழின் மந்திகள்களிப்புறமருவியமாதோட்டக்
கேழல்வெண்மருப்பணிந்தநீண்மார்பர்கேதீச்சரம்பிரியாரே 6

பண்டுநால்வருக்கறமுரைத்தருளிப் பல்லுலகினிலுயிர்வாழ்க்கை
கண்டநாதனார் கடலிடங்கைதொழக்காதலித்துறைகோயில்
வண்டுபண்செயுமாமலர்ப்பொழின் மஞ்ஞைநடமிடுமாதோட்டந்
தொண்டர்நாடொறுந்துதிசெயவருள்செய்கேதீச்சரமதுதானே. 7

தென்னிலங்கையர் குலபதிமலைநலிந்தெடுத்தவன்முடிதிண்டோ
டன்னலங்கெடவடர்த்தவற்கருள் செய்ததலைவனார் கடல்வாயப்
பொன்னிலங்கியமுத்துமாமணிகளும் பொருந்தியமாதோட்டத்
துன்னியன்பொடுமடியவரிறைஞ்சுகேதீச்சரத்துள்ளாரே. 8

பூவுளானுமப்பொருகடல்வண்ணனும் புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடி நுன்னடியிணைகாண்கிலாவித்தகமென்னாகு
மாவும்பூகமுங்கதலியுநெருங்குமாதோட்டநன்னகர்மன்னித்
தேவிதன்னொடுந்திருந்துகேதீச்சரத்திருந்தவெம்பெருமானே 9

புத்தராய்ச்சிலபுனை துகிலுடையவர் புறனுரைச்சமணாத
ரெத்தராகிநின் றுண்பவரியம்பியவேழைமைகேளேன்மின்
மத்தயானை யைமறுகிடவுரிசெய்து போர்த்தவர்மாதோட்டத்
தத்தர்மன்னுபாலாவியின் கரையிற் கேதீச்சரமடைமின்னே. 10

மாடெலாமண்முரைசெனக்கடலின தொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதீச்சரத்தடிகளையணிகாழி
நாடுளார்க்கிறைஞானசம்பந்தன்சொனவின் றெழுபாமாலை
பாடலாயினபாடுமின்பத்தர்கள் பரகதிபெறலாமே. 11

*திருச்சிற்றம்பலம்.*

## திருக்கோணேஸ்வரப் பதிகம்
### திருஞானசம்பந்தசுவாமிகள் அருளியது

நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்பு நிமலர்நீறணிதிருமேனி
வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவடிவினர்கொடியணிவிடையர்
கரைகெழுசந்துங்காரகிற்பிளவுமளப்பருங்கனமணிவரன்றிக்
குரைகடலோ தநித்திலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே 1

கடிதெனவந்தகரிதனையுரித்துவவ்வுரிமேனிமேற்போர்ப்பர்
பிடியனநடையாள் பெய்வளை மடந்தைபிறை நுதலவளொடுமுட னாய்க்
கொடிதெனக்கதறுங்குரைகடல் சூழ்ந்துகொள்ள முனித்திலஞ்சுமந்து
குடிதனைநெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்கோணமாமலையமர்ந்தாரே. 2

பனித்திளந்திங்கட்பைந் தலைநாகம்படர்சடைமுடியிடைவைத்தார்
கனித்திளந்துவர்வாய்க்காரிகைபாகமாக முன்கலந்தவர்மதின்மேற்
றனித்தபேருருவவிழுத்தழனாகந்தாங்கியமேருவெஞ்சிலையாக்
குனித்ததோர் வில்லார்குரைகடல் சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே 3

பழித்திளங்கங்கைசடைமுடிவைத்துப்பாங்குடைமதனனைப்பொடியா
விழித்தவன்றேவிவேண்டமுன்கொடுத்தவிமலனார்கமலமார்பாதர்
தெழித்துமுன்னரற்றுஞ்செழுங்கடற்றரளஞ்செம்பொனுமிப்பியுஞ்சுமந்து
கொழித்துவன்றிரைகள் கரையிடைச்சேர்க்குங்கோணமாமலையமர்ந்தாரே. 4



தாயிலுநல்லதலைவரென்றடியார் தம்மடிபோற்றிசைப்பார்கள்
வாயிலுமனத்துமருவிநின்றகலாமாண்பினர்காண்பலவேடர்
நோயிலும் பிணியுந்தொழிலர் பானீங்கிநுழைதருநூலினர்ஞாலங்
கோயிலுஞ்சுனையுங்கடலுடன் சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே 5

பரிந்துநன்மனத்தால் வழிபடுமாணிதன்னுயிர்மேல் வருங்கூற்றைத்
திரிந்திடாவண்ணமுதைத்தவற்கருளுஞ்செம்மையார்நம்மையாளுடையார்
விரிந்துயர்மௌவன்மாதவிபுன்னைவேங்கைவண்செருந்திசெண்பகத்தின்
குருந்தொடுமுல்லைகொடிவிடும்பொழில்சூழ்கோணமாமலையமர்ந்தாரே 6

எடுத்தவன்றருக்கையிழித்தவர்விரலாலேத்திடவாத்தமாம்பேறு
தொடுத்தவர்செல்வந்தோன்றியபிறப்புமிறப்பறியாதவர்வேள்வி
தடுத்தவர்வனப்பால்வைத்ததோர்கருணைதன்னருட்பெருமையும்வாழ்வுங்
கொடுத்தவர்விரும்பும் பெரும் புகழாளர்கோணமாமலையமர்ந்தாரே 7

அருவராதொருகைவெண்டலையேந்தியகந்தொறும்பலியுடன்புக்க
பெருவராயுறையுநீர்மையர்சீர்மைப்பெருங்கடல்வண்ணனும்பிரம
னிருவருமறியாவண்ணமொள்ளெரியாயுயர்ந்தவர்பியர்ந்தநன்மாற்குங்
குருவராய்நின்றார் குரைகழல்வணங்கக்கோணமாமலையமர்ந்தாரே 8

நின்றுணுஞ்சமணுமிருந்துணுந்தேருநெறியலாதனபுறங்கூற
வென்றுநஞ்சுண்ணும்பரிசினரொருபான்மெல்லியலொடுமுடனாகித்
துன்றுமொண்பவ்வமவ்வலுஞ்சூழ்ந்துதாழ்ந்துறுதிரைபலமோதிக்
குன்றுமொண்கானல்வாசம்வந்துலவுங்கோணமாமலையமர்ந்தாரே. 9

குற்றமிலாதார்குரைகடல் சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக்
கற்றுணர்கேள்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்த
னுற்றசெந்தமிழார்மாலையீரைந்துமுரைப்பவர்கேட்பவருயர்ந்தோர்
சுற்றமுமாகித்தொல்வினையடையார்தோன்றுவர்வானிடைப்பொலிந்தே. 10

## திருக்கேதீச்சரப்பதிகம்
### சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளியது

நத்தார்படை ஞானன்பசுவேறிந்நனை கவிழ்வாய்
மத்தம் மதயானையுரிபோர்த்த மணவாளன்
பத்தாகியதொண்டர்தொழுபாலாவியின் கரைமேற்
செத்தாரெலும்பணிவான் றிருக்கேதீச்சரத்தானே 1

சுடுவார்பொடிநீறுநல்ல துண்டப்பிறைகீளுங்
கடமார்களியானையுரியணிந்தகறைக்கண்டன்
படவேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேற்
றிடமாவுறைகின்றான் றிருக்கேதீச்சரத்தானே 2

அங்கம்மொழியன்னாரவரமரர்தொழுதேத்த
வங்கம்மலிகின்றகடன்மாதோட்டநன்னகரிற்
பங்கஞ்செய்தபிறைசூடினன் பாலாவியின்கரைமேற்
செங்கண்ணரவரைத்தான்றிருக்கேதீச்சரத்தானே 3

கரியகறைக்கண்டனல்லகண்மேலொருகண்ணான்
வரியசிறைவண்டியாழ்செயுமாதோட்டநன்னகரிற்
பரியதிரை யெறியா வருபாலாவியின் கரைமேற்
றெரியுமறைவல்லார்திருக்கேதீச்சரத்தானே. 4

அங்கத்துறுநோய்களடியார் மேலொழித்தருளி
வங்கமலிகின்றகடன்மாதோட்டநன்னகரிற்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின்கரைமேற்
செங்கண்ணரவசைத்தான் திருக்கேதீச்சரத்தானே. 5

வெய்யவினையாயதடியார்மேலொழித்தருளி
வங்கமலிகின்றகடன் மாதோட்டநன்னகரிற்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின்கரைமேற்
றெங்கம்பொழில்சூழ்ந்ததிருக்கேதீச்சரத்தானே. 6

ஊனத்துறுநோய்களடியார்மேலொழித்தருளி
வானத்துறுமலியுங்கடன்மா தோட்டநன்னகரிற்
பானத்துறுமொழியாளொடுபாலாவியின்கரைமே
லேனத்தெயிறணிந்தார் திருக்கேதீச்சரத்தானே. 7

அட்டன்னழகாகவரைதன் மேலரவார்த்து
மட்டுண்டுவண்டாடும்பொழின் மாதோட்டநன்னகரிற்
பட்டவரி நுதலாளொடுபாலாவியின் கரைமேற்
சிட்டனமையாள் வான்றிருக்கேதீச்சரத்தானே. 8

மூவரெனவிருவரெனமுக்கண்ணுடைமூர்த்தி
மாவின்கனிதூங்கும்பொழின் மாதோட்டநன்னகரிற்
பாவம்வினையறுப்பார்பயில்பாலாவியின்கரைமேற்
றேவனெனையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே. 9

கறையார்கடல் சூழ்ந்தகழிமாதோட்டநன்னகருட்
சிறையார்பொழில்வண்டியாழ்செயுங்கேதீச்சரத்தானை
மறையார்புகழூரன்னடித்தொண்டனுரைசெய்த
குறையாத்தமிழ்பத்துஞ்சொலக் கூடாகொடுவினையே. 10

*திருச்சிற்றம்பலம்.*



## பறாளாய் முருகமூர்த்தி புகழ்

முந்துமடி யார்கள்தொழு முதல்வனாகி
முத்தமிழா லேத்துபவர் முறையே போற்ற
அந்தமிலா அருள்சுரந்து அமரலோகம்
அந்தரத்தி லிழிந்ததுபோ லழகுமேவச்
சந்ததமும் சதுர்மறையோர் சாமகீதம்
சந்தமுட னிசைத்திடப்பண் ணிசையுஞ்சேரச்
சிந்தைமகிழ் செட்டிமார் சிறப்புற் றோங்கச்
செய்தருளும் பறாளைமுரு கேசபோற்றி 1

ஆகமத்தின் நெறிமுறையே அகிலம்போற்ற
ஆற்றிடுநற் றிருப்பணிகள் அழகாய்த்தோன்ற
ஆகமதில் நிறைந்தவன்பும் அறிவும்கூடி
அந்தணர்கள் பூசைமுறை அமையப் பேணிப்
போகமது இகபரத்தும் பொலிவுற்றோங்கப்
போற்றுறு நல் லறநெறியே பாரில்மல்க
மேகமழை பொழிவதுபோல் மேதினியில்
மேவியருள் பொழிமுருகா போற்றி போற்றி 2

தேவர்கள்வந் தனைசெய்து வரமிரந்து
தேவலோ கப்பதவி மீளப்பெற்றார்
பாவவினை தீர்ப்பதற்குப் பரவுவார்கள்
பக்திசெய்து பறாளையிற் பரவிநிற்பக்
காவலனாய்க் கருமவினை வேர்களைந்தே
கலியுகத்து வரமருளும் கந்தனாகி
மாவடிவா கியசூரன் வடிவமாற்றி
மயிலாக்கி யூர்முருகா போற்றி போற்றி 3

பூவுலகில் மாயைமயக் கறுத்துநின்று
பூசனைசெய் பக்தர்கள் ஓர்பாலாகத்
தாவுசெல்வம் நிலையில்லாத் தன்மைபோர்ந்து
தமைமறந்து போற்றி செய்வார் ஓர்பாலாக
மேவுமருள் பெறுதற்கு மிகவிரும்பி
மேதினியிற் பறாளை நகர் வருவோராகப்
பூவுடனும் பாவுடனும் துதிப்போர்க்கென்றும்
பொலிய அருள் பொழிமுருகா போற்றி போற்றி 4

நற்றவத்தோர் நாடிநின்று நயந்துபோற்ற
நானிலத்தில் நலமனைத்தும் தருவாயென்று
கற்றறிந்த புலவர்களும் கருத்தொன்றித்துக்
காருண்யக் கடவுளெனக் கூறாநிற்பப்
பொற்பதத்தைப் பணிந்துவப்பப் பறாளாய் வந்து
போற்றுவார்க் கவர்வேண்டு வரங்கள் தந்து
குற்றமெலாங் களைந்தவர்தம் குணமேயேற்றுக்
குலவியருள் குமரேசா போற்றி போற்றி 5

பிரணவத்தின் பொருள் தெரியாப் பிரமனன்று
போற்றாது சென்றவனைப் பொறாதழைத்துச்
சிரமதிலே குட்டியுடன் சிறையிலிட்டுச்
சிந்திக்க வைத்தவனைச் சீர்திருத்திப்
பரமசிவன் பரிவோடு கேட்டுவக்கப்
பகரரிய பிரணவத்தின் பொருள்நீயென்று
சிரமசைத்துத் தானதமகிழ் வடையச்செய்யும்
சிறப்புறுப றாளைப்பதி முருகா போற்றி 6

ஆணவத்தின் வலிகெடவுன் அருளைவேண்டி
அன்புடனே வந்தடைந்தார் அகத்திருந்து
பூணரவம் பொலிசிவனே பூவிதலத்துப்
பூசனைகள் புரிவார்க்குப் புதுமையாகக்
காணவென வேலெடுத்துக் கையில் தாங்கிக்
கருதுவார்க் கருள்தரவே கருணை பூத்துப்
பாணருக்கும் பரிசளிக்கப் பரிந்துவந்த
பறாளாயில் முருகவேள் போற்றி போற்றி 7

வெற்றிமிகு மெய்ஞ்ஞான வேலினாலே
வீறுளவஞ் ஞானமதை விரைவில்மாற்றி
உற்றபவ வினைபோக்கி உணர்வினூடே
உத்தமர்கள் வாழ்கின்ற பறாளைநோக்கி
அற்புதமாய் அறுமுகனார் அடிகள்பற்றி
அன்புடனே போற்றிநிற்கும் செட்டிமார்தம்
பொற்புறுநன் மனத்திலெழு போகயோகப்
புண்ணியமெய்ப் பயனார்க்கும் முருகா போற்றி 8



கொடியேற்று விழாமுதலாய்க் கோயில்வந்து
கோலமயில் வாகனரைக் கும்பிட்டேத்திக்
கடிதேற்கும் விரதங்கள் காத்திருந்து
கவின்பெறுநல் விழாக்களுறு காலமெல்லாம்
அடியழித்தன் புடனுள்ளத் தார்வம்பொங்கு
ஆசார சீலமுடன் அடியாரோடு
படிதோய்ந்து பிரதிட்டை பண்ணமேவும்
பறாளைமுரு கேசர்பதம் போற்றி போற்றி 9

சிவநெறிசேர் சீலமது சிறப்புற்றோங்கச்
திருமலியும் செட்டிமார் குடிசீர்தாங்கத்
தவநெறியே போற்றிசெய்து தருமம்வீங்கத்
தம்பொருளைத் திருப்பணிக்குத் தானஞ்செய்து
பவவினைகள் மாற்றுநெறிப் பான்மைசேர்த்துப்
பறாளையுறை நின்பாத மலர்களேத்தி
நவநிதியம் பெறமுயல்வோர் நாடிநிற்ப
நயந்தருள்செய் முருகேசா போற்றி போற்றி 10

*சிவஞானவாரிதி, சைவசித்தாந்த காவலர்,*
*ஞானசிரோன்மணி கு. குருசுவாமி*

கொழும்பு செட்டியார் தெரு
## முத்து விநாயகர்
## பஞ்சகம்

தாரகமந் திரவொலிபோல் தரங்கம் பாடும்
தண்கடல்சார் கொழும்புநகர்ச் செட்டி வீதி
ஊரகத்தே உயர்சிகிரி கோபுரஞ்சேர்
உறையுளிலே ஓங்காரப் பொருளாய் மேவி
சீரகத்தார் புரிவழிபா டுவந்தன் னோர்கள்
சிந்திக்கும் வரப்பிரசா தங்கள் நல்கிப்
பேரளிசெய் முத்துவிநா யகப் பிரானின்
பேருரைக்க நோய்பிணிகள் பெயர்ந்துபோமே

முருகவிழ்மென் நறுமலர்கள் சொரிந்து நாளும்
மூள்கனல் சேர் இழுதெனநெக் குடைந்து நெஞ்சம்
உருகிவழி படுமடியார் கீதம்பாடும்
ஒலியுமறை யந்தணர்கள் ஓமம் பேணும்
பெருநெறியா கமவொலியும் வாத்தியங்கள்
பிறங்கொலியும் கடலொலியோ டுறழ்ந்து மல்கும்
திருவுடைய முத்துவிநா யகர்தம் கோயில்
சேவிப்பார் தங்களைத்தீ வினைசேராவே.

பொன்னிவரும் திருவாத்தி மாலை யோடு
பொற்றிசெயும் மெய்ப் புலவர் புனைந்து சூட்டும்
இன்னிசைப்பா மாலைவயங் கிடுபொற் றோளும்
எண்ணரிய குடிலைகுடி யிருக்கும் ஞான
வன்னமுக மும்நெற்றி மிளிருஞ்சுட்டி
வளரொளியு மாய்ச் செட்டி வீதிக் கோயில்
தன்னிலுறை முத்துவிநா யகர்தாள் போற்றும்
சால்பினரைச் சனனவினைப் பிணிசாராதே

தங்கமிகு மாளிகைகள் ஒருபால் வெள்ளித்
தரங்கமிகு மாழியிட மறுபால் மேவுந்
துங்கமுறும் இளங் கோவர் வீதிசாரும்
தூயநிலா வந்துறு தோ ரண நீள் கோயில்
சங்கமலி முத்துவிநா யகர் பொற்பாத
சலசமலர் அலர்கின்ற தடாகமாகத்
தங்களித யந்தன்னை யாக்குவார்க்குச்
சஞ்சலமித் தலத்தினிலே சார்தலுண்டோ



இந்திரலோ கம்மிதுவோ எனவெப் போதும்
இலகொளிவீ சித்திகழும் இளங்கோவீதி
விந்தைமிகு சித்திரப்பத்திகள் கொண் டோங்கும்
வியன்சினக ரதத்திலுறை நித்திலர்ப்பேர்ச்
சிந்துரவா னனக் கடவுள் சதங்கை யார்க்கும்
செஞ்சரணக் கஞ்சமலர் சிரமேற் கொண்டு
வந்தனை செய் வாரிம்மை ஈரெண் பேறும்
வாய்த்து நித்தி யானந்தம் மருவுவாரே

**பிள்ளைக்கவி. வ. சிவராஜசிங்கம்**

## கொழும்பு பொன்னம்பலவாணேசர்
## பஞ்சகம்

பூவியலும் செல்வமெலாம் ஒருங்குகூடிப்
பொருத்தியவர் நிருநிதிய வளகை நேரும்
தேவியலும் எழில் நகராய்த் திகழ் கொழும்பில்
திங்கள்முடி சூடுபொன்னம் பலவாணேசர்
சேவடித்தா மரைமலரைச் சிரத்தும் தங்கள்
சிந்தையிலும் சூடிவழி படவல் லார்க்குப்
பாவவினை ஆகுலங்கள் பரிதிமுன்னாற்
பனித்துளிபோல் இலவாகிப் பறந்துபோமே

தனதுகயற் கண்ணாலே பருகியம்மை
சாருயிரின் தொகைக்கெல்லாம் வழங்கும் வண்ணம்
கனகமன்றில் ஐந்தொழில் நா டகமியற்றும்
காருண்ய மூர்த்தியிலங் காபுரிக்கண்
சனங்களுங்கண் டுவகையுட னேத்து தற்காய்ச்
சார்ந்துவிளங் கும்பொன்னம் பலவாணேசர்
சினகரத்தைப் பாவவிமோ சனத்தலத்தை
சேவிப்போம் அடியரெலாம் சேரவாரீர்

கருணைவடி வாகியவா மாட்சியின்பால்
காஞ்சியிலே நகிற்குறியும் வளைத்தழும்பும்
மருவிடப்பெற் றெழில்மதுரை மாறன்தன்பால்
மாறாத மாறுபடு தழும்புங் கொண்டு
பொருவில்சிலைத் தழும்பு தவவேடன்தன்பால்
பொருந்தப் பெற்றும்மடியார்க் கெளியரான
வரமலிபொன் னம்லரவா ணேசர்பாதம்
வணங்குவாார்க் கிணங்குவ நாள் கோள்கள் தாமே

தாதவிழும் நறுங்கொன்றைத் தாமத் தோளும்
தருமனைமார்க் கண்டர்க்கா உதைத்த தாளும்
போதருபூங் குழல்மருவு வாமத்தாளும்
பொற்சடிலத் தேபிறையும் பொலிந்து தோன்றும்
சோதிவடிவானபொன்னும் பலவா ணேசர்
துணைமலர்த்தா ளினைத்துணையாக் கொள்ளு வோர்கள்
ஏதிலரால் பிணிவகையால் கலியா லென்றும்
இடர்ப்படுத லின்றியினி தாய்வாழ் வாரே.

செந்தமிழ் தேனொழுகுமொழித் திருவினார்தம்
செங்கையுறை பைங்கிளிக்குத் தேவாரப்பண்
சுந்தர நல்லிசை பயிற்றி மகிழும் செல்வம்
துலங்குகொழும் பிற்பொன்னம் பலவாணேசர்
மைந்துதவழ் சிகரமலி கோயில் மேவும்
மணிகண்டர் மலர்ப்பாதம் வழுத்துவோர்கள்
எந்தவகை வினைப்பகையும் எய்திடாமல்
இருநிலத்தில் இன்பமிக வெய்தி வாழ்வார்

**பிள்ளைக்கவி. வ. சிவராஜசிங்கம்**

## கொழும்பு கொட்டாஞ்சேனை
## வரதராஜ விநாயகர்
## பஞ்சகம்

அருணனை அரையிற் கச்சொளிர் மணியாய்
அணிந்திடு பராபர முதலை
கருணைமும் மதம்பெய் கயானனக் கன்றைக்
கருதுவார் வினைபொடி யருக்கும்
நிருமல இறையை எழிற் கொட்டாஞ்சேனை
நெடுஞ்சிக ராலயக் கோயில்
வரதரா ஜப்பேர் வள்ளலை வணங்கில்
மயலற உதிக்குமெய் உணர்வே

தாதகி மாலை அழகுசெய் வாகுத்
தந்திமா முகவனை மேருப்
பூதர மதனில் பாரதக் காதை
பொறித்தருள் புலவனை யடியார்
தீதுகள் அகற்றி ஆதரவளிக்கத்
திகழ் கொட்டாஞ் சேனையில் மேவும்
மாதுமை சேயை வரதராஜப்பேர்
வள்ளலை வணங்கியுய் வோமே



ஏனலப் புனத்தில் இளையவற்காக
எயினர்தம் பாவைமுன் னாக
தானவெங் களிறாய் நடந்தருளேக
தந்தனை ஆரணப் பொருளை
வானுறு கொட்டாஞ் சேனையா லயத்தில்
மகிழ்ந்துறை வதரராஜப்பேர்
ஞானதே சிகனை நிதம்பணிவோ மேல்
நலமெலாம் நம்மை வந்துறுமே.

மலக்கொடும் பகையை மருவுறா வகையில்
வாழ்த்திடும் கருத்துடை யீரேல்
சிலைக்கொழுந் தெனக்கோ புரமொளிர் கொட்டாஞ்
சேனையிற் சினகரத் தன்பு
வலைப்பரு மியல்பார் வரதரா ஜப்பேர்
வாரண வானன முதலை
உலைப்படு மெழுகா யுருகுளத் துடனே
ஓதியால் வழிபடுவீரே.

மணமறு மலர்கொண் டுனது பொன் னடிகள்
மறந்திட லிலாதுசாத் துவிகக்
குணங்கொடு நிதமர்ச் சனைபுரிந் துவப்பால்
கும்பிடப் பேரருள் புரியாய்
உயர்ந்தவர் தமக்கும் உணர்வரும் பொருளாய்
உள்ளுற நின்றுயிர் புரந்து
வணங்கடி யாருக் கருள் கொட்டாஞ் சேனை
வரதரா ஜப் பெரு மானே.

**பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம்**

## கொழும்பு கொட்டாஞ்சேனை
## முத்துமாரி அம்மை
## பஞ்சகம்

மன்றுபே ருயிர்கள் புரந்தளிக் கின்ற
மாபெருஞ் சக்தியைப் பாஞ்ச
சன்னிய மேந்து நாரணற் கிளைய
சயமகள் தனைமுனம் மகிட
ஒன்னலன் வலங் கொள் சூலியை நீல
ஒளிர்வளர் மேனிநா யகியை
பொன்மலி கொட்டாஞ் சேனையா லயத்தில்
போய்பணிந் தருள் பெறுவோமே.

சீர்தரு புகழூர் ஆகிய கொட்டாஞ்
சேனையில் சிங்கவா கினியாம்
பேர்பெறும் அமிர்த நாயகிநினது
பிரசமார் தாமரைப் போது
நேர்தரு பாதம் சிரசினிற் சூட்டு
நியமங்கொண் டேநெருக் குற்று
ஏர்பெறும் அடியார் வந்திவண் உற்றார்
ஏழையேற் கும்மிடம் வருமோ

பாற்கட லமுதை யுவர்ப்புறச் செய்யும்
பைந்தமி ழினைசளர்த் திடற்காய்
சாற்றரும் மதுரைப் பாண்டியன் மகனாய்த்
தடாதகைப் பேர்கொண் அன்ளாய்நின்
நாற்பெரு மறையின் ஒலிகிளர் சிலம்பு
நயந்தணி பாதமென் கமலம்
ஏற்றியென் தலையில் பதித்தருள் புரிவாய்
எழிற் கொட்டாஞ் சேனைவாழ் இறைவீ.

குறைதரு செல்வம் மலிதரு கொட்டாஞ்
சேனையிற் கோயில் கொண்டருளும்
பிறையொளிர் சடிலப்பிஞ்ஞகன் பாகம்
பிரிவுறா அம்பிகை தனது
நறைவிரி கமல மலரடி தொழுவார்
நலிவுறு தீவினை யகன்றே
இறைநிழ லதனில் எய்திவீற்றிருப்பார்
இடையறா இன்பினை நுகர்ந்தே

கொத்தணி சிகர கோபுர நெருங் கிக்
குலவுறு மெழிற் கொட்டாஞ் சேனை
மெய்த்திருப் பதியும் விமலநா யகர்தம்
விரைகமழ் நெஞ்சமும் பரிவால்
பத்திசெய் யடியார் இதயவா லயமும்
பயிலிடமாக் கொளும் பரையாம்
முத்துமாரிப்பேர் முதல்வியை வணங்க
மூலவேர் வினைமுழு தறுமே

**பிள்ளைக்கவி. வ. சிவராஜசிங்கம்**



மாணிக்கவாச சுவாமிகள் அருளிய

## சிவபுராணம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க 1
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க 2
ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி 3
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி 4
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்துஎல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் 5
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் 6
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணி யனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா 7
பொய் ஆ யின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும் 8
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச் 9
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை 10
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக் 11
கலந்தஅன் பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே 12
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம் ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்



பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே 13
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம் 14
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்டஎந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே 15
போக்கும் வரவும் புணர்வும் இலாப்புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்புஅரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம் 16
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேயோ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார் 17
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று 18
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. 19

*திருச்சிற்றம்பலம்*

சிகர வடவரை குனிய நிமிர்தரு
செருவி லொருபொரு வில்லெனக் கோட்டினர்
செடிகொள் பறிதலை யமண ரெதிரெதிர்
செலவொர் மதலைசொல் வையையிற் கூட்டினர்
திருவு மிமையவர் தருவு மரவொலி
செயவ லவர்கொள நல்குகைத் தீட்டினர்
சிறிய வெனதுபுன் மொழியும் வடிதமிழ்
தெரியு மவர்முது சொல்லெனச் சூட்டினர்
பகரு மிசைதிசை பரவ விருவர்கள்
பயிலு மியறெரி வெள்வளைத் தோட்டினர்
பசிய வறுகொடு வெளிய நிலவிரி
பவள வனமடர் பல்சடைக் காட்டினர்
பதும முதல்வனு மெழுத வரியதொர்
பனுவ லெழுதிய வைதிகப் பாட்டினர்
பரசு மிரசத சபையி னடமிடு
பரத பதயுக முள்ளம்வைத் தேத்துதும்

முகமதி யூடெழு நகைநில வாட
முடிச்சூ ழியமாட
முரிபுரு வக்கொடி நுதலிடு சுட்டி
முரிப்பொ டசைந்தாட
இகல்விழி மகரமு மம்மக ரம்பொரும்
இருமக ரமுமாட
இடுநூ புரவடி பெயரக் கிண்கி
ணெனுங்கிண் கிணியாடத்
துகிலொடு சோர்தரு கொடிநுண் மருங்குல்
துவண்டு துவண்டாடத்
தொந்தி சரிந்திட வுந்தி கரந்தொளிர்
சூலுடை யாலடைமற்
றகில சராசர நிகிலமொ டாடிட
ஆடுக செங்கீரை
அவனி தழைந்திட மவுலி புனைந்தவள்
ஆடுக செங்கீரை.



முதுசொற் புலவர்தெ ளித்தப சுந்தமிழ்
நூல்பாழ் போகாமே
முளரிக் கடவுள்ப டைத்தவ சுந்தரை
கீழ்மே லாகாமே
அதிரப் பொருதுக லிப்பகை ஞன்றமிழ்
நீர்நா டாளாமே
அகிலத் துயிர்கள யர்த்தும றங்கடை
நீணீர் தோயாமே
சிதைவுற் றரசிய னற்றரு மங்குடி
போய்மாய் வாகாமே
செழியர்க் கபயரு மொப்பென நின்றுண
ராதா ரோதாமே
மதுரைப் பதிதழை யத்தழை யுங்கொடி
தாலோ தாலேலோ
மலயத் துவசன்வ ளர்த்தப சுங்கிளி
தாலோ தாலேலோ.

செழுமறை தெளியவ டித்தத மிழ்ப்பதி கத்தோடே
திருவரு ளமுதுகு ழைத்துவி டுத்தமு லைப்பாலாற்
கழுமல மதலைவ யிற்றைநி ரப்பிம யிற்சேயைக்
களிறொடும் வளரவ ளர்த்தவ ருட்செவி லித்தாயே
குழலிசை பழகிமு ழுப்பிர சத்திர சத்தோடே
குதிகொளு நறியக னிச்சுவை நெக்கபெ ருக்கேபோல்
மழலையி னமுதுகு சொற்கிளி கொட்டுக சப்பாணி
மதுரையில் வளரும டப்பிடி கொட்டுக சப்பாணி.

காலத் தொடுகற் பனைகடந்த
கருவூ லத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுண் மணியே யுயிரால
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தளிபழுத்த
மலர்க்கற் பகமே யெழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே யுயிர்த்துணையாம்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியிற்
றுரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முத்தந் தருகவே.

தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

குலத்தோடு தெய்வக் குழாம்பிழிந் தூற்றிக்
குடித்துச் சுவைத்துமிழ்ந்த
கோதென்று மழல்விடங் கொப்புளிக் கின்றவிரு
கோளினுச் சிட்டமென்றும்
கலைத்தோடு மூடிக் களங்கம் பொதிந்திட்ட
கயரோகி யென்றுமொருநாள்
கண்கொண்டு பார்க்கவுங் கடவதன் றெனவும்
கடற்புவி யெடுத்திகழவிட்
புலத்தோடு முடுமீன் கணத்தோடு மோடுநின்
போல்வார்க்கு மாபாதகம்
போக்குமித் தலமலது புகலில்லை காண்மிசைப்
பொங்குபுனல் கற்பகக்கா
டலைத்தோடு வைகைத் துறைப்படி மடப்பிடியொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே.

குலைபட்ட காந்தட் டளிர்க்கையிற் செம்மணி
குயின்றவம் மனைநித்திலம்
கோத்தவம் மனைமுன் செலப்பின் செலுந்தன்மை
கோகனக மனையாட்டிபாற்
கலைபட்ட வெண்சுடர்க் கடவுடோய்ந் தேகவது
கண்டுகொண் டேபுழுங்கும்
காய்கதிர்க் கடவுளும் பின்றொடர்வ தேய்ப்பக்
கறங்கருவி தூங்கவோங்கும்



மலைபட்ட வாரமும் வயிரமும் பிறவுமா
மாமணித் திரளைவாரி
மறிதிரைக் கையா லெடுத்தெறிய நாற்கோட்டு
மதகளிறு பிளிறியோடும்
அலைபட்ட வைகைத் துறைச்சிறை யனப்பேடை
அம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகுத்தபெண்
அம்மானை யாடியருளே.

இழியும் புனற்றண் டுறைமுன்றில்
இதுவெம் பெருமான் மண்சுமந்த
இடமென் றலர்வெண் கமலப்பெண்
இசைப்பக் கசிந்துள் ளுருகியிரு
விழியுஞ் சிவப்ப வானந்த
வெள்ளம் பொழிந்து நின்றனையால்
மீண்டும் பெருக விடுத்தவற்கோர்
வேலை யிடுதன் மிகையன்றே
பிழியு நறைக்கற் பகமலர்ந்த
பிரச மலர்ப்பூந் துகண்மூழ்கும்
பிறைக்கோட் டயிரா பதங்கூந்தற்
பிடியோ டாடத் தேனருவி
பொழியும் பொழிற்கூ டலிற்பொலிவாய்
புதுநீ ராடி யருளுகவே
பொருநைத் துறைவன் பொற்பாவாய்
புதுநீ ராடி யருளுகவே.

இருபதமு மென்குரற் கிண்கிணியு முறையிட்
டிரைத்திடு மரிச்சிலப்பும்
இறுமிறு மருங்கென் றிரங்குமே கலையும்பொன்
எழுதுசெம் பட்டுவீக்கும்
திருவிடையு முடைதார மும்மொட் டியாணமும்
செங்கைப் பசுங்கிள்ளையும்
திருமுலைத் தரளவுத் தரியமும் மங்கலத்
திருநாணு மழகொழுகநின்
றருள் பொழியு மதிமுகமு முகமதியி னெடுநில
வரும்புகுறு நகையுஞான
ஆனந்த மாக்கடல் குடைந்துகுழை மகரத்தொ
டமராடு மோடரிக்கட்
பொருகயலும் வடிவழகு பூத்தசுந் தரவல்லி
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே

*திருச்சிற்றம்பலம்*

உ

திருச்சிற்றம்பலம்

# திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்

## சிறப்புப்பாயிரம்

### நேரிசை வெண்பா

செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்திற் பதிவாழுங்
கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தான் - அந்தோ
திருமாது சேர்மார்பன் தேர்ப்பாகற் கன்பு
தருமால் பகழிக்கூத் தன்

### அவையடக்கம்

அத்தனையும் புன்சொல்லே யானாலும் பாவேந்தர்
எத்தனையுங் கண்டுமகிழ்ந் தெய்துவார் - முத்தி
புரக்குமரன் தந்தகந்தன் பூணணிமுந் நான்கு
கரக்குமரன் பிள்ளைக் கவி

### நூற்பயன்

மருநாள் மலர்ப்பொழில் உடுத்ததட மெங்கும் அலை
வாய்கொழித் தெறியுமுத்தை
வண்டலிடும் எக்கர்புடை சூழ்திருச் செந்தில்வரு
மயில்வா கனக்கடவுளெங்

குருநாதன் ஒருதெய்வ யானை தன் பாகன்
குறக்கொடிக் குந்தழைசிறைக்
கோழிக் கொடிக்குங் குமார கம்பீரன்
குறும்பிறை முடிக்கும்பிரான்

இருநாழி நெற்கொண்டு முப்பத்தி ரண்டறமும்
எங்குமுட் டாதளக்கும்
இறைவிதிரு முலையமுத முண்டுஞா னம்பெருகும்
எம்பிரான் இனியபிள்ளைத்

திருநாமம் எழுதுவார் கற்பார் படிப்பார்
செம்போது அறப்புரந்து
தேவாதி தேவரும் பரவுசா யுச்சியச்
சிவபதத் தெய்துவாரே.





### திருமால்

பூமா திருக்கும் பசுங்களபப்
புயபூ தரத்துப் புருகூதன்
போற்றக் ககன வெளிமுகட்டுப்
புத்தேள் பரவப் பொதிகைமலைக்

கோமா முனிக்குத் தமிழுரைத்த
குருதே சிகனைக் குறைகடற்குக்
குடக்கே குடிகொண் டிருந்தசெந்திற்
குமரப் பெருமான் தனைக்காக்க

தேமா மலர்பொற் செழும்பொகுட்டுச்
செந்தா மரையில் வீற்றிருக்குந்
தேவைப் படைத்துப் படைக்குமுதல்
சேரப் படைத்துப் படைக்கும் உயிர்

ஆமா றளவுக் களவாகி
அனைத்துந் தழைக்கும் படிகருதி
அளிக்கும் படிக்குத் தனியேசங்
காழி படைத்த பெருமாளே

### சிவபெருமான்

உடல்வளை குழவி மதியமும் நதியும்
உரகமும் ஒழுகு செஞ்சடைக் காட்டினர்
உமைமுலை குழைய மருவிய புனிதர்
உரைகொடு பரவு தொண்டரைக் காத்தவர்
உமிழ்திரை மகர சலதியில் விளையும்
உறுவிட வடவை கண்டமட் டேற்றினர்
உடைமணி கனக பரிபுர முரல
ஒருமுறை பவுரி கொண்டமெய்க் கூத்தினர்

வடவரை முதுகு நெளிநெளி நெளிய
வரிசிலை யெனவொர் அம்பினைக் கோத்தவர்
மறுவறு முழுவெண் நிலவெழு முறுவல்
வளரொளி இருள்வ னங்கெடப் பூத்தவர்
மருவிய சகள வடிவினர் அரிய
வடகடலை தமிழ்வ ளம் பெறச் சேர்த்தவர்
மதுரையில் இறைவர் இரசத பொதுவர்
மணமலி பதயு கங்களைப் போற்றுதும்

இடவிய மதுர வரியளி குமுறி
இடறிய களப குங்குமத் தூட்பொதி
இமசலம் ஒழுகு கனதன விரகம்
எழுகுற வனிதை சிந்தையிற் சேர்ப்பனை
இடிபடு முரச முழவுடன் அதிர
எதிர்பொரு நிருதர் தம்படைப் போர்க்களம்
இடமற முதிய கழுதுகள் நடனம்
இடவடல் புரியு மொய்ம்பனைத் தூற்றிய

கடதட வழுவை முகமுள கடவுள்
கருணையின் முதிய தம்பியைப் பார்பதி
கரமலர் அணியில் விழிதுயில் மருவி
களிபெறு குதலை மைந்தனைப் பூப்பயில்
கடிகமழ் தருவின் இறைமகள் புதிய
கலவியின் முழுகு கொண்கனைப் போற்றிசெய்
கலைமகள் பரவு குமரனை மதுர
கவிதரு குரிசில் கந்தனைக் காக்கவே

## உமையம்மை

அரிபிரமர் சந்த தம்பு கழ்ந்திடு
பரசுடைய நம்பர் பங்கின் மென்கொடி
அகிலலோகமும் ஆதரத் தாற்ப டைத்தவள்
அரிவைமட மங்கை மென்க னங்குழை
திரிபுரை அணங்கு கங்கை அம்பிகை
அகளமாய்அனு பூதியிற் பூத்த பொற்கொடி
அபினவை முகுந்தர் தங்கை சுந்தரி
உரகபண பந்தி கொண்ட கங்கணி
அமுதமூறிய பாடலுக் கேற்ற சொற்குயில்
அறுசமய முங்க லந்து நின்றவள்
மறலிபர வும்ப்ர சண்ட சங்கரி
அழகெலாமிது தானெனெப் போற்று சித்திர

முரிபுருவ வஞ்சி திங்கள் தங்கிய
திருமுகம லர்ந்த பைங்க ருங்கிளி
முதல்விபூரணி ஞானவித் தாய்க்கி ளைத்தவள்
முருகுவிரி கொந்த ளம்பி றங்கிய
மணிமவுலி மண்ட லங்கொள் செஞ்சடை
முடிமனோன்மணி வாலைவற் றாக்கு ணக்கடல்
முகிள்முலை சுமந்து நொந்த சைந்திறும்
இறுமென் மருங்கி ரங்க இன்புறு
முறுவலாடிய கோளமத் தாற்பெ ருத்தவள்



முறைமுறை முழங்கு கின்ற கிண்கிணி
பரிபுரம் அலம்பு செ ம்ப தம்புரை
முளரிநாண்மலர் வாழ்வெனப் போற்றி நிற்குதும்

உரியபதி னெண்க ணங்க ளஞ்சது
மறைமுனிவ ரும்ப ரிந்து நின்கழல்
உறுதிதானென நாவெடுத் தேத்தி நித்தலும்
உளமிகு மகிழ்ந்து செங் க ரங்களின்
மலர்கொடு வணங்கி யஞ்சல் என்றமை
உடைமையாயருள் நீயெனக் காத்த நட்பனை
உடுமுக டதிர்ந்து விண் தலங்களும்
அரியபகி ரண்ட மும்பி ளந்திட
உதறுதோகை மயூரனைத் தோற்ற முற்றெழும்
உபநிடத மந்த்ர தந்தி ரந்தனில்
அசபையி லடங்கும் ஐம்பு லங்களில்
உவகைகூரும னோகரக் கூத்தனைபொரு

தரியலர் நெருங்கு செங்க ளம்புகு
நிசிசரர் துணிந்த வெம்ப றந்தலை
தழுவுபாடல் விசாகனைப் பாற்க டற்றரு
தரளநகை செங்க ருங்கண் இந்திரை
குறமகள் மணம்பு ணர்ந்த திண்புய
சயிலமோகன மார்பனைத் தோட்டி தழ்ப்பொதி
தழைமுகை யுடைந்து வீண்ட ரும்பிய
புதுநறவு சிந்து பைங்க டம்பணி
தருணசீதள வாகனைக் கோட்ட கத்துயர்
சரவண மிலங்க வந்த கந்தனை
முருகனை விளங்கு செந்தில் வந்திடு
சமரமோகன வேலனைக் காத்த ளிக்கவே

## பிள்ளையார்

கருணையின் வழிபடு முதியவள் தனையுயர்
கயிலையி னொருமுறை உய்த்த கருத்தினர்
கனவட கிரிமிசை குருகுல மரபினர்
கதைதனை யெழுதிமு டித்த கருத்தினர்
கலைமதி யினை இரு பிளவுசெய் தொருபுடை
கதிரெழ நிறுவிய ஒற்றை மருப்பினர்
கடுநுகர் பரமனை வலமுறை கொடுநிறை
கனிகவர் விரகுள புத்தி மிகுத்தவர்

பொருவரும் இமகிரி மருவிய பிடிபெறு
பொருகளி றெனமிகு பொற்பு விளைத்தவர்

பொதிஅவிழ் நறுமலர் அணைமிசை தமதுடல்
புளகம தெழவொரு சத்தி தரித்தவர்
பொதுவற விடுசுடர் முழுமணி யொளிவிடு
பொலிவெழு பவளம தித்த நிறத்தினர்
புகர்முகம் உடையவர் குடவயி றுடையவர்
புகழிரு செவியில்நி றுத்தி வழுத்துதும்

இருமையும் உதவிய சிவபர சமயமும்
இமையவர் உலகும எித்த களிப்பனை
இசைமுரல் மதுகர முறைமுறை பெடையுடன்
இடறிய முகைவிரி செச்சை வனப்பனை
இளகிய புளகித மலைமுலை யரமகள்
இகலிய புலவிய கற்று மழுப்பனை
இகல்புரி பரநிசி சரர்குல கலகனை
எனைவழி யடிமைப டைத்திடு நட்பனை

அருமறை யுரைதரு பிரமனை அமரரும்
அடிதொழ விடுசிறை விட்ட திறத்தனை
அடியவர் கொடுவினை துகள்பட நடமிடும்
அழகிய சரணம் அளித்த வரத்தனை
அளவறு கலவியின் முழுகிய குறமகள்
அழகினில் ஒழுகியி ருக்கு மயக்கனை
அலையெறி திருநகர் மருவிய குமரனை
அறுமுக முருகனை நித்தல் புரக்கவே

## கலைமகள்

அவனி பருகிய மால்திரு உந்தியில்
அமரு மொருபிர மாவெனும் அந்தணன்
அரிய சதுமறை நாவிலி ருந்தவள்
அளவியல் பலகலை யோதியு ணர்ந்தவள்

தவள முளரியல் வாழ்வபு ரிந்தவள்
தவள மணிவட மாலைபு னைந்தவள்
தவள வடிவுள வாணிசு மங்கலி
தனது பரிபுர பாதம் இறைஞ்சுதும்

உவரி முதுதிடர் பாயவி டம்பொதி
உரகன் மணிமுடி தூள்பட மந்தரம்
உலைய எறிசுழல் மாருதம் எங்கணும்
உதறு சிறைமயில் வாகனன் இன்புறு

சுவரில் வரிவளை சூல்கொடு தங்கிய
கமட முழகினில் ஏறெநெ டுந்திரை



கதறு கடலலை வாய்முரு கன்பெறு
கருணை தருகவி மாலைவி ளங்கவே

## அரிகரபுத்திரன்

வரியு நீள்சடி லத்திடை மகுட ராசித ரித்தவர்
வளையு நீடுக ருப்புவில் மதுர வாளிதொ டுத்தவர்

அரிய பூரணை புட்கலை அரிவை மார்இரு பக்கமும்
அழகு கூரும கிழ்ச்சியர் அடிவிடாமல்வ ழுத்துதும்

உரிய நான்மறை நித்தலும் உறுதி யாகவ ழுத்திய
உவமை யாசுக வித்துறை உதவு நாவலன் முற்றிய

பரிய வாளைகு தித்தெழு பரவை சூழுந கர்க்கிறை
பழநிவேல வனைப்புகழ் பனுவல் மாலைத ழைக்கவே

## பசுபதி

விளையுஞ் செழுந்தேன் உடைந்துமுகை விண்டொழுகு
வெண்டா மரைப்பொகுட்டு
வேதா முடித்தலை முடிக்குஞ் சடாடவியள்
வெங்கொலை மடங்கலேறி

வளையும் பனிப்பிறை மருப்புக் குறுங்கண்நெடு
மயிடாசு ரன்சிரத்தில்
வலியநடம் இடுகுமரி பகவதிச ரோருக
மலர்த்தாள் வணக்கமு றுவாம்

உளையுந் தடந்திரைத் திமிர தம ரக்குழி
உவர்ப்பறா மகரவேலை
ஒலியிடுங் குண்டகழி சுவறிமே டாகவேல்
உள்ளுறை கழித்துநிருதக்

கனையுங் களைந்துகலன் அணிபுலோ மசைதன்மங்
கலநாண் அளித்த பெருமாள்
கடியமயில் வாகனப் பெருநாள் உவந்தெனது
கவிமாலை கொண்டருளவே

## காளி

காயுங் கொடும்பகைத் தாருக விநாசனி
கபாலிகங் காளிநீலி
காளிமுக் கண்ணிஎண் தோளிமா தரிவீரி
கவுரிகலை யூர்திகன்னி

பாயுந் தழற்புகைப் பாலைக் கிழத்திவெம்
பண்ணம் பணத்திமோடி
பரசுதரன் உடன்நடனம் இடுசூலி சாமுண்டி
பாதார விந்த நினைவாம்

ஆயும் பெரும்பனுவ லாசுகவி மதுரகவி
அரியசித் திரகவிதை வித்
தாரகவி இடுமுடிப் புக்குள மயங்காமல்
அடியவர்க் கருள் குருபரன்

தேயும் பனிப்பிறைத் திருநுதற் கடல்மகளிர்
தெள்நித் திலங்கொழித்துச்
சிற்றில்விளை யாடல்புரி யுந்திருச் செந்தில்வரு
சேவகன் புகழ்பாடவே

### ஆதித்தர்

வெள்ளப் பெருந்துளி இறைக்கும் பெருங்காற்று
வெண்டிரையின் மூழ்கியேழு
வெம்புரவி ஒற்றையா ழித்திடந் தேரேறி
வேதபா ரகர் இறைஞ்சப்

பள்ளக் கடல்திரை கலக்கியூ ழியின் இருட்
படலமுழு துந்துடைத்துப்
படர்சுடர் விரித்துவரு பன்னிரு பதங்கர்பொற்
பாமதலர் சென்னிவைப்பாம்

உள்ளக் களிப்பாற வரிவண்டு பண்பாட
ஓதிம நடிக்கமுள்வாய்
உட்குடக் குன்வலம் புரிமுத்தம் உமிழநீர்
ஓடையிற் குருகுகாணக்

கள்ளக் கருங்கட் சிவந்தவாய் வெண்ணகைக்
கடைசியர் நுளைச்சியருளங்
களிகூரும் அலைவாய் உகந்தவே லனையெங்கள்
கந்தனைக் காக்கவென்றே

### முப்பத்துமுக்கோடி தேவர்கள்

பொதுவி லாடு மத்தற்கு நீடு
பொருளை யோதி ஒப்பித்த சீலர்
புணரி தோய்ந கர்க்குச்ச காயர்
புலமை நீதி யொப்பற்ற கேள்வர்



குதலை வாய்மொ ழிச்சத்தி பாலர்
குருதி பாய்க திர்க்கொற்ற வேலர்
குறவர் பாவை சொற்கத்தின் மோகர்
குமரர் காவ லுக்கொத்த காவல்

மதுர கீத விற்பத்தி வாணர்
தகுட வேணி முத்துத்த ரீகர்
மவுன மோன பத்திக்க லாபர்
மனையில் வாழ்வு வைப்புற்ற நேயர்

முதுமை யான சொற்பெற்ற நாவர்
முனிவர் வேள்வி இச்சிக்கும் ஊணர்
முடிவி லாத கற்பத்தின் ஊழி
முதல்வர் தேவர் முப்பத்து மூவரே

### செங்கீரைப்பருவம்

வெங்காள கூடவிடம் ஒழுகுபற் பகுவாய்
விரித்துமா சுணம் உமிழ்ந்த
வெங்கதிர் மணிக்கற்றை ஊழியிரு ளைப்பருக
வேய்முத் துதிர்ந்து சொரியக்

கங்காளர் முடிவைத்த கங்கா நதிக்கதிர்
கடுப்பக் குறுங்க வைக்காற்
கவரியின் பருமுலைக் கண்திறக் தொழுகுபால்
கதிர்வெயிற் படமு ரிந்து

மங்காமல் இரசதத் தகடெனச் கடர்விட
மலைக்குறவர் கண்டெ டுத்து
வண்தினைக் கெருவிடுஞ் சாரலிற் கரியகுற
மகளிருளம் ஊச லாடச்

செங்காவி விழிபருகு பன்னிருகை மேகமே
செங்கீரை யாடி யருளே
திரையெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை யாடி யருளே.

கறைகொண்ட முள்ளெயிற் றுத்துத்தி வரியுடற்
கட்செவிப் ப.:.ற லைநெடுங்
காகோ தரச்சிர நெளிக்கவட பூதரங்
கால்சாய மகரம் எறியுங்

துறைகொண்ட குண்டகழ்ச் சலராசி யேழுஞ்
சுறுக்கெழ முறுக்கெ யிற்றுச்
சூரன் பயங்கொளச் சந்த்ரசூ ரியர்கள்செந்
தூளியின் மறைந்தி டத்திண்

பொறைகொண்ட சுரர்மருவும் அண்டகோ ளகைமுகடு
பொதிரெறிய நிருதர் உட்கப்
பூச்சக்ர வாளகிரி கிடுகிடென வச்சிரப்
புருகூதன் வெருவி வேண்டுந்

திறைகொண்ட ளக்கவரு மயிலேறு சேவகா
செங்கீரை யாடி யருளே
திரையெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை யாடி யருளே.

எர்கொண்ட பொய்கைதனில் நிற்குமொரு பேரரசின்
இலைகீழ் விழின்ப றவையாம்
இதுநிற்க நீர்விழின் கயலாமி தன்றியோர்
இலையங்கு மிங்கு மாகப்

பார்கொண்ட பாதியும் பறவைதா னாகஅப்
பாதியுஞ் சேல தாகப்
பார்கொண் டிழுக்க அது நீர்கொண் டிழுக்கவிப்
படிகண்ட ததிச யமென

நீர்கொண்ட வாவிதனில் நிற்குமொரு பேழ்வாய்
நெடும்பூதம் அதுகொண் டுபோய்
நீள்வரை யெடுத்த தன் கீழ்வைக்கும் அதுகண்டு
நீதிநூல் மங்கா மலே

சீர்கொண்ட நக்கீர னைச்சிறை விடுத்தவா
செங்கீரை யாடி யருளே
திரையெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை யாடி யருளே.

கந்தமலி நெட்டிதழ்க் குறுமுகைப் பாசடைக்
கமலமல ரைக்க றித்துக்
கடைவாய் குதட்டும் புனிற்றெருமை தனகுழக்
கன்றுக் கிரங்கி யோடிக்

கொந்தவிழ் கருங்குவளை ஓடைத் தடாகக்
குரம்பைக் கடந்து செந்நெற்
குலைவளைக் கும்பழக் குலைமடற் கதலிக்
குருத்தற மிதித்து மீளப்



பந்தரிடு சூலடிப் பலவுதரு முட்குடப்
பழமெலாம் இடறி வெள்ளைப்
பணிலஞ் சொரிந்தநித் திலமுறுத் தப்பதை
பதைத்துமுலை பாலு டைந்து

சிந்தமக ராழியலை யோடுபொருத செந்தூர
செங்கிரை யாடி யருளே
செந்நிறக் குடுமிவேண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடி யருளே.

வீருட வெங்கதிர்ப் புகர்முகக் கூரிலை
மிகுத்தவே லுறை கழித்து
வெவ்வாய் பிளந்துசிறு கட்பேர் இடாகினிகள்
விளையாட வெங்க வந்த

மாருட முதுபகட் டுயர்பிடர்க் கரியநற
மறலிஇரு கைச லித்து
மன்ருட உடல்விழிக் குரிசில்கொண் டாடநெடு
மாகமுக டிடைவெ ளியறப்

பாருட அம்பொற் கிரீடம் பரித்தலகை
பந்தாட விந்தா டவிப்
பாலைக் கிழத்திமுக் கவரிலைச் சூலம்
பசுங்கொழுங் குருதி வெள்ளச்

சேருட வென் றுசிறு முறுவலா டுங்குமர
செங்கீரை யாடி யருளே
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடி யருளே.

மகரசல ராசிதனில் வருணன்வந் தடிபரவி
வைத்தமணி முத்து மாலை
வடபூ தரத்திலவிழும் அருவியென உத்தரிக
மார்பிலூ டாட மன்னுந்

தகரமல ரிதழ்முருகு கொப்புளிக் குருசிகைத்
தமனியச் சுட்டி ஆடத்
தவளமுழு மதியமுத துளியெனத் திருமுகத்
தரளவெயர் வாட முழுதும்

பகரவரு மறைமுனிவர் கொண்டாட மழுவாளி
பங்காளி திருமு லைப்பால்
பருகக் குழைந்துசிறு பண்டியுந் தண்டையும்
பாதமும் புழுதி யாடச்

சிகரவரை அரமகளிர் சிறுமுறுவ லாடநீ
செங்கீரை யாடி யருளே
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடி யருளே.

வேறு

இந்திர னுஞ்சசி யும்பர வும்படி
யிங்கே வந்தார்காண்
இந்திரை யுங்கர சங்கமு குந்தனும்
இந்தா வந்தார்பார்

அந்தண னுங்கலை மங்கையு நின்சர
ணஞ்சேர் கின்ருர்போய்
அண்டரு டன்பல தொண்டர்ப ணிந்தனர்
அஞ்சே லென்ருளாய்

முந்துத டந்திரை யுந்துவ லம்புரி
மொண்டே கொண்டேக
முன்றில்தொ றுந்தர ளங்கள் உமிழ்ந்திட
முந்தூர் நந்தூருஞ்

செந்தில்வ ளம்பதி வந்தரு ளுங்குக
செங்கோ செங்கீரை
தென்றல்ம ணங்கமழ் குன்றுபு ரந்தவ
செங்கோ செங்கீரை

வரைபொரு புளகித மலைமுலை அரிவையர்
வந்தார் பந்தாட
மறிகட லிறைதரு நவமணி வடமது
வண்டார் தண்தார்பார்

உரைபொரு கவிஞரு முனிவரும் அமரரும்
உன்போ லுண்டோ தான்
உரையெமர் வழிவழி யடிமையி துளதென்
உன்பா லன்பனார்

கரைபொரு கடறிட ரெழமயில் மிசைவரு
கந்தா செந்தூரா
கழிமட அனமொடு முதுகுரு கொருபுடை
கண்சாய் தண்கானல்

திரைபொரு திருநகர் மருவிய குருபர
செங்கோ செங்கீரை



செருவினில் எதிர்பொரு நிசிசரர் தினகர
செங்கோ செங்கீரை

வேறு

உரைசெய் வரையர மகளிர் முறைமுறை
உன்பேர் கொண்டாட
உலகும் இமையவர் உலகும் அரகர
உய்ந்தோம் என்றா

வரைசெய் வனமுலை மகளி ரெழுவரும்
வந்தே பண்பாட
மலய முனியொடு பிரம முனிதொழ
வந்தார் கண்டாயே

கரையின் மணலிடு கழியில் நெடியக
லஞ்சே ருஞ்சார்பிற்
கரிய முதுபனை அடியில் வலைஞர்க
ணஞ்சூழ் மென்கானில்

திரையில் வளை தவழ் நகரில் வருகுக
செங்கோ செங்கீரை
செருவில் நிசிசர திமிர தினகர
சொங்கோ செங்கீரை

வேறு

குறுமுகை விண்ட நெட்டிலைத் தாழை
அடியில்வி ளைந்த முட்குடக் காயில்
இனிய குவளை யோடையில் விண்தோ யுந்தேவர்
குணலைபு ரிந்த கற்பகச் சோலை
நிழலிடு பந்த ரிட்ட பொற்றூணில்
அளவர் குடிலில் வாசலில் நின்றோடுந் தோணி
குழுவொடு வந்து விட்டிளைப் பாறு
துறைமணல் வண்ட லிட்டுவற் றாத
பழைய குமிழி வாவியில் வண்டா னந்தாவுங்
குரவுநெ ருங்கும் எக்கரிற் கானல்
உழுநர்ப ரம்பின் நெற்குலைத் தாளில்
இளைய குமரர் ஊர்சிறு திண்டேர் மென்காவில்

இறுகுகு ரும்பை யொத்தபொற் பார
நகிலரி ருந்து வைத்தவைப் பூசல்
அருகில் இளைஞர் ஊடலில் வண்டார் தண்டாரில்
எவருமகிழ்ந்த சித்திரச் சாலை

நிழன்மணி துன்று தெற்றியில் தேவர்
மகுடம் இடறு பூழியில் வங்கா ளஞ்சீனம்
எனமொழி தங்கும் அற்புதத் தீவில்
வணிகரின் வந்த மிக்கபட் டாடை
வகையி லெறியும் ஆரவ டம்பூ ணும்பூணில்
இரைகவர் ஞெண்டு முக்குளித் தூறும்
அளறுகி டங்கில் வித்துவித் தாரத்
துரவில் இடுமுள் வேலியில் வெங்கா மன்காண

முறுகவி ளைந்து முற்றி முத்தேறு
கரியக ரும்பு சுற்றுசிற் றாலை
நிலையின் முதிய தாழியில் வெந்தா றும்பாகின்
முடியைவி ளம்பி வைத்துமுட் டாது
கடைசித ருகின்ற கட்குடப் பானை
முதுகின் முளைகொள் சாலியின் மென்பூ கந்தோறு
முருகுது ளும்பு கொத்துடைப் பாளை
சிதறியு திர்ந்த பித்திகைப் பீட
மறுகின் முதல்வர் தேவியர் பந்தாடுங் காவின்
முனிவர்வி ரும்பு கற்புடைப் பான்மை
மகளிர்கள் மொண்டே டுத்தகைச் சாலின்
மடுவில் முழுகு மேதியில் வம்பே செஞ்சேல்பாய்

செறுவில்வி ளைந்த நெற்குலைக் காயில்
உழவிலு டைந்த கட்டியிற் பார
மதகு செறியும் ஏரியின் மண்டூ கம்பானல்
செருமிமு ழங்கு கற்பிளப் பான
புடையின்வி ழும்பு னற்பெருக் கான
தமர திமிர வாவியி லெங்கே யுந்தாவுந்
திரையில் வலம்பு ரிக்கணத் தோடு
பணிலமு ழங்கு பட்டினக் காவல்
திகிரி முருக வேலவ செங்கே செங்கீரை
தினகரர் அஞ்ச விட்புலத் தேவர்
மகபதி முன்கு வித்த வித்தார
மவுலி திறைகொள் சேவக செங்கோ செங்கீரை

## தாலப்பருவம்

அடரும் பருநவ மணிமுடி அமரரும்
அமரர்க் கிறைவனுநீ
டளகைந ராதியும் ஈரோன் பதின்மரும்
அருமறை முனிவோருஞ்



சுடருந் தருமிரு சுடரும் பரவிய
தோகைய ரெழுவருமுத்
தொழின்முக் கடவுளும் அவரவர் தங்குறை
சொல்லித் துதிசெய்தார்

படருங் கிரணப் பரிதி நெடுங்கதிர்
பாயும் பகிரண்டம்
பழுமரம் என்னப் பனையென நிமிரும்
பாழிக் கைந்நீட்டித்

தடவும் புகர்முக தந்திக் கிளையாய்
தாலோ தாலேலோ
சந்த மணங்கமழ் செந்திற் பதியாய்
தாலோ தாலேலோ

கங்குல் பொருந்திய குவளைக் குழியில்
கழியில் பழனத்தில்
கரையிற் கரைபொரு திரையில் வளைந்த
கவைக்கால் வரிஅலவன்

பொங்கு குறுந்துளி வாடையின் சொந்து
பொறாதே வெயில்காயும்
புளினத் திடரில் கவரில் துரவில்
புன்னை நறுந்தாதில்

கொங்கு விரிந்த மடற்பொதி தாழைக்
குறுமுட் கரியபசுங்
கோலச் சிறிய குடக்கா யில்புயல்
கொழுதுஞ் செய்குன்றிற்

சங்கு முழங்கிய செந்திற் பதியாய்
தாலோ தாலேலோ
சமய விரோதிகள் திமிர திவாகர
தாலோ தாலேலோ

வேறு

தண்தே னொழுகு தொழிமடவார்
தாமங் கொழுதிச் சுருண்டிருண்டு
தமரக் களிவண் டடைகிடந்து
தழைத்து நெறித்த குழற்பாரங்

கொண்டே மெலிந்த தல்லாது
குரும்பைக் களப முலைசுமந்து
கொடிபோல் மருங்குல் குடிவாங்கக்
குழையிற் குதித்த விழிக்கயலைக்

கண்டே வெருவிக் கயல்மறுகக்
கனக வெயில்மா ளிகையுடுத்துக்
ககனம் தடவுங் கோபுரத்தைக்
கருதி வடவெற் பெனக்கதிரோன்

திண்தேர் மறுகுந் திருச்செந்தூர்ச்
செல்வா தாலோ தாலேலோ
தேய்வக் களிற்றை மணம்புணர்ந்த
சிறுவா தாலோ தாலேலோ

பாம்பால் உததி தனைக்கடைந்து
படருங் கொடுங்கார் சொரிமழைக்குப்
பரிய வரையைக் குடைகவித்துப்
பசுக்கள் வெருவிப் பதறாமற்

காம்பால் இசையின் தொனியழைத்துக்
கதறுந் தமரக் காளிந்திக்
கரையில் நிரைப்பின் னேநடந்த
கண்ணன் மருகா முகையுடைக்கும்

பூம்பா சடைப்பங் கயத்தடத்திற்
புனிற் றுக் கவரி முலைநெரித்துப்
பொழியும் அமுதந் தனைக்கண்டு
புனலைப் பிரித்துப் பேட்டேகினந்

தீம்பால் பருகுந் திருச்செந்தூர்ச்
செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம் புணர்ந்த
சிறுவா தாலோ தாலேலோ

வேறு

மங்கல மங்கலநூல் எங்குமொ ழிந்தனர்காண்
வானோர் ஏனோர்போய்
வந்துவ ணங்கினர்மேல் அந்தர துந்துபிகேள்
வாரூ டாடாதே

கொங்கைசு மந்திடைநூ லஞ்சும் அணங்கனையார்
கூடா தூடாரோ
கொண்டவ ரந்தருவாய் அண்டர்பெ ருந்தவமே
கோமான் ஆமாநீ

செங்கம லந்தனிலே பைங்குமு தங்களிலே
சேல்பாய் வானாடா



தென்றலு டன்றமிழ்தேர் தென்பொதி யம்பயில் வாழ்
தேனார் தார்மார்பா

சங்குவ லம்புரிசூழ் செந்தில்வ ளம்பதியாய்
தாலோ தாலேலோ
சங்கரி தன்குமார மங்கையர் தங்கணவா
தாலோ தபலேலோ

வேறு

மரகத வடிவம் செங்கதிர் வெயிலால்
வாகாய் வாடாதோ
மதிமுக முழுதுங் தண்துளி தரவே
வார்வேர் சோராதோ

கரமலர் அணைதந் தின்புறு மடவார்
காணா தேபோமோ
கனமணி குலவுங் குண்டலம் அரைஞா
ணோடே போனால்வார்

பொருமிய முலையுந் தந்திட வுடனே
தாய்மார் தேடாரோ
புரவலர் எவருங் கண்டடி தொழுவார்
போதாய் போதாநீள்

சரவண மருவுந் தண்டமிழ் முருகா
தாலோ தாலேலோ
சதுமறை பரவுஞ் செந்திலை யுடையாய்
தாலோ தாலேலோ

வேறு

கூருமிகல் சாய்த்த வீரா தீரா தார்மார்பா
கூறுமியல் பார்த்துன் மேலே யாரார் பாடாதார்

மேருவரை நாட்டு வாழ்வார் வானா டாள்வார்போல்
வேளையென மீட்டுன் மேலே வீழ்வார் சூழ்வார்பார்

ஆருமிரை பார்த்து நீள்நீ ரூடே தாராமே
யானகழி நீக்கி மேலே நாவா யோடேசேல்

சேருமலை வாய்க்கு நாதா தாலேலோ
தேவர்சிறை மீட்ட தேவா தாலோ தாலேலோ

வேறு

அரைவடமுந் தண்டையும் மின்புரை யரைமணியுங்
கிண்கிணி யுங்கல னணியு மாறா வீறார்சீர்

அறுமுகமுந் தொங்கல் சுமந்தபன் னிருகரமும்
குண்டல முங்குழை யழகும் ஆரார் பாராதார்

விரைபொரு மென்குஞ்சி அலம்பிய புழுதியுமங்
கங்குழை பண்டியு மேலியு மேலே வீழ்வார்பார்
வெகுவிதமுங் கொண்டு தவழ்ந்திடில் அவரவர்தங்
கண்கள் படும்பிழை விளையு மேதே னேகாதே

வரைமணியும் தங்கமும் ஒன்றிய கனபரியங்
கந்தனில் இன்றுகண் வளர வாராய் வாழ்வேநீ
மணிநகையுங் கொண்டு துயின்றிலை விரலமுதங்
கொண்டுகி டந்தனை மதுரமாய்நீ பேசாயோ

திரைபொருதென் செந்தில் வளம்பதி வளரவருங்
கந்தசி வன்பெறு சிறுவா தாலோ தாலேலோ
திசைமுகனுஞ் சங்கரி யுஞ்சது மறையும்இறைஞ்
சும்பரை அம்பிகை சிறுவா தாலோ தாலேலோ

வேறு

அரவுசிறு பிறைஇதழி திரிபதகை பொதிசடிலர்
பாலா வேலாதேர்
அருணவெயில் இரவிசுழல் இமகிரியில் அரிவைபெறு
வாழ்வாய் வாழ்வோனே

குரவருள மகிழஉயர் குருவடிவு தருபெருமை
கோடாய் தாடாளா
குமரகுரு பரமுருக குதலைமொழி தெரியவரை
கூறாய் மாறாதே

இரவலரும் முனிவர்களும் இமையவரும் உனதடிமை
ஆமே ஆமே நீ
எமைமுனியில் ஒருதுணையும் இலையடிமை யடிமை யென
வீழ்வார் சூழ்வார்பார்

பரசமய குலகலக சிவசமய குலதிலக
தாலோ தாலேலோ
பணிலம்உமிழ் மணியையலை யெறியுநகர் வருகடவுள்
தாலோ தாலேலோ

வேறு

பங்கயன் முதலோர் இந்திரன் இமையோர்
பாரோர் ஏனோர்பார்
பண்புடன் உனையே சிந்தையின் இனைவார்
பால்நீ மால்கூறாய்



வெங்கட கரிசூ ழெண்திசை நிறைவார்
வீணாள் காணாதே
மின்பரி புரதாள் பொன்புரை முடிமேல்
வேய்வார் வீறாலே

செங்கனி மணிவாய் தங்கிய நகைதா
தேவா சீறாதே
திண்திறல் முருகா தண்டமிழ் விரகா
சேரார் போரேறே

சங்கரி மருகா சங்கரி சிறுவா
தாலோ தாலேலோ
சந்ததம் இயல்தேர் செந்திலை உடையாய்
தாலோ தாலேலோ

## சப்பாணிப்பருவம்

பரவரிய நவமணி அழுத்துகல னுக்கழகு
பாலித்து வீறு பெற்ற
பன்னிரு புயங்களுங் காமல்நீள் குழைதொறும்
பருவயிர குண்ட லங்கள்

இரவியொளி மட்கநின் றசையாமல் அமுதொழுகு
இந்துமுக மண்ட லத்தில்
எழுதரிய திருநுதற் புண்டரங் குறுவெயர்
விறைக்காச் சிதைந்தி டாமல்

கரகமல மலர்விரல் சிவப்புறா மல்கடக
கங்கணம் ஒலித்தி டாமல்
கழிவண் டலம்புங் கருங்குவளை ஓடைசூழ்
கழிதொ றுங் கானல் தோறுந்

தாரளமுழு மணிநிலவு தருசெந்தில் வேலவா
சப்பாணி கொட்டி யருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டி யருளே.

அண்டர்தந் துயரொழித் தனமென்று கொண்டாடி
ஆவலங் கொட்ட மன்னும்
அயிராணி கலவியமு துண்டனம் எனத்தேவர்
அரசிரு கரங்கள் கொட்டத்

துண்டவெண பிறைபுரை எயிற்றுவெஞ் சூருளந்
துண்ணெனப் பறைகொட் டநீள்
சுருதியந் தணர் இடந் தொறுமங் கலப்பெருந்
தூரியங் கொட்ட முட்டப்

பண்டரு பெருங்கவிப் புலமைக்கு நீசொன்ன
படிதிண்டி மங்கொட் டவெம்
பகைநிசா சரர்வளம் பதிமுழுது நெய்தலம்
பறைகொட்ட வெள்வளை தருந்

தண்தரள மலைகொண்டு கொட்டுநக ராதிபா
சப்பாணி கொட்டி யருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டி யருளே

பௌவமெறி கடலாடை உலகிலொரு வேடுவன்
பறவைக்கு நிறைபு குந்த
பார்த்திவன் பாவையும் இயற்குலச் சிறையும்
பணித்தருள மதுரை புக்குத்

தெவ்வரிடு திருமடத் தெரிசெழிய னுடலுறச்
சென் றுபற் றலும் எவர்க்குந்
தீராத வடவையனல் வெப்புமுது கூனுந்
திருத்தியொரு வாது வென்று

வெவ்வழலில் எழுதியிடும் ஏடும் பெருங்காற்று
விட்டதமி ழேடும் ஒக்க
வேகாம லெதிரே குடக்கேற வெங்கழுவில்
வெய்யசமண் மூகர் ஏறச்

சைவநெறி ஈடேற வருகவுணி யக்குழவி
சப்பாணி கொட்டி யருளே
சமரமுக ரணவீர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டி யருளே.

பைந்தாள் தழைச்சிறைக் கானவா ரணமருவு
பந்தரிடு முல்லை வேலி
பாயுமுட் பணைமருப் பேறுதழு வியுமுடைப்
பாலறா மேனி மடவார்

கொந்தார் குரும்பைஇள வனமுலை முகக்கோடு
குத்தக் குருந்தொ சித்துங்
குறுங்கழைத் துண்டந் தனில்சிறு துளைக்கருவி
குன் றுருக நின்ற ழைக்குஞ்

செந்தா மரைக்கைவிரல் கொடுபுதைத் துஞ்சுருதி
தெரியவிரல் முறையில் விட்டுந்
தேனுவின் பிறகே திரிநிதுங் கவுட்குழி
திறந்துமத மாரி சிந்துந்



தந்தா வளந்தனக் குதவுதிரு மால்மருக
சப்பாணி கொட்டி யருளே
தரளமெறி கரையில்வளை தவழ்செந்தில் வேலவா
சப்பாணி கொட்டி யருளே.

கார்கொண்ட பேரண்ட கூடமோ ரேழுநீ
கற்பிக்கு மந்த்ர சாலை
கற்பதா ருவுநின் புயத்தினுக் கணிமாலை
கட்டவளர் நந்தன வனஞ்

சீர்கொண்ட புருகூத னுந்தேவர் குழுவுநின்
திருநாம மறவா தபேர்
சிகரகன காசலமும் உனதுதிரு வாபரண
சேர்வைசேர் பேழை கடல்நீர்

போர்கொண்ட வேலின் புலால்கழுவு நீரேழு
பொழிலுமத் தனை தீ வமோர்
பொலிவினுட னேநின் கலாபமயில் வையாளி
போய்மீளும் வீதி யெனவே

தார்கொண்ட மணிமார்ப செந்தில்வடி வேலனே
சப்பாணி கொட்டி யருளே
தரளமெறி கரையில்வளை தவழ்செந்தில் வேலவா
சப்பாணி கொட்டி யருளே.

கவளமத வெற்புநிலை உலகுபர வப்ரபைகொள்
கைத்தா மரைக் கடகபூண்
கதிரொளி விரிக்கவளர் சிகையினிடு சுட்டிமிசை
கட்டாணி முத்தொ ளிரவே

பவள இதழ் புத்தமுதம் ஒழுகுமத லைக்குதலை
பற்பாதி சொற்றெ ரியவே
பரிபுரம் ஒலிக்கவரு குறுநகை யெழுப்பியிடு
பைச்சேடன் உச்சி குழிபாய்

உவளகம் அனைத்துமின வரிவளை முழக்கவெடி
யிற்றேபெ ருத்த கயல்போய்
ஒருபுடை குதிக்கவரி யலவனளை யிற்புகுத
உம்பூறு நெட்ட கழிதோய்

தவளமணி முத்தையலை எறியுநக ருக்கதிப
சப்பாணி கொட்டி யருளே
சருவிய புறச்சமய விரதியர் குலக்கலக
சப்பாணி கொட்டி யருளே

வேறு

கருதிய தமனிய தணியரை வடமிடு
கட்டுவ டத்தோடுங்
கழலிடு பரிபுரம் ஒலியேழ மணியுமிழ்
கைக்கட கப்பூணும்

இடுசுட ரொளிபெற மருவிய தளர்நடை
யிட்டும திப்பாக
எழுமதி புரைதிரு முகமலர் குறுவெயர்
இட்டுவ ரத்தாமஞ்

சொருகிய நறுமலர் முகையவிழ் சிகையிடு
சுட்டிநு தற்றாழத்
தொழுதுனை வழிபடும் அடியவர் இளையவர்
சொற்படி தப்பாமற்

குருமணி யலையெறி திருநக ரதிபதி
கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை
கொட்டுக சப்பாணி.

வேறு

வரைபுரை புயமிசை இடுதொடி அணிகலன்
மற்றுள முத்தார
மணிமுடி குழையிடும் இருசிகை யழகெழ
மைக்குவ ளைப்போதின்

விரைசெறி குழலியர் செவிலியர் அவரவர்
மிக்கவி ருப்பானார்
விபுதரு முனிவரும் உனதடி பரவியுன்
வெற்றியு ரைப்பார்சீர்

அரைமணி யுடைமணி கணகண கணவென
அத்திமு கத்தோனும்
அரிபிர மனுமுமை கணவனும் மனமகிழ்
அற்புவி ளைத்தார்பார்

குரைகடல் அலையெறி திருநக ரதிபதி
கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை
கொட்டுக சப்பாணி



வேறு

கந்தத் தகட்டினர விந்தத் தனிக்கடவுள்
கற்பா யெனச்சுருதி நூல்
கண்டித் துரைத்திடவும் இந்தக் கரத்திலுரை
கற்பா லுரைத்தி யேனவே

அந்தப் பொருட்பகுதி அந்தத் தினைப்பகரும்
அப்போ வெறுத்து முனிவாய்
அஞ்சத் திருக்குமயன் அஞ்சச் சிறைக்குளிடும்
அப்பா சிறக்கும் அமலா

பந்தப் பிறப்பொழிய வந்தித் திருக்குமவர்
பற்றாக நிற்கு முதல்வா
பண்டைக் குடத்திலுறு முண்டச் சிறுத்தமுனி
பற்றாசை யுற்று மிகவாழ்

சந்தப் பொருப்பிறைவ செந்திற் பதிக்குமர
சப்பாணி கொட்டி யருளே
சங்கத் தமிழ்ப்புலவ துங்கக் கொடைக்குமர
சப்பாணி கொட்டி யருளே.

முதுமொழி நினைவுதெ ரிந்த நாவலர்
முட்டா துனைப்பு கழவே
முளரியில் முருவியி ருந்த நான்முகன்
முக்கா லுமிச்சை சொலவே

புதுமலர் சிதறிம கிழ்ந்து வானவர்
பொற்றா ளினைப்ப ரவவே
புகலரும் இசைதெரி தும்பு ராதியர்
புக்கா தரித்து வரவே

மதுகரம் இடறிய தொங்கல் மாலிகை
மற்பூத ரத்த சையவே
மணியொளி வயிரம் அலம்பு தோள்வளை
மட்டாய் நெருக்கம் உறவே

சதுமறை முனிவர்கள் தங்கள் நாயக
சப்பாணி கொட்டி யருளே
சரவண பவகுக செந்தில் வேலவ
சப்பாணி கொட்டி யருளே.

## முத்தப்பருவம்

கத்துந் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு

தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்

கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்

முத்தந் தனக்கு விலைஇல்லை
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

வளைக்குந் தமரக் கருங்கடலின்
வளைவாய் உகுத்த மணிமுத்துன்
வடிவேற் கறைபட் டுடல்கறுத்து
மாசு படைத்த மணிமுத்தம்

துளைக்குங் கழையிற் பருமுத்தம்
துளபத் தொடைமால் இதழ்பருகித்
தூற்றுந் திவலை தெறித்தமுத்தம்
சுரக்கும் புயலிற் சொரிமுத்தம்

திளைக்குங் கவன மயிற்சிறையிற்
சிறுதூட் பொதிந்த குறுமுத்தஞ்
செந்நெல் முத்தங் கடைசியர்கால்
தேய்ந்த முத்தஞ் செழுந்தண்தேன்

முளைக்குங் குமுதக் கனிவாயான்
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

கலைப்பால் குறைத்த பிறைமுடிக்குங்
கடவுள் உடலின் விளைபோகங்



கனலி கரத்தில் அளிக்க அந்தக்
கனலி பொறுக்க மாட்டாமல்

மலைப்பால் விளங்குஞ் சரவணத்தில்
வந்து புகுத ஓராறு
மடவார் வயிறு சூலுளைந்து
மைந்தர் அறுவர்ப் பயந்தெடுப்பக்

கொலைப்பால் விளங்கும் பரசுதரன்
குன்றி லவரைக் கொடுசெல்லக்
கூட்டி அணைத்துச் சேரவொரு
கோலம் ஆக்கிக் கவுரிதிரு

முலைப்பால் குடித்த கனிவாயால்
முருகா முத்தம் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

கத்துங் கடலில் நெடும்படவில்
கழியில் கழியில் கழுநீரில்
கானற் கரையில் கரைதிகழுங்
கைதைப் பொதும்பில் சுரும்பினங்கள்

தத்துங் கமலப் பசும்பொகுட்டிற்
சாலிக் குலையில் சாலடியில்
தழைக்குங் கதலி அடிமடலில்
தழைவைத் துழுத முதுகுரம்பைக்

குத்துந் தரங்கப் புனற்கவரில்
குவளைத் தடத்தின் மடைவாயில்
குடக்கூன் சிறுமுட் பணிலமொரு
கோடி கோடி யீற்றுளைந்து

முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முருகா முத்தந் தருகவே
மொழியுஞ் சமயம் அனைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே.

வயலும் செறிந்த கதலிவன
மாடம் செறிந்த கதலிவன
மலர்க்கா வெங்குந் தேனினிரை
மாலை தோறுந் தேனினிரை

புயலுஞ் செறிந்த கனகவெயிற்
புடையே பரந்த கனகவெயில்
பொதும்பர் தோறு மோதிமஞ்செங்
புளினந் தோறு மொதிமஞ்செங்

கயலுஞ் செறிந்த கட்கடையார்
கலவி தரும்போர் கட்கடையார்
கருணை புரியும் அடியாருன்
காதல் புரியும் அடியார்சீர்

முயலும் படிவாழ் திருச்செந்தூர்
முருகா முத்தந் தருகவே
மொழியூஞ் சமயம் அனைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே.

தொழுதுந் துதித்துந் துயரகற்றிச்
சுரருக் கிறையுஞ் சுரருமுடன்
சூழ்ந்த கடம்பா டவியிலுறை
சொக்கக் கடவுள் தனைமூன்று

பொழுதும் பரவி எழுத்துச்சொற்
போலப் பொருளும் புகறியெனப்
புகலு மாறஞ் சிரட்டிதிணைப்
பொருட்சூத் திரத்தின் பொருள்மயங்கா

தெழுதும் பனுவற் பரணன்முதல்
ஏழேழ் பெருமைக் கவிப்புலவர்
இதயங் களிக்க விருப்பமுடன்
இறையோன் பொருட்குப் பொருள்விரித்து

முழுதும் பகர்ந்த கனிவாயான்
முருகா முத்தந் தருகவே
மொழியுஞ் சமயம் அனைத்தினுக்கு
முதல்வா முத்தந் தருகவே.

வேறு

கடுந டைச்சிந் துரம ருப்பின்
கதிர்கொள் முத்துஞ் சரவைநீள்
கடல ளிக்கும் பணில முத்தும்
கழையின் முத்தும் கரடுவான்

உடுமு கட்டம் புயல்க ருக்கொண்
டுமிழு முத்தம் கருகல்தேன்



ஒழுகு பொற்பங் கயம டல்தந்
தொளிரு முத்தந் திருகல்காண்

படுக ரைக்குண் டகழி நத்தின்
பரிய முத்தந் தெரியவே
பரவை யெற்றுந் திரைகொ ழிக்கும்
படியில் முத்தஞ் சிறுமகார்

கொடுப பரப்பும் பதிபு ரக்குங்
குமர முத்தம் தருகவே
குறுமு னிக்குந் தமிழு ரைக்குங்
குழவி முத்தம் தருகவே

பருவ முற்றுங் குடவ யிற்றொண்
பணிலம் மொய்க்குந் துறையெலாம்
பருமு ரட்செங் கயல்கு திக்கும்
பலப டத்தெண் திரைமுநீர்

பொருது குத்துந் திடரனைத்தும்
புறவு மொய்க்கும் புறவுசேர்
புளின வெற்பெங் கணுநி ரைக்கும்
புளின மொய்க்குங் குவளைவாய்

அரும டற்கண் டினமெ னச்சென்
றளிகள் மொய்க்கும் புதியசூல்
அலவன் மொய்க்குங் குழிவ ழிச்சென்
றலைகொ ழிக்குங் கரையெலாங்

குருகு மொய்க்கும் பதிபு ரக்குங்
குமர முத்தம் தருகவே
குறுமு னிக்குந் தமிழு ரைக்குங்
குழவி முத்தம் தருகவே.

வேறு

பையரவின் உச்சிகுழி யப்பொருங் குண்டகட்
படுகடற் பணில முத்தம்
பார்வையா னுஞ்சிறிது பாரோம் இதன்றிப்
பசுங்கழை செடித்த முத்தஞ்

செய்யசிந் தையினுமிது வேணுமென் றொருபொழுது
சிந்தியோ முததி வட்டத்
திரைமுழங் கக்கொழுந் திங்கள்வட் டக்குடைச்
செழுநிழற் சம்ப ராரி

எய்யுமலர் வாளியை எடுத்துத் தெரிந்துநாண்
இறுகப் பிணித்த வல்வில்
ஈன்றகுளிர் முத்தத்தை முத்தமென் றணுகோம்
இதழ்க்கமல முகையு டைக்குந்

துய்யமணி முத்தந் தனைத்தொடேம் உன்னுடைய
துகிரில்விளை முத்த மருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விளை முத்த மருளே.

இறுகல்கரு குதல்முரிவி லட்சுமி புடாயமுள்
ளேறல்புகை யேறல் செம்மண்
ஏறல்வெச் சந்திருகல் மத்தகக் குழிவன்றி
இரவியொளி யிற்க ரத்தல்

மறுவறு தகட்டிலோ ரத்திலுயர் தூக்கத்தின்
மன்னுமா தளைக விர்ப்பூ
மாந்தளிர் முயற்குருதி செவ்வரத் தங்கோப
மருவுமணி வகைய ளிப்பேர்

முறுகல்வளி யேறல்கல் லேறல்சிப் பிப்பத்து
முரிதல்திரு குதல்சி வப்பு
முருந்திற் குருத்துச் செருந்துருவி யிடையாடி
மூரிகுதை வடிவொ துங்கல்

துறுமுகங் கக்கலொளி மட்கல்கர டென்னாத
துகிரில்விளை முத்தம் அருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகில்விளை முத்தம் அருளே

கோதிவரி வண்டுமது கண்டுகுடி கொள்ளுமெங்
குழலுக் குடைந்து விண்ணிற்
குடிகொண்ட கொண்டற் குறுந்துளியின் நித்திலக்
கோவையொரு கால்வி ரும்பேம்

காதிலுறும் வள்ளைமக ரக்குழை கடக்குமெங்
கண்ணுக் குடைந்து தொல்லைக்
கயத்திற் குளித்தசேல் வெண்தரள மென்னிலொரு
காலமுங் கருதி நயவேம்

போதிலுறு பசுமடற் பாளைமென் பூகம்
பொருந்துமெங் கந்த ரத்தைப்
பொருவுறா வேள்வலம் புரியாரம் இன்புறேம்
பொற்றோள் தனக்கு டைந்த



சோதிவேய் முத்தந் தனைத்தொடேம் நின்னுடைய
துகிரில்விளை முத்தம் அருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விளை முத்தம் அருளே.

## வாரனைப்பருவம்

மூரிப் பகட்டு வரிவாளை
முழங்கிக் குதிக்கக் கால்சாய்ந்து
முதிர விளைந்து சடைபின்னி
முடங்கும் பசுங்காய்க் குலைச்செந்நெல்

சேரிக் கருங்கை மள்ளர்குயந்
தீட்டி அரிந்த கொத்தினுக்குத்
தெண்முத் தளப்பச் சிறுகுடிலிற்
சேரக் கொடுபோய் அவர்குவிப்ப

வேரிக் குவளைக் குழியில்வரி
வெண்சங் கினங்கள் ஈற்றுளைந்து
மேட்டில் உகுந்த பருமுத்தை
வெள்ளோ திமந்தன் முட்டையென

வாரிக் குவிக்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

புள்ள மரிந்த கதிர்ச்செந்நெற்
போரிற் பகடு தனைநெருங்கப்
பூட்டி அடித்து வைகளைந்து
போதக் குவித்த பொலிக்குவையை

விள்ள அரிய குடகாற்று
வீசப் பதடி தனைநீக்கி
வெள்ளிக் கிரிபோற் கனகவட
மேரு கிரிபோல் மிகத்தூற்றிக்

கள்ளம் எறியுங் கருங்கடைக்கட்
கடைசி பிரித்த தணிமுத்தைக்
களத்தி லெறிய அம்முத்தைக்
கண்டு குடித்த கட்குவிலை

மள்ளர் அளக்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே

வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

தேட அரிய மணியரைஞாண்
சேர்க்க வருக விரற்காழி
செறிக்க வருக திலத நுதல்
தீட்ட வருக மறுகில்விளை

யாட வருக மடியிலெடுத்
தணைக்க வருக புதுப்பனிநீர்
ஆட்ட வருக நெறித்தமுலை
அமுதம் பருகவருக முத்தஞ்

சூட வருக உடற்புழுதி
துடைக்க வருக ஒருமாற்றஞ்
சொல்ல வருக தள்ளிநடை
தோன்ற வருக சோதிமணி

மாடநெருங்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

இறுகும் அரைஞாண் இனிப்பூட்டேன்
இலங்கு மகர குண்டலத்தை
யெடுத்துக் குழையின் மீதணியேன்
இனியுன் முகத்துக் கேற்கஒரு

சிறுகுந் திலகந் தனைத்தீட்டேன்
திருக்கண் மலர்க்கு மையெழுதேன்
செம்பொற் கமலச் சீறடிக்குச்
சிலம்பு திருத்தேன் நெறித்துவிம்மி

முறுகு முலைப்பால் இனிதூட்டேன்
முகம்பார்த் திருந்து மொழிபகரேன்
முருகா வருக சிவசமய
முதல்வா வருக திரைகொழித்து

மறுகு மலைவாய்க் கரைசேர்ந்த
மழலைச் சிறுவா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.



எள்ளத் தனைவந் துறுபசிக்கும்
இரங்கிப் பரந்து சிறுபண்டி
எக்கிக் குழைந்து மணித்துவர்வாய்
இதழைக் குவித்து விரித்தழுது

துள்ளித் துடித்துப் புடைபெயர்ந்து
தொட்டில் உதைந்து பெருவிரலைச்
சுவைத்து கடைவாய் நீரொழுகத்
தோளின் மகரக் குழைதவழ

மெள்ளத் தவழ்ந்து குறுமூரல்
விளைத்து மடியின் மீதிருந்து
விம்மிப் பொருமி முகம்பார்த்து
வேண்டும் உமையாள் களபமுலை

வள்ளத் தமுதுண் டகமகிழ்ந்த
மழலைச் சிறுவா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

வெண்மைச் சிறைப்புள் ஓதிமங்கள்
விரைக்கே தகையின் மடலெடுத்து
விரும்புங் குழவி யெனமடியின்
மீதே இருத்திக் கோதாட்டித்

திண்மைச் சுரிசங் கினிற்குவளைத்
தேறல் முகந்து பாலூட்டிச்
செழுந்தா மரைநெட் டிதழ்விரித்துச்
சேர்த்துத் துயிற்றித் தாலட்டப்

பெண்மைக் குருகுக் கொருசேவற்
பெரிய குருகு தன்வாயிற்
பெய்யும் இரையைக் கூரலகு
பிளந்து பெட்பின் இனி தளிக்கும்

வண்மைப் புதுமைத் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

ஓடைக் குளிர் தண் துளிப்பனியால்
உடைந்து திரையில் தவழ்ந்தேறி
ஒளிரும் புளினத் திடையொதுங்கி
உறங்குங் கமடம் தனைக்கடந்து

கோடைக் குளிர்காற் றடிக்கஉடல்
கொடுகி நடுங்கி ஊன்கழிந்த
குடக்கூன் பணிலத் துட்புகுந்து
குஞ்சுக் கிரங்கி இரைகொடுக்கும்

பேடைக் குருகுக் கொருசேவற்
பெரிய குருகின் சிறைப்புறத்துப்
பிள்ளைக் குருகு தனையணைத்துப்
பிரச மடற்கே தகைப்பொதும்பின்

வாடைக் கொதுங்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

விண்டு மாவின் கனிதடத்தின்
மீதே வீழக் குருகினங்கள்
வெருவி இரியக் கயல்வெகுண்டு
வெடிபோய் மீள மண்டூகம்

கண்டு பாய வரிவாளை
கழிக்கே பாயக் கழிக்கானற்
கம்புள் வெகுண்டு துண்ணெனக்கட்
கடைதான் விழித்துத் தன்பார்ப்பைக்

கொண்டு போயக் கருவாளைக்
குலைக்கே பாயக் குடக்கனியின்
குறுங்காற் பலவு வேர்சாய்ந்த
குழிக்கே கோடி கோடிவரி

வண்டு பாயுந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

பேரா தரிக்கும் அடியவர் தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா

சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்



பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென் றுனைப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்

வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

வேறு

கலைதெரி புகலி வளமுற மருவு
கவுணிய வருக வருகவே
கருணையின் உரிமை அடியவர் கொடிய
கலிகெட வருக வருகவே

சிலைபொரு புருவ வனிதையர் அறுவர்
திருவுள மகிழ வருகவே
சிறுதுளி வெயர்வு குதிகொள உனது
திருமுக மலர வருகவே

கொலைபுரி விகட மணிமுடி நிருதர்
குலமற வருக வருகவே
குருமணி வயிரம் இருசிகை நெடிய
குழைபொர வருக வருகவே

மலைமகள் கவுரி திருமுலை பருகு
மழவிடை வருக வருகவே
வளையுமிழ் தரளம் அலையெறி நகரில்
வரபதி வருக வருகவே.

அணிநெடு மவுலி எறிசிறு புழுதி
அழகுடன் ஒழுக வருகவே
அடியிடு மளவில் அரைமணி முரலும்
அடியொலி பெருக வருகவே

பணிவிடை புரிய வருமட மகளிர்
பரவினர் புகழ வருகவே
பலபல முனிவர் அனைவரும் உனது
பதமலர் பரவ வருகவே

பிணிமுக முதுகில் அரியணை யழகு
பெறவரு முருக வருகவே

பிறைபொரு சடிலர் தமதிட மருவு
பிடிபெறு களிறு வருகவே

மணியிதழ் ஒழுகும் அமுதுகு குதலை
மழவிடை வருக வருகவே
வளையுமிழ் தரளம் அலையெறி நகரில்
வரபதி வருக வருகவே.

## அம்புலிப் பருவம்

கலையால் நிரம்பாத கலையுண் டுனக்குநிறை
கலையுண் டிவன் தனக்குக்
களங்கமரு குறமான் உனக்குண்டு குறமான்
கருத்துண் டிவன் தனக்குத்

தொலையாத கணமுண் டுனக்குமங் கலகணத்
தொகையுண் டிவன் தனக்குத்
துளியமுத முண்டுனக் கிவனுக்கு மாருத
சொல்லமுதம் உண்டுனக்குக்

கொலையா டராவழிப் பகையுண்டு கடுவிடங்
கொப்புளிக் குங்கடசெவிக்
கோளர வைக்கொத்தி யெறியுமே காரமிக்
குமரனுக் குண்டுகண்டாய்

அலையாழி சூழ்திருச் செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி யாடவாவே.

மாமோக மண்டலம் அகற்றி அறி வென்னுமுழு
மண்டலத் தைத்தொடுத்து
வடவைமுக மண்டலத் தழலா லுருக்கியினன்
மண்டலத் தூடுபுக்குச்

சோமோத யக்கிரண மண்டலத் தமுதத்
துளித்திவலை பருகியுடலைச்
சோதிமண் டலமென விளக்குமலர் இவனுடைய
துய்யமுக மண்டலத்தை

ஏமோ கருத்துற் இருத்திப் பெரும்பரத்
தெல்லைமண் டலமெய்தலாம்
என்றுகொண் டிவன்மண் டலச்சக்ர நிலையா
றெழுத்திலீ டேறுவருனக்



காமோ பெருக்கமென் செந்தில்வடி வேலனுடன்
அம்புலி யாடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலீ யாடவாவே.

முதிரும் இசை வரிவண் டலம்புகம லாலய
முகிழ்க்குமிரு நாலிதழ்க்குள்
முக்கோண நடுவிலொரு வட்டச் கழிக்குள் மலர்
முகமண் டலத்துவெயிலால்

எதிருமிருள் அந்தகா ரப்படலை தள்ளிவந்
தெழும் இரவி மண்டலத்தில்
இன்புற்று நீவந் தொளிக்குமிடம் அந்தவான்
இரவிமண் டலமுடுக்கள்

உதிருமடு செருவிலிவன் வேலேறு பட்டவர்
உகந்தபெரு வெளியாகையால்
ஒள்ளமு துகுத்தபதி னாறுகலை கொள்ளுமுன்
உடலினுங் குறைபடாதோ

அதிருமக ராழிசூழ் செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி ஆடவாவே.

வெறியார் இலைத்தொடைத் தக்கனழல் வேள்வியை
வெகுண்டுபகல் பல்லுகுத்து
வெள்ளிவிழி யைக்கெடுத் தயிரா வதப்பாகன்
வேறுருக் கொடுபறக்கச்

செறியா டகத்தகட் டிதழ்முளரி நான்முகன்
சென்னியைத் திருகிவாணி
செய்யதுண் டம்துண்டம் ஆக்கியத் தக்கன்
சிரத்தையொரு வழிப்படுத்திப்

பொறியார் அழற்கடவுள் கைத்தலம் அறுத்துவிண்
புலவர்முப் பத்துமுவர்
போனவழி ஒருவர்போ காமலுன் னுடலையும்
புழுதியில் தேய்த்ததெல்லாம்

அறியாத தல்லநி செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி ஆடவாவே.

விடமொழுகு துளைமுள் எயிற்றுவன் கட்செவி
விரிக்கும் பணாடவியறா
மென்பொறி உடற்பெரும் பகுவாய் அராவடிவை
வெம்பசி எடுத்துவெம்பிக்

குடதிசைக் கோடையைப் பருகிக் குணக்கெழுங்
கொண்டலை அருந்திவாடைக்
கொழுந்தையுந் தென்றலையும் அள்ளிக் குடித்துக்
கொழுங்கதிரை உண்டதினியுன்

இடமொழிய வேறோர் இலக்கில்லை நீயதற்
கெதிர்நிற்க வல்லையல்லை
இவனுடன் கூடிவிளை யாடிநீ யிங்கே
இருக்கலாம் இங்குவந்தால்

அடல்புனையு மயிலுண் டுனக்குதவி ஆகையால்
அம்புலி ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி ஆடவாவே.

பண்டுபோல் இன்னமுதம் இன்னங் கடைந்திடப்
பழையமந் தரமில்லையோ
படர்கடற் குண்டகழி அளறாக வற்றியிப்
பாரினில் திடரானதோ

விண்டலத் தமரர்களும் அமரேச னுஞ்சேர
வீடிநீ டந்தகார
மேனியெழு பகிரண்ட கூடம்வெளி யானதோ
விடமொழுகு நெட்டெயிற்று

மண்டுவா சுகிதுண்ட மானதோ இன்னமொரு
வாலிக்கு வாலில்லையோ
மதியிலா மதியமே இவன்நினைந் தாலெந்த
வகைசெலா தாகையானீ

அண்டர்நா யகனெங்கள் செந்தில்வடி வேலனுடன்
அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலி ஆடவாவே.

வட்டமா கத்துள்வெளி வடிவுகொள லாலென்று
மானைத் தரித்திடுகையால்
மந்தா கினித்தரங் கத்துவளம் எய்தலால்
மன்னுங் கணஞ்சூழ்தலால்



இட்டமொடு பேரிரவில் வீறுபெற லாலுலகில்
எவருந் துதித்திடுதலால்
இரவிகண் ணுறுதலால் இடபத்தி லேறலால்
ஏமமால் வரையெய்தலால்

முட்டமறை வேள்விக் குரித்தாகை யால்வெய்ய
மூரியர வுக்குடைதலால்
முக்கண்ணுமை பங்கனா ரொக்குநீ யென் றுதிரு
முகமலர்ந் துனையழைத்தால்

அட்டபோ கம்பெறுவை செந்தில்வடி வேலனுடன்
அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே.

காதலால் எறிதிரைக் கடல்மகளிர் சிறுமகார்
கரையிற் குவித்தமுத்தும்
கருவாய் வலம்புரி யுமிழ்ந்தமணி முத்துமுட்
கண்டல்மடல் விண்டசுண்ணத்

தாதலர இளவாடை கொடுவருங் கானல்வெண்
சங்குநொந் தீற்றுளைந்து
தனியே உகுத்தபரு முத்தமுந் தன்னிலே
சதகோடி நிலவெறிக்கும்

ஈசதலா லொருசிறிதும் இரவில்லை எவருக்கும்
இரவில்லை நீயும்இங்கே
ஏகினா லுனதுடற் கறைதுடைத் திடுதலாம்
என்பதற் கையமில்லை

ஆதலால் நீதிபுனை செந்தில்வடி வேலனுடன்
அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே.

கடியவளி ஏறியுந் தழைச்சிறைக் கூருகிர்க்
கருடவா கனனும் இகல்கூர்
கட்டைமுன் அரைநாள நெட்டிதழ் உடுத்தபொற்
கமலயோ னியுமெழுந்து

கொடியவெங் கொலைபுரி வராகமென ஒருவனெழு
குவலயம் இடந்துதேடக்
குறித்தொருவன் எகினமாய் அண்டபகிரண்டமுங்
கொழுதிக் குடைந்துதேட

முடியஇது காறுமவர் அறிவுறா வகைகின்ற
முழுமுதற் கடவுள் அடியும்
முடியுநீ கண்டனை எனக்கருதி இன்றுதிரு
முகமலர்ந் துனை அழைத்தால்

அடியவரை வாழ்வித்த செந்தில்வடி வேலனுடன்
அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே.

பெரியமா கத்துள்நீ வருவைஇவன் வஞ்சகம்
பேகமா கந்துள்வாரான்
பெருகநீ வேலையிற் புகுவாய் இவன்பார்
பிளக்கவோ வேலைவிட்டான்

உரியமா குணவரையில் உறுவைநீ இவனன்
புறாதகுண வரையேயுறான்
உடலிலே முழுமறு உனக்குண் டிவன் தனக்
கொருமறுவும் இல்லைமீளக்

கரியமா முகிலிலே மறைவைநீ இவன்நெடுங்
கரியமா முகிலின் மறையான்
கருதிநீ இவையெலாம் உணரிவன் பெருமையைக்
கண்டுநீ அங்கிராதே

அரியமா தவன்எங்கள் செந்தில்வடி வேலனுடன்
அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடேன மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே.

பரியநிழல் தன்னைச் சுளித்துவெயி லொடுபொருது
பாதசங் கிலீயை நூறிப்
பாரிசா தத்தருவை இடுகுள கெனக்கவுட்
பகுவாய் புகக்குதட்டித்

தரியலர் நகர்ப்புறத் தெயிலிடு கபாடந்
தனைத்தூள் படுத்தியவர்பொன்
தருணமணி முடியிடறி முறைமுறை அழைக்குந்
தழைசெவிப் பிறைமருப்புச்

சொரியுமத தாரைக் குறுங்கட பெருங்கொலைத்
துடியடிப் புகரொருத்தல்
துங்கவேள் இவனுடைய முன்றிற் புறத்தில்
துளைக்கர நிமிர்த்துநிற்கும்



அரியகரு நாகமென வெருவல்கொல் இவனுடன்
அம்புலீ ஆடவாவே
அருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன்
அம்புலீ ஆடவாவே.

## சிறுபறைப்பருவம்

பொருவாகை சூடுமர வக்கொடிக் குருகுலப்
பூபாலர் ஏறும் அந்தப்
பூபால னுன்கிளைய துணைவர் நூற் றுவரும்
பொருபதினெட் டக்குரோணி

ஒருவராய்மை சொற்றபடை வீரருஞ் செருவினில்
உருத்தெழலும் நீதியைவர்
உடனாக் நின் றுபற் குனன்மணித் தேரினுக்
குள்ளசா ரதியாகியம்

மருவார்கள் தானையிற் பட்டவர்த் தனர்மகுட
வர்த்தனர் அடங்கலும்போய்
மயங்கவொரு நாள்விசைய னுக்குவிசை யம்பெருக
மண்ணேழும் உண்டுமிழ்ந்த

திருவாய் வலம்புரி முழக்குதிரு மால்மருக
சிறுபறை முழக்கியருளே
செருவில்எதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

முருந்தாரு மணிமுறுவல் நெய்தல்நில மகளிரிள
முகிழ்முடலை தனக்குடைந்து
முளரிமுகை நீரிற் குளித்துநின் றொருதாளின்
முற்றிய தவம்புரியவெங்

கருந்தாரை நெட்டிலைப் புகர்வே லெனப்பொருங்
கட்கடைக் குள்ளுடைந்து
காவிமலர் பங்கப் படக்கருங் குழல்கண்டு
கரியமுகில் உடல்வெளுத்துப்

பொருந்தாமல் ஓடியந் தரசாரி யாயொரு
பொருப்பேற வளமையேறும்
புகலேற வாழுந் திருச்செந்தி லாயுனது
பொற்றாள் வணக்கமுற்றுத்

திருந்தார்கள் நெஞ்சம் பெரும்பறை முழக்கநீ
சிறுபறை முழக்கியருளே
வெருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

கங்கையணி யுஞ்சடையில் வைத்தகுழ விப்பிறைக்
கடவுளா லயமனைத்துங்
கங்குற் கருங்கடல் கழிந்தவை கறையிற்
கலித்தவால் வளைமுழக்கும்

பங்கய மலர்ப்பொகுட் டிதழ்வாய் துளிக்கும்
பசுந்தேறல் உண்டுமெள்ளப்
பலகோடி சஞ்சரீ கப்படலை பெடையொடு
படிந்துபல கால்முழக்கும்

வெங்கய முடக்கும் புழைக்கர நிமிர்த்துவெளி
மேகநீ ரைக்குடித்து
வீதிவாய் நின்றுபிளி றித்தின முழக்கும்வெறி
வெண்திரைக் குண்டகழியிற்

செங்கயல் முழக்குந் திருச்செந்தில் வேலனே
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

காவான பாரிசா தத்தருக் குலநிழற்
படவுள்தெரு வீதிதோறுங்
கடிமணப் புதுமங் கலத்தொனி முழக்கமுகை
கட்டவிழ்த் திதழுடைக்கும்

பூவாரி லைத்தொடையல் அளகா புரேசன்
புரந்தொறுங் குளிறுமுரசம்
பொம்மென முழக்கமன் மதனுடைய பல்லியப்
பொங்குதெண் திரைமுழக்கப்

பாவாணர் மங்கலக் கவிவாழி பாடிப்
பரிந்துதிண் டிமமுழக்கப்
பரவரிய திருவிழா என்றுபல பல்லியம்
பட்டினந் தொறுமுழக்கத்

தேவாதி தேவருயர் சதுமறை முழக்கநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.



வரைவாய் முழக்குங் கடாயானை வெங்கூன்
மருப்பில்விளை முத்துமிளவேய்
மணிமுத்தும் அடுபாலை வளசுரத் திற்கரு
வராகத்தின் முத்துமண்டல்

உரைவாய் முழக்கும் பெரும்புறவி லுந்திநத்
துமிழுமணி முத்துமள்ளர்
ஒளியறா மருதவே லிச்செங்நெல் கன்னல்தரும்
ஒளிமுத்தும் ஓங்குநெய்தற்

கரைவாய் முழக்குமுட் கூனல்வெண் பணிலம்
கடுஞ்சூல் உளைந்துகான்ற
கதிர்முத்தும் ஒக்கக் கொழித்துவரு பொருநைபாய்
கழிதொறுங் கயல்குதிக்கத்

திரைவாய் முழக்குந் திருச்செந்தில் வேலனே
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

முனைவாளை வடிவேலை வடுவைவெங் கடுவையிதழ்
முளரியைப் பிணையைமதவேள்
மோகவா ளியையடு சகோரத்தை வென்றுகுழை
முட்டிமீ ளுங்கண்மடவார்

நினைவாளை வாள் முறுவ லாடியிள முலையானை
நேர்நேர் நிறுத்திநெய்தல்
நீடுமள காடவி வனத்திற் பிணித்துவெண்
நித்தில வடந்தெரிந்து

புனைவாளை நாள்முடி விளம்பிநடு பாளைமென்
போதிலுறை வாளை யொப்புப்
பொலிவாளை நின்றுகளை களைவாளை நாடிவிளை
போங்கழி கடந்துமெள்ளச்

சினைவாளை பாயுந் திருச்செந்தில் வெலனே
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

அறந்தரு புரந்தரா தியருலகில் அரமகளிர்
ஆடுமணி யூசல்சிற்றில்
அம்மனை கழங்குபல செறியுந் தடஞ்சாரல்
அருவிபாய் பரங்கிரியுமுட்

புறந்தரு புனிற்றுவெள் வளைகடல் திரைதொறும்
பொருதசீ ரலைவாயுமென்
போதுகமழ் திருவாவி னன்குடியும் அரியமறை
புகலுமே ரகமுமினிமைக்

குறந்தரு கொடிச்சியர் பெருங்குரவை முறைகுலவு
குன்றுதோ றாடலுந்தண்
கொண்மூ முழங்குவது கண்டின மெனக்கரட
குஞ்சரம் பிளிறுமரவம்

சிறந்தபழ முதிர்சோலை மலையும் புரந்தநீ
சிறுபறை முழக்கியருளே
செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழக்கியருளே.

எழுமிரவி மட்கஒளி தருமணி யழுத்துமுடி
இமையவர் மகிழ்ச்சிபெறவே
இருகுழை பிடித்தவிழி அரமகளிர் சுற்றிநடம்
இதுவென நடித்துவரவே

வழுவறு தமிழ்ப்பனுவல் முறைமுறை யுரைத்துவெகு
வரகவிஞர் உட்குழையவே
மகபதியு மிக்கமுனி வரர்கணமும் இச்சையுடன்
வழியடிமை செப்பியிடவே

பொழுதுதொறும் ஒக்கவிதி முறையுனை அருச்சனை செய்
புனிதசிவ விப்ரருடனே
புகலரிய பத்தசனம் அரகர வெனக்குலவு
புரவலர் விருப்பமுறவே

செழுமறை முழக்கவரு முருககும ரக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே
திரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே.

தவனனிர தப்புரவிடி வலமுறையில் வட்டமிடு
தருணவட வெற்பசையவே
தமரதிமி ரத்துமிதம் எறியுமக ரப்பெரிய
சலதியாலி யற்றயிடவே

புவனமுழு தொக்கமணி முடிமிசை இருத்துபல
பொறியுரகன் அச்சமுறவே
புணரியிடை வற்றமொகுமொகுமொகுவெ னப்பருகு
புயலுருமு வெட்கியிடவே



பவனனு மிகுத்தகடை யுகமுடி வெனப்பெருமை
பரவியடி யிற்பணியவே
படகநிபி டத்துழனி அசுரர்வெரு விக்கரிய
பரியவரை யிற்புகுதவே

சிவனருள் மதிக்கவரு முருககும ரக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே
திரளுமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே.

சகரமக ரச்சலதி உலகுதனில் இப்பொழுது
சருவிய புறச்சமயநூல்
தலையழிய முத்திதரு சிவசமய முத்தர்பெறு
தவநெறி தழைத்துவரவே

அகரஉக ரத்தில்விளை பொருளடைவு பத்தியுறும்
அடியவர் தமக்கருளவே
அமரருல கத்தவரும் எவருமரு விப்பரவி
அடியிணை தனைப்பணியவே

பகரவு நினைத்திடவும் அரிதுனது சொற்பெருமை
பரகதி அளிக்குமெனவே
பலபல முனித்தலைவர் அனைவரும் உனக்கினிய
பணிவிடை தனைப்புரியவே

சிகரபர வெற்பில்வரு முருககும ரக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே
திரளுமணி முத்தியலை யெறியுநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே.

## சிற்றிப்பருவம்

பொன்னின் மணக்கும் புதுபுனலிற்
புடைசூழ் பணில முத்தெடுத்துப்
புறக்கோட் டகமுண் டாக்கிவலம்
புரியைத் தூதைத் கலமமைத்துக்

கன்னி மணக்குங் கழனியிற்செங்
கமலப் பொகுட்டு முகையுடைத்துக்
கக்குஞ் செழுந்தேன் உலையேற்றிக்
கழைநித் திலவல் சியைப்புகட்டிப்

பன்னி மணக்கும் புதுப்பொழிலில்
பலபூப் பறித்க் கறிதிருத்திப்

பரிந்து சிறுசோ றடுமருமை
பாராய் அயிரா வதப்பாகன்

சென்னி மணக்குஞ் சேவடியால்
சிறேயேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

தையல் மடவார் இழைத்தவண்டல்
தன்னை அழிக்கும் அதுக்கல்ல
தரளம் உறுத்தி உனதுபொற்பூந்
தண்டைத் திருத்தாள் தடியாதோ

துய்ய தவளப் பிறைமுடிக்குஞ்
சோதி யெடுத்து முகத்தணைத்துத்
தோளில் இருத்தும் பொழுதுமணித்
தோளிற் புழுதி தோயாதோ

வையம் அனைத்தும் ஈன்றெடுத்தும்
வயது முதிரா மடப்பாவை
மடியில் இருத்தி முலையூட்டி
வதனத் தணைக்கில் உன்கழற்காற்

செய்ய சிறுதூள் செறியாதோ
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

தௌவுங் கரட மடையுடைக்குந்
தந்திப் பகடு பிடிபட்டுத்
தருவும் அமுதம் இருநிதியுந்
தனியே கெள்ளை போகாமல்

எவ்வம் உறவிட் புலத்தமரர்
ஏக்கம் உறாமல் அயிராணி
இடுமங் கலநாண் அழியாமல்
இமையோர் இறைஞ்சும் அரமகளிர்

பௌவம் எறியுந் துயராழிப்
பழுவத் தழுந்தி முழுகாமல்
பரக்குஞ் சுருதித் துறைவேள்வி
பழுதா காமல் பரவரிய



தெவ்வர் புரத்தை அடுஞ்சிறுவா
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

ஆடுங் கோடிதேர் எழுபுரவி
அருணன் நடத்தும் அகலிடத்தை
அடைவே படைத்தும் படைத்தபடி
அளித்துந் துடைத்தும் முத்தொழிலுங்

கூடும் பெருமை உனக்குளது
கூடார் புரத்தைக் குழாம்பறிக்கக்
கொள்ளுங் கருத்து நின்கருத்துக்
கொங்கை சுமந்து கொடிமருங்குல்

வாடுங் கலக விழிமடவார்
மலர்க்கை சிவப்ப மணற்கொழித்து
வண்டல் இழைத்த மனையழிக்கை
வன்போ சுரரும் மகவானுந்

தேடுங் கமலத் திருத்தாளால்
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

புற்றில் அரவந் தனைப்புனைந்த
புனித ருடனே வீற்றிருக்கப்
பொலியுந் திகிரி வாளகிரிப்
பொருப்பை வளர்த்துச் சுவராக்கிச்

சுற்றில் வளர்ந்த வரையனை த்துஞ்
சுவர்க்கால் ஆக்கிச் சுடரிரவி
தோன்றி மறையுஞ் சுருப்பைவெளி
தொறுந்தோ ரணக்கால் எனநாட்டி

மற்றில் உவமை யெனுங்கனக
வரையைத் துளைத்து வழியாக்கி
மாக முகிலை விதானமென
வகுத்து மடவா ருடன்கூடிச்

சிற்றில் இழைத்த பெருமாட்டி
சிறுவா சிற்றில் திதையேலே
திரைமுத் தெறடியுந் திருச்செந்தூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே.

மிஞ்சுங் கனக மணித்தொட்டில்
மீதே இருத்தித் தாலுரைத்து
வேண்டும் படிசப் பாணிகொட்டி
விருப்பாய் முத்தந் தனைக்கேட்டு

நெஞ்சு மகிழ வரவழைத்து
நிலவை வருவாய் எனப்புகன்று
நித்தல் உனது பணிவிடையின்
நிலைமை குலையேம் நீயறிவாய்

பிஞ்சு மதியின் ஒருமருப்புப்
பிறங்கும் இருதாட் கவுட்சுவடு
பிழியுங் கரட மும்மதத்துப்
பெருத்த நால்வாய்த் திருத்தமிகும்

அஞ்சு கரக்குஞ் சரத்துணையே
அடியேம் சிற்றில்அழியேலே
அலைமுத் தெறியுங் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

துன்று திரைக்குண் டகழ்மடுவில்
சூரன் ஒளிக்கப் பகைநிருதர்
தொல்லைப் பதியும் அவரிருந்து
துய்த்த வளமுந் தூளாக்கி

வென்று செருவிற் பொருதழித்தாய்
வேதா விதித்த விதிப்படியை
விலக்கி வெகுண்டு மீண்டளித்தாய்
வேண்டும் அடியார் வினையொழித்தாய்

கன்றும் அமணர் கழுவேறக்
காழிப் பதியில் வந்துதித்துக்
கள்ளப் பரச மயக்குறும்பர்
கலகம் ஒழித்துக் கட்டழித்தாய்

அன்று தொடுத்துன் வழியடிமை
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

களிப்பார் உனைக்கண் டவரவரே
கண்ணு மனமும் வேறாகி
கள்ளன் இவனை நம்முடைய
காதல் வலையிற் கட்டுமென



விளிப்பார் விரகம் அங்குரித்த
வேடப் பலிப்பைப் பாரென்று
மெள்ள நகைப்பார் இவருடனே
விளையா டாமல் வேறாகித்

துளிப்பார் திரைக்குண் டகழுடுத்த
தொல்லைப் பதியும் பகிரண்டத்
தொகையுந் தொகையில் பல்லுயிருந்
தோற்றம் ஒடுக்கந் துணையாய்நின்

றளிப்பாய் அழிக்கை கடனலக்காண்
அடியேஞ் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

கூவிப் பரிந்து முலைத்தாயர்
கூட்டி யெடுத்து முலையூட்டிக்
குடுமி திருத்தி மலர்ச்சொருகிக்
கோலம் புனைந்து கொண்டாடிப்

பூவிற் பொலிந்த திருமேனிப்
புனிதா வண்டற் புறத்தெயிலில்
புகுந்தால் இனியுன் னுடலேறப்
புழுதி இறைத்துப் போகாமல்

காவிக் குறுந்தோட் டிகழ்நெருக்குங்
கண்ணி தனைக்கொண் டோச்சிவளைக்
கானல் தரளத் தொடையாலுன்
கைத்தா மரையைக் கட்டிவிடோம்

ஆவித் துணையே வழியடிமை
அடியேம் சிற்றில்அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில்அழியேலே.

பொய்யா வளமை தரும்பெருமைப்
பொருநைத் துறையில் நீராட்டிப்
பூட்டுங் கலன்கள் வகைவகையே
பூட்டி எடுத்து முலையூட்டி

மெய்யால் அணைத்து மறுகுதனில்
விட்டார் அவரை வெறாமலுனை
வெறுக்க வேறு கடனுமுண்டோ
விரும்பிப் பரலைக் கொழித்தெடுத்துக்

கையால் இழைத்த சிற்றிலைநின்
காலால் அழிக்கை கடனலகாண்
காப்பான் அழிக்கத் தொடங்கிலெங்கள்
கவலை எவரோ டினியுரைப்போம்

ஐயா உனது வழிடியமை
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறடியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

## சிறுதேர்ப்பருவம்

தண்தே னுடைந்தொழுகு மருமாலை நீள்முடி
தரிக்குஞ் சதக்கி ருதுசெந்
தருணமணி ஆசனத் தெறமா தலிசெழுந்
தமனியத் தேரு ருட்டப்

பண்டே பழப்பகை நிசாசரர்கள் உட்கப்
பரப்புநிலை கெட்ட தென்று
பரவுங்கு பெரன்வட பூதரம் பொருபுட்
பகத்தேர் உருட்ட வீறு

கொண்டே உதித்தசெங் கதிரா யிரக்கடவுள்
குண்டலந் திருவில் வீசக்
கோலப்ர பாமண் டலச்சுடர் துலக்கமுட்
கோலெடுத் தருண அருணன்

திண்டே ருருட்டவளர் செந்தில்வாழ் கந்தனே
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே.

வாராரும் இளமுலை முடைத்துகிற் பொதுவியர்
மனைக்குட் புகுந்து மெல்ல
வைத்தவெண் தயிருண்டு குடமுருட் டிப்பெருக
வாரிவெண் ணெயை யுருட்டிப்

பாராமல் உண்டுசெங் கனிவாய் துடைத்துப்
பருஞ்சகடு தன்னை யன்று
பரிபுரத் தாளால் உருட்டிவிளை யாடுமொரு
பச்சைமால் மருக பத்தி

ஆராமை கூருமடி யுவர்பழ வினைக்குறும்
பறவே உருட்டி மேலை



அண்டபகி ரண்டமும் அனைத்துலுக முஞ்செல்லும்
ஆணையா ழியையு ருட்டிச்

சேராநி சாசரர் சிரக்குவ டுருட்டநீ
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே.

கொந்தவிழ் தடஞ்சாரல் மலயாமல் வரைநெடுங்
குடுமியில் வளர்ந்த தெய்வக்
கொழுந்தென்ற லங்கன்றும் ஆடகப் பசுநிறங்
கொண்டுவிளை யும்ப ருவரைச்

சந்தன நெடுந்தரு மலர்பொதும் பருமியல்
தண்பொருநை மாந தியுமத்
தண்பொருநை பாயவிளை சாலிநெற் குலையுமச்
சாலிநெற் குலைப டர்ந்து

முந்தவிளை யும்பரு முளிக்கரும் பும்பரு
முளிக்கரும் பைக்க றித்து
முலைநெறிக் கும்புனிற் றெருமைவா யுஞ்சிறுவர்
மொழியும் பரந்த வழியுஞ்

செந்தமிழ் மணக்குந் திருச்செந்தில் வேலனே
சிறுதேர் உ்ருட்டி யருளே்
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே.

பெருமையுடன் நீள்தலத் திருவர்பர சமயமும்
பேதம் பிதற்றி விட்ட
பிறைமருப் புக்கரும் பகடுமுந் நீரிற்
பிழைத்துநீள் கரையி லேறப்

பொருவருஞ் சந்நிதியி லெய்துவது போல்மணி
புடைக்குமிள நீரி ரண்டு
புணரியின் மிதந்துசந் நிதியேற விந்நாட்
பொருந்தவிளை யாடி முன்னாள்

இருதிரையு னிற்சந் தனக்கொடி மரத்தினை
இழுத்துவரும் எருமை ஏற்றை
எப்பொழுது முதியகற் பகடாக உலகத்தில்
யாவருங் காண வென்று

திருவுள மகிழ்ந்துதிரு விளையாடல் கண்டநீ
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே.

ஆதிநூல் மரபாகிஅதனுறும் பொருள் ஆகி
அல்லவை யனைத்தும் ஆகி
அளவினுக் களவாகி அணுவினுக் கணுவாய்
அனைத்துயிரும் ஆகி அதனின்

சாதியின் பிரிவாகி வெவ்வேறு சமயங்கள்
தானாகி நானாகி மெய்ச்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
தன்னொளி லீலை யாகி

ஓதிய தனைத்தினும் அடங்காமல் வேறாகி
உள்ளும் புறமும் ஆகி
ஒளியிலொளி யாகிமற் றிரவுபக லற்றவிடம்
ஒப்புவித் தெனையி ருத்தித்

தீதினை அகற்றிநின் திருவருள் புரிந்தவா
சிறுதேர் உருட்டி யருளே
சேவற் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே.

வேறு

புலமை வித்தக மயூரவா கனவள்ளி
போகபூ டணசூரன்

சலமொழித்தவ நிசாசரர் குலாந்தக
சடாட்சர காங்கேய

குலவு கொற்றவ குமாரதண் டீரவ
குருபர புருகூதன்

உலக ளித்தவா செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக் சிறுதேரே

உரக நாயகன் ப.ீறலை பொடிபட
உருட்டுக சிறுதேரே.

வீதி மங்கல விழாவணி விரும்பிய
விண்ணவர் அரமாதர்

சோதி மங்கல கலசகுங் குமமுலை
தோய்ந்தகங் களிகூரச்



சாதி மங்கல வலம்புரி இனமெனத்
தழைச்சிறை யோடுபுல்லி

ஓதி மந்துயில் செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக சிறுதேரே

உரக நாயகன் ப.ீறலை பொடிபட
உருட்டுக சிறுதேரே.

விரைத்த டம்பொழில் வரைமணி ஆசனத்
திருந்துவிண் ணவர்போற்றி

வரைத்த டம்புரை மழவிடை எம்பிரான்
மணமகிழ்ந் திடவாக்கால்

இரைத்த பல்கலைப் பரப்பொந் திரட்டிமற்
றிதுபொரு ளெனமேனாள்

உரைத்த தேசிகா செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக சிறுதேரே

உரக நாயகன் ப.ீறலை பொடிபட
உருட்டுக சிறுதேரே.

மாது நாயகம் எனவடி வுடைசீர்
வள்ளிநா யகமண்ணில்

ஈது நாயகம் எனவுனை யன்றிவே
றெண்ணநா யகம்உண்டோ

போது நாயகன் புணரியின் நாயகன்
பொருப்புநா யகன்போற்றி

ஓது நாயக செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக சிறுதேரே

உரக நாயகன் ப.ீறலை பொடிபட
உருட்டுக சிறுதேரே.

தக்க பூசனைச் சிவமறை யோர்பெருந்
தானநா யகர் தம்பேர்

திக்க னைத்தினும் எண்முதல் இமையோர்
தேவர்தந் திருமேனி

மிக்க மாலிகை தருபவர் அடியவர்
மின்னனார் சமயத்தோர்

ஒக்க வாழ்கெனச் செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக சிறுதேரே

உரக நாயகன் ப.ீறலை பொடிபட
உருட்டுக சிறுதேரே.

திருச்சிற்றம்பலம்

## அன்பர் தியாகராஜா

எனது மதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய அன்பர் தியாகராஜா அவர்களின் மறைவை கேள்வியுற்று நான் மிக்க வேதனை அடைந்தேன்.

அமரர் தியாகராஜா அவர்களுடன் ஏறத்தாழ இருபது வருடங்களாக நான் பழகியிருக்கின்றேன். ஒரு வழக்கறிஞராக இருந்தபோதும் மிகவும் சிறந்த பண்பாளராக அவர் விளங்கினார்.

எனக்கு பிரச்சனைகள் அல்லது சங்கடங்கள் நேரும் போதெல்லாம் தியாகராஜா அவர்களிடமே நான் செல்வதுண்டு. தெளிவான சிந்தனையோடு சிறந்த ஆலோசனைகளையும் வழி காட்டல்களையும் அவர் தந்திருக்கின்றார்.

உயர்ந்த குணங்கள் நிரம்பியவர். அன்பான சுபாவம் மிக்கவர். பிறர் துன்பம் கண்டு கசியும் மனம் நிறைந்தவர். எந்த நேரமும், யாருடனும் இன்முகத்தோடு பேசுபவர்.

நன்கு கற்ற ஒரு கல்விமானாக இருந்த நிலையிலும் செருக்கு இல்லாதவராகத் திகழ்ந்தார். உதவிக்கரம் நீட்டுவதில் ஒரு உடன்பிறந்த சகோதரன் போல விளங்கினார்.

அவரது இழப்பு எனக்கு பேரதிர்ச்சியைத் தந்தது. உற்றதோழராகவும், பண்பு மிக்க பெரியவராகவும், இலகுவில் அணுகக்கூடிய கனவானாகவும் இருந்த அவர் மறைவை எண்ணி நான் மிகுந்த வேதனை அடைகின்றேன். கடந்த காலங்களில் அவர் எனக்கு தந்த ஆலோசனைகள், செய்த உதவிகள் என்பன மறக்க இயலாதவை. எனது மனமார்ந்த நன்றிக்கு உரியவை.

அவரது மறைவு எனது கைகளையே இழந்தது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. அத்தகைய நல்லெண்ணம் மிக்க அன்பர்களைக் காண்பது இக்காலத்தில் மிகவும் அரிதான விடயம்.

அமரர் தியாகராஜா அவர்களின் ஆத்மசாந்திக்காக நானும் எனது குடும்பத்தினரும் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கின்றோம். அந்த உத்தமரின் பிரிவால் துயருறும் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அநுதாபங்கள் உரியன.

ஸ்ரீ வசந்த மஹால்
313, செட்டியார் தெரு
கொழும்பு - 11

அன்புடன்
கந்தசாமிபிள்ளை
சோமசுந்தரம்

## நன்றி

எமது குலமுதல்வர் அமரர் கனகசபை தியாகராஜா அவர்கள் 1993.11.19 வெள்ளிக்கிழமை கந்தசஷ்டித் தினத்தன்று பேராவியற்கை எய்திய ஞான்று, எமது ஆறாத் துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், வெளி நாடுகளிலிருந்து ஆறுதல் செய்தி அனுப்பியோருக்கும், 1993.11.20 சனிக்கிழமை இறுதி ஊர்வலத்திற் கலந்து கொண்டவர்களுக்கும், 1993.12.05 ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிற் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், பல வகையிலும் எமக்கு உதவி செய்தோருக்கும் எமது உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

121, பெனடிக் மாவத்தை,
கொழும்பு 13.

மனைவி, மக்கள்
மருமக்கள்.

## Acknowledgement

*We sincerely thank all relations and friends who consoled us at the demise of our beloved husband and father, late Kanagasabai Thiagarajah on 19.11.93, those who attended his late ritual ceremony on 20.11.93, and those who attended his Athmasanthi Prayers on 05.12.93*

**Wife and Children**

மெய்கண்டான் அச்சகம் லிமிட்டெட்